பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 5 செவ்வாய்க்கிழமை (21.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 299

## அரசியல் தீர்வுக்கும் அபிவிருத்திக்கும்

# அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# இணைந்த தனித்தனிக் குழுக்கள்

### அரசியல் தீர்வுக் குழு உறுப்பினர்களை ஜனாதிபதி நியமித்துவிட்டார்

கொழும்பு, செப்ரெம்பர் 21

**இனப்பிரச்சினைக்கும், அபிவிருத்தி மற்றும் மீள்குடியமர்வு, புனர்வாழ்வுக்கும் அரசாங்கமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தத்தமக்குத் தனித்தனி குழுக்களை நிறுவ உள்ளன. அந்தக் குழுக்கள் இணைந்து குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து இணக்கத்துக்கு வரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.**

இந்த வகையில் அரசாங்கம் அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆராயும் குழு உறுப்பினர்களையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்தி சம்பந்தமாக ஆராயும் குழுவின் உறுப்பினர்களையும் நியமித்துவிட்டன.

எனினும் இரு தரப்புகளின் உறுப்பினர்களின் பெயர் விவரங்களை அவை வெளியிட மறுக்கின்றன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு ஒப்புதல் வேண்டாம்

### ஜனாதிபதியிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, செப்.21

இரண்டாவது இராணுவ நீதிமன்றும் சரத் பொன்சேகா எம்.பிக்கு விதித்துள்ள தண்டனைக்கு ஒப்புதல் வழங்கவேண்டாமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## மயான பூமியான நந்திக்கடலில் போர் எச்சங்கள்;

## மாலைவேளை பார்த்துத் திரும்பினர் ஆணைக்குழு உறுப்பினர்கள்

முல்லைத்தீவு, செப். 21

கடந்த வருடம் ஏப்ரல், மே மாதங்களில் இறுதி யுத்தம் இடம்பெற்ற - ஆயிரக்கணக்கானோரைக் கொன்றொழித்த- முள்ளிவாய்க்கால், நந்திக்கடல், வலைஞர்மடம் வட்டுவாகல் பகுதிகளுக்கு நேற்று மாலைப்பொழுதில் சென்று பார்வையிட்டுள்ளனர் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவரும் மற்றும் உறுப்பினர்களும்.

கோரமான யுத்தம் நடைபெற்ற அந்தப் பகுதிகள் எங்கும் மயான பூமியாகக் காட்சியளித்தது என்றும் போர் எச்சங்களும் பல்வேறு வகையான வாகனங்கள், பொதுமக்களின் உடைமைகள் போன்றவை சேதமடைந்த - எரிந்த நிலையில் சிதறிக் காணப்பட்டன என்றும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக நந்திக்கடல் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு படைத்தரப்பில் எந்த வித

(24ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக்கொடியுடன் படகில் தப்பிச்சென்ற வேளை கடற்படையினர் எம்மீது தாக்குதல் நடத்தினர்

### சம்பவத்தில் 8 பேர் பலியாகினர் என்று பெண்மணி சாட்சியம்

முல்லைத்தீவு, செப். 21

கோரமான யுத்தப் பிடிக்குள் சிக்கித் தவித்த மக்கள் தப்பிச்செல்ல முடியாமல் நாளாந்தம் செத்துமடிந்து கொண்டிருந்தனர். நாங்களும் எத்தனையோ தடவை தப்பிச் செல்ல முயன்றும் அது வெற்றியளிக்கவில்லை.

இறுதியில் கடல்வழியாகத் தப்பிச்செல்லத் தீர்மானித் தோம். அதன்படி வெள்ளைக் கொடியுடன் ஒரு படகில் 20 பேர் அதிகாலை வேளை புறப்பட்டுச்சென்றோம். பயணம் தொடர்ந்தது; திடீரென எங்கள் படகுமீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் எம்முடன் பயணித்த எட்டுப் பேர் துடிதுடித்து மாண்டனர். உயிரிழந்தவர்களில் எனது சகோதரியும் ஒருவர்.

- இவ்வாறு நேற்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளித்த முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த

(24ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளோரில் 440 பேர் இம் மாத இறுதியில் விடுவிப்பு

கொழும்பு, செப்.21

புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளவர்களுள் 440பேர் எதிர்வரும் 30ஆம் திகதி தமது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று புனர்வாழ்வு நிலையங்களுக்குப் பொறுப்பான ஆணையாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

வவுனியா கலாசார மண்டபத்தில் வைபவ

(24ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் 200 இற்கும் மேற்பட்டோர் கூடியபோதும் நால்வர் மட்டுமே நேற்று சாட்சியம் அளித்தனர்

### காலதாமதமே இதற்குக் காரணம்

முல்லைத்தீவு, செப். 21

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினரிடம் தமது காணாமற்போன, பிடித்துச்செல்லப்பட்ட உறவுகளை மீட்டுத்தருமாறு 200 இற்கு மேற்பட்ட மக்கள் நேற்று கண்ணீரும் கம்பலையுமாகக் கேட்டுக் கொண்டனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு நேற்று முற்பகல் 11.30 மணிக்கு முல்லைத் தீவுச் செயலகத்தில் இடம்பெற்றது. தாமதத்துக்கான காரணம் தெரியவில்லை

முற்பகல் 10.30 மணிக்கு அமர்வு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததால்

(24ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண சபைத் தேர்தலை ஜனவரி இறுதிக்குள் நடத்த முடிவு

### பட்ஜெட்டுக்கு பின்னே உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, செப். 21

வட மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் 2011 ஜனவரி மாத இறுதிக்குள் நடைபெறும். வரவு-செலவுத் திட்டத்துக்குப் பின்னர் வட மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்படும் என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு தீர்மானித்துள்ளதெனவும் இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு

(24ஆம் பக்கம் பார்க்க)

புதிய முதலீட்டுவாய்ப்பு! புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை!
யாழ். மக்களுக்கான.....
www.cse.lk
அனுமதி இலவசம்
"பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பான கருத்தரங்கு"
இடம்:- பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம்:- 2010 புரட்டாதி 22ம் திகதி புதன்கிழமை
நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00மணிவரை
மேலதிக தகவல்களுக்கு:
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணக்கிளை
398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 1455/021 567 2444
CSE COLOMBO STOCK EXCHANGE
பங்குச்சந்தை பற்றிய தகவல்களை தெரிந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய பயிற்சிநெறி ஆரம்பம்

"CERTIFIED MEDICAL ASSISTANT"(An US Curriculum)

A pathway for Nursing/Pharmacist/MLT career

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு02)

CMA US Curriculum

LH Lava Hospitals



After A/L

MBBS வைத்திய விரிவுரையாளர்களால் பிரபல வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.

KU City Guilds Qualified

Quality Assured

Knowledge Universe®

Malaysian College of Business and IT

Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 31ஆம் நாள்

*எமது சக ஊழியரான*

**க.சண்முகநாதன்**

*மற்றும்*

**க.விஜயரத்தினம்**

*ஆகியோரின் தந்தையாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் நாமும் கலந்துகொள்கின்றோம்.*

வட பிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
(103629) யாழ்ப்பாணம்.


## English Classes

- ★ ஆங்கிலத்தை மிகமிக ஆரம்பத்தில் இருந்து கற்க விரும்புபவர்கள்.
- ★ பேச்சு ஆங்கிலத்தை மட்டும் கற்க விரும்புபவர்கள்.
- ★ ஆங்கில இலக்கணம் கற்க விரும்புபவர்கள்.
- ★ தரம் 6 தொடக்கம் O/L, A/L வரையான மாணவர்களுக்கான பாடப் புத்தகத்தைப் பயில விரும்பும் மாணவர்கள்
- ★ இலகுவான முறையில் IELTS இணை Audio & Video Visuals உடன் கற்க விரும்புபவர்கள் என அனைவரும் தனியாகவோ / குழுவாகவோ உங்கள் வீட்டிலேயே பயில அழையுங்கள் 0776654347, 0770475739 அல்லது வாருங்கள் EEC

No.91/A, k.k.S. Road, Kokuvil Junction, Kokuvil.

By. R.Guna (B.A.) Dip.in.Eng.


## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 ★ 09 ★ 1947



இறப்பு 22 ★ 09 ★ 1999

**அமரர் சின்னத்தம்பி கந்தசாமி**

திதி: திரயோதசி (21.09.2010)

எம்மை எல்லாம் ஆளாக்கிய - தெய்வமே
இடையில் பரிதவிக்கவிட்டுச் சென்றதேனோ
என்றும் உங்கள் நினைவோடு வாடும்
உங்கள் உறவுகள்

மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
எருவன் கொடிகாமம். (103631)


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

**மீண்டும் யாழில்**

*21.09.2010 முதல் 27.09.2010 வரை*

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாத விடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=

கமல் றூறிஸ்ற் இன்

392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 071 9315664, 0777569205

(சி 570643)


## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், செப். 21

வண்ணார் பண்ணை கேசாவில்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் உள்ள வீதியில் மின்சாரம் தாக்கி நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி ஆலய முன் வீதியில் யாழ்.நகர மாபிள் கடையொன்றின் களஞ்சியசாலையொன்று உள்ளது. அக்களஞ்சியசாலையில் ஹட்டனைச் சேர்ந்த மைக்கல் பால்ராஜ் (வயது 27) என்பவர் களஞ்சியப் பொறுப்பாளராக பணிபுரிந்து வந்தார்.

மேற்படி களஞ்சிய சாலையின் வாயிலில் மின்குமிழ் பொருத்த முற்பட்டவேளை அதனூடாக வந்த மின்சாரம் தாக்கியதில் குறித்த இளைஞன் உயிரிழந்தார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-16-78)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரை ஜனாதிபதி நியமித்துள்ளார்

யாழ்ப்பாணம், செப். 21

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் யாப்பின் 5ஆம் பிரிவின் சரத்து ஒன்றின் பிரகாரம் அமைப்பாளராக நியமிக்கும் அதிகாரத்தின் கீழ் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கஜன் இராமநாதனை யாழ்.மாவட்ட அமைப்பாளராக இவ்வருடம் ஒகஸ்ட் 13 ஆம் திகதி முதல் நியமித்திருக்கிறார். மாவட்ட அமைப்பாளர்களை நியமிக்கும் தகுதியும் பொறுப்பும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருக்கு மட்டுமே உண்டென்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-ஜ)

## நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவைக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், செப். 21

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளதாக கலாசாரப் பேரவை தலைவரும் நல்லூர் பிரதேச செயலருமான பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். இதில் நல்லூர் பிரதேச கலைஞர்களையும் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஒ-16)

## தவறிவிட்டது

பிரதான வீதி, கண்டாவளை என்னும் முகவரியைச் சேர்ந்த தவராசா தவநீசன் என்பவரது தேசிய அ.அட்டை (800555183V) சிவராசா துஷ்யந்தினி என்பவரது தேசிய அ.அட்டை (815215362V), தாலிக்கொடி (5 பவுண்) ஒருதொகைப் பணம் என்பன 17.09.2010 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா செல்லும்போது மீசாலைக்கும் பரந்தனுக்குமிடையில் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் அல்லது தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

மீசாலை தெற்கு,
மீசாலை, சாவகச்சேரி.
077 4805107, 0773282570


## வீடு விற்பனைக்கு

ஸ்ரீ வெங்கடேஸ்வரன் றோட் கொனிக்கா லாப் முன்பாக 1 1/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779810186
0244903587

## கணக்காளர் தேவை

*இலத்திரனியல் பொருள்களை விற்பனை செய்யும் கடையொன்றுக்கு முன் அனுபவம் உள்ள கணக்காளர் தேவை.*

*தொடர்பு:*

**Midea Electro Mart**

No.1-1,1-H *ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

021 222 4566, 021 222 1646


*'மெனிக்பாம்' நலன்புரி நிலையத்தில் இருந்து*

## வட்டுவாகலில் மீள் குடியமர 81 குடும்பங்கள் நேற்று வந்தன

முல்லைத்தீவு, செப்.21

முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வட்டுவாகல் கிராமத்தைச் சேர்ந்த 81 குடும்பங்கள் நேற்று மீளக் குடியமர அழைத்து வரப்பட்டனர்.

வவுனியா 'மெனிக்பாம்' நலன்புரி நிலையத்தில் இருந்து வாகனங்களில் அழைத்துவரப்பட்ட இவர்கள் நேற்று வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இன்று இவர்கள் தமது வீடுகளைப் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - ஒருவார காலத்தில் விசுவமடு கிழக்கிலும் மக்கள் மீள் குடியமர்த்தப்படவிருக்கின்றனர்.

அந்தப்பிரதேசம் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு மீள் குடியமர்வுக்காக செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

## தெய்வத்தின் அரவணைப்பில் ஆண்டு ஒன்று

அன்னை மண்ணில்: 08.03.1947



இறைவன் அடியில்: 21.09.2009

அமரர் பொன்னுத்துரை

**யோகேஸ்வரராஜா**

(முன்னாள் உப தலைவர், சாயி நிலையம் - கொக்குவில், முன்னாள் தொழில்நுட்பவியலாளர் - இலங்கை மின்சாரசபை, சிமெந்துக் கூட்டுத்தாபனம், கல்வித் திணைக்களம்)

*இல.12, இராமுப்பிள்ளை வீதி. கொக்குவில் மேற்கு.*

திதி: திருதியை10.10.2010

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### *லோகநாதன் ஜெய்க்காந் (ரகு)*



யாழ்ப்பாணம், பெரியகடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் ஜெய்க்காந் (ரகு) 08.09.2010 அன்று சவுதியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லோகநாதன் - குணநிதி தம்பதியினரின் அன்பு மகனும், மாணிக்கவாசகர் - கமலாதேவி தம்பதியரின் மருமகனும், ஜெயச்சித்திராவின் அன்புக் கணவரும், வேனுஜா, சிந்துஜன், பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி செந்தில்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயா (மானிப்பாய்), அகிலா (வவுனியா), சுசிகலா, சுரேஷ்குமார் (வாசன்), ரஜனிக்காந், ரஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தனுஷ்காந்தன், தனுசிகா, தர்ஷாயினி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி (முன் லேன்),
காளிகோயிலடி மானிப்பாய். (103629)

தகவல்:
ஐ.ஜெயா (மைத்துனர்).

### *திருமதி இரத்தினமணி சின்னத்துரை*

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினமணி - சின்னத்துரை நேற்று (20.09.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாக்குட்டி - அன்னலட்சுமி தம்பதியரின் அருமைப் புதல்வியும் அமரர் சின்னத்துரையின் அன்பு மனைவியும் ஸ்ரீதரனின் தாயும் கிருபாகரியின் மாமியும் வேதசொருபி, திரியம்பகா, பிரியசங்கர் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சுப்பிரமணியத்தின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (21.09.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊரியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி.ஸ்ரீதரன் (மகன்)

(சி-570652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அதிர்ச்சி வைத்தியம் இப்போது

உண்மை இறப்பதில்லை. உண்மையை எவராலும் அழித்துவிடவும் முடியாது. அதனை ஒளித்து மறைத்து வைத்துக் கொள்ளவும் இயலாது. அவ்வாறு ஒரு சில காலத்துக்கு மறைக்க முயன்றாலும் அது ஏதோ வகையில், ஒரு நாள் வெளிப்படும்; வெளிப்படுத்தப்படும். இது உலக நியதி.

வன்னியில் நடைபெற்று முடிந்த போரின் கடைசிக் காலப்பகுதியில், பொதுமக்களைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கம் பாதுகாப்பு வலயங்களை அறிவித்தது.

கடந்த வருடம் (2009 ஆம் ஆண்டு) ஜனவரி மாதம் 21 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் நான்கு கிராமங்களை உள்ளடக்கிய, பரந்தன் - முல்லைத்தீவு வீதியின் 25ஆம் கிலோமீற்றரில் இருந்து 32ஆம் கிலோமீற்றர் வரையான 7 கிலோ மீற்றர் நீளமான பிரதேசத்தில் அவ்வீதியின் வடக்குப் பக்கமாக உள்ள 4 கிலோ மீற்றர் தூரமான பிரதேசத்தை இராணுவம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியது. மக்களை அங்கு சென்று தங்குமாறு கேட்டுக்கொண்டது.

அதன்பின்னர் சென்றவருடம் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி புதிதாக வட்டுவாகல் முதல் புதுமாத்தளன் வரையான பகுதியும் பாதுகாப்பு வலயமாகச் சேர்க்கப்பட்டது.

அந்தப் பகுதிகளில் சென்று தங்கினால், பாதுகாப்பாக இருக்கலாம், உயிரைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையுடன் மக்கள் எல்லோரும் ஒன்று குவிந்தனர். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பு எதிர்மறையாகிப் போயிற்று. அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பிச் சென்றவர்களில் ஆயிரக்கணக்கனோர் துடிதுடித்து மாண்டனர். நாளாந்தம் 300 முதல் 600 பொதுமக்கள் மரணமாகினர் என்று இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு வலயத்தில் இருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல முயற்சித்தபோதும், அதற்கு முன்னர் பாதுகாப்பு வலயத்தில் தங்கியிருந்த வேளையிலும் குறிப்பாகப் புதுமாத்தளன் பகுதியில் பொஸ்பரஸ் குண்டுகள், கொத்துக் குண்டுகள் வீசியதால் ஆயிரக்கணக் கான மக்கள் இறந்தனர் என்று அப்போது ஊடகங்கள் தக வல் வெளியிட்டன.

ஆனால், அவை யாவும் கட்டுக்கதைகள், அரசு மீது களங்கம் கற்பிப்பதற்கெனக் கட்டவிழ்த்துவிடப்பட்ட பச்சைப் பொய்கள் என்று பாதுகாப்புத் தரப்பு, அரசாங்கத் தரப்பு அடி யோடு மறுத்தது. அதன்பொருட்டு பல மறுத்தான் அறிக் கைகளையும் வெளியிட்டது.

தமது உயிர்களைக் காப்பாற்றுவதற்காக, அரசு அறிவித்த முகாம்களுக்கு வந்து சேர்ந்தவர்களில் பலர், பொஸ் பரஸ் மற்றும் கொத்துக்குண்டுகளுக்கு மக்கள் இரையான காட்சிகளைக் கண்டிருந்தபோதிலும், அவற்றை வெளியே சொல்லப் பயந்தனர். பேரிரகசியம் போன்று மறைத்தனர். மொத்தத்தில் போரின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர் என்பது எந்தவகையிலும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால், உண்மை இப்போது வெளிவந்துவிட்டது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதிவேட்டில் கறுப்பு வெள்ளையில் எழுதப்பட்டுவிட்டது.

பூநகரி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையில் கண்கண்டசாட்சி ஒருவர் பொதுமக்களுக்கு உண்டான இழப்பை வெளிப்படுத்தி உள்ளார்.

அவர் சொன்னது யாவும் கட்டுக்கதை, சுத்தப் பொய் என்று அரச தரப்பு அறிக்கை வெளியிடும் என எதிர்பார்க்கலாம்.

போரின்போது விடுதலைப் புலிகளையே கொன்றோம். அவர்கள் தங்கியிருந்த பிரதேசங்கள் மீதே தரையிலிருந்தும் சரி, வானத்தில் இருந்தும் சரி குண்டுகளையும் எறிகணைகளையும் வீசினோம் என்றும் அரசாங்கம் இரண்டொரு நாளில் அறிக்கை விடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கையின் மாண்புமிகு ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை, உரை நிகழ்த்த இருக்கும் வேளையில் -

வன்னியில் நடைபெற்ற போரில், உலகளாவிய ரீதியில் தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளையும், கொத் துக் குண்டுகளையும் மக்கள் தங்கியிருந்த புது மாத்தளன் பகுதியில் வீசி தமிழ்மக்களை அழித்தொழித்த தான பதிவுகள் பகிரங்கமாக அரசுக்கு நிச்சயம் ஒவ்வாமையைத் தரப்போகிறது.

இலங்கையில் போர்க்குற்றங்கள் நடைபெறவில்லை என்று நிலைநாட்டுவதற்காக -

போர் நடவடிக்கைகள் குறித்துப் பொறுப்புக் கூறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு ஆலோசனை கூறும் நிபுணர் குழுவின் நியமனத்தை ஆட்சேபித்தும் எதிர்த்தும் -

ஐ.நாவுடன் முட்டிமோதும் விதத்தில் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தை சுற்றி வளைத்ததும், அமைச்சர் ஒருவர் உண்ணாவிரத 'நாடகம்' நடத்தியதும் கடந்த சில மாதங்களில் நிறைவேற்றப்பட்ட நிலையில் -

கொத்துக்குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகளை வீசி, தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்ற சாட்சியம் அரசுக்கு அதிர்ச்சி வைத்தியமாக அமையும், அனலாகச் சுடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக நடைபெறவுள்ள

# தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்ப்பாணத்தில் டிசெம்பர் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய பாதுகாப்பு தின நிகழ்வின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ள இருக்கிறார்.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தை நினைவு கூர்ந்து அரசால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள தேசியப் பாதுகாப்பு தினத்தை ஒட்டிய நிகழ்வு முதல்முறையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பங்குபற்றவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்கு வருகை தர இருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கவனிப்பதற்காகவே கடந்த வாரம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். (ஒ-ஐ-7)

# தேசிய கல்வி நிறுவக ஆசிரியப் பயிற்சி நேர்முகத் தேர்வு 25, 26 ஆம் திகதிகளில்

## அழைப்புக் கடிதங்களை 22, 23 இல் பெறலாம்

யாழ்ப்பாணம், செப். 21

பட்டதாரிகள் அல்லாத, பயிற்றப்படாத ஆசிரிய உதவியாளர்களை ஆசிரிய பயிற்சி நெறிக்கு ஆசிரிய பயிலுநர்களாக சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும்.

தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய வலயங்களுக்கு 25 ஆம் திகதியும் -

வடமராட்சி, தென்மராட்சி ஆகிய வலயங்களுக்கு 26 ஆம் திகதியும் - நேர்முகத் தேர்வு காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும்.

இந்த நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் நாளையும் நாளை மறுதினமும் கல்வியிற் கல்லூரிக்கு சகல ஆவணங்களுடன் வருகை தந்து அழைப்புக் கடிதங்களைப் பெறுமாறு கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோரின் விவரமான பெயர்ப்பட்டியலை உதயன் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ஒ- ஐ)

## நாகர் கோயிலுக்கு மின்விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 21

நாகர் கோயிலுக்கான மின் விநியோகத்திட்டமொன்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நாகர் கோயிலில் பொதுக்கூட்டமொன்றும் இடம்பெற்றது. இதில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் மற்றும் மின்சார சபையின் உயரதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(த-236-314-318)

# நிறைகுறைவான பாண் விற்பனையா? சட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாக நேரிடும்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்.மாவட்டத்தில் நிறைகுறைவான பாண் விற்பனை செய்யப்படுவது திடீர் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக இந்தப் பரிசோதனைகள் நடைபெறவுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் உள்ள பல வெதுப்பகங்களில் நிறுவைகள், அளவைகள் பரிசோதகரால் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நிறைகுறைவான பாண்களை விற்பனை செய்த வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார். (ஒ)

# வன்னி யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் யுவன்சங்கர் ராஜாக்குக் கிடைத்த 'ஈ மெயில்'

சென்னை, செப். 21

பிரபல தென்னிந்திய இசை அமைப்பாளரான இளைய ராஜாவின் புதல்வரான இசை அமைப்பாளர் யுவன் சங்கர்ராஜ் தமிழ்நாடு தொலைக் காட்சி ஒன்றில் அளித்த நேர்காணலில் இலங்கையின் வடக்கில் இடம் பெற்ற போரின் இறுதிவேளை தமக்கு வந்த ' ஈ மெயில்' செய்தி ஒன்றைப் பற்றி வெளிப்படுத்தி உள்ளார்.

இசைப் பயணத்தில் உங்களை உணர்ச்சிவசப்படுத்திய சம்பவம் எதையாவது குறிப்பிடமுடியுமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த யுவன் சங்கர்ராஜ் கூறியதாவது:-

இலங்கையின் வடக்கில் போர் தீவிரமடைந்திருந்த கடைசி நாள்களில் 14 வயது உடைய இளைஞர் ஒருவர் ' ஈ மெயில்' செய்தி ஒன்றை அனுப்பி இருந்தார். உங்கள் இசையில் பாட களை நான் அதிகம் விரும்புகிறேன். நாளைக்கு நான் உயிருடன் இருப் பேனோ தெரியாது, தயவு செய்து எனக்குப் பதில் அனுப்புங்கள். என்று அவர் கூறியிருந்தார்.

நான் உடனடியாகவே அவருக்குப் பதில் அனுப்பினேன். ஆனால் அவரிடம் இருந்து இன்னமும் பதில் கிடைக்கவில்லை என்று கூறினார் யுவன் சங்கர் ராஜ். (ப)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 06 | 22.09.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | : சதுர்த்தசி பி.ப.01.08 வரை |
| நட்சத்திரம் | : சதயம் காலை 7.40 வரை |
| சுபநேரம் | : 04.32-06.02 வரை |
| ராகுகாலம் | : 12.02-01.32 வரை |

# போலி நாணயத்தாளின் புழக்கம் யாழ்ப்பாணத்தில் மிகவும் குறைவு

## பொதுமக்கள் மத்தியிலான விழிப்புணர்வே காரணம்

யாழ்ப்பாணம், செப். 21

போலி நாணயத் தாளின் புழக்கம் யாழ்ப்பாணத்தில் ஒப்பீட்டளவில் குறைவடைந்து வருவதாகவும் இருந்தபோதும் அது முற்றுமுழுதாக இல்லாமல் போய் விடவில்லை எனவும் இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய பிரதிப் பணிப்பாளர் அ.சிறிதரன் தெரிவித்தார்.

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வியாபார நடவடிக்கைகளுக்காக பெரும்பாலானவர்கள் படையெடுக்கத் தொடங்கினர். இதன் பின்னர் கடந்த நான்கு அல்லது ஐந்து மாதங்களாக போலி நாணயத்தாளின் புழக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. இது தொடர்பாக வங்கிகளும் பல தகவல்களை எமக்குத் தெரிவித்திருந்தன.

இதன்பின்னர் தற்போது ஆரம்பத்தில் இருந்த அளவினை விட ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளன. இருந்தபோதும் அதன் விநியோகம் முற்றுமுழுதாக இல்லாமல் போய்விடவில்லை.

பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு காரணமாகவே இது குறைவடைந்து உள்ளது. இதற்கு போலி நாணயத்தாள் தொடர்பாக மக்களுக்கு பாடசாலைமாணவர்களுக்கு, வங்கியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் அடுத்த மாதமளவில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த- 15)

# றோட்டறக்ட் கழகத்தின் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினால் நடத்தபடவிருக்கும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் விண்ணப்பப்படிவங்களை இல.177, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ரமணன் ஸ்போட்ஸ் வியாபார நிலையத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து நாளை புதன்கிழமைக்கு முன்னர் அவற்றை ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (த-23)

# அதிபர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 21

கல்வியின் பண்புசார் தரத்தை உறுதிப்படுத்தல் தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் 23 ஆம் மற்றும் 24ஆம், 25 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வகை III பாடசாலை அதிபர்களுக்கான இச் செயலமர்வில் அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-16)

# மகாஜனா நடத்தும் பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 21

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு விஞ்ஞான மன்றத்தினால் நடத்தப்படும் கணித, விஞ்ஞான பொதுஅறிவுப் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள், பரீட்சை நிலையம் என்பன ஏற்கனவே பாடசாலைகளுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் எனவே விண்ணப்பித்த பாடசாலைப் பரீட்சார்த்திகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.அனந்தசயனன் கேட்டுள்ளார். (த-15)

# வெளிவாரி மருந்தாளர் விவரம் திரட்டல்

மருந்தாளர் பரீட்சைக்கு வெளிவாரியாகத் தோற்றி சித்தியடைந்து இலங்கை மருத்துவ சபையின் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றவர்கள் தம்மை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் மருந்தகங்களில் வேலையைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே சம்பந்தப்பட்டவர்களின் விவரங்கள் திரட்டப்படுவதாகவும் தகுதியானவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தமது பணி மனையில் பதிவுசெய்து கொள்ளுமாறு பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சம்பியன்ஸ் லீக் இருபது:20 போட்டி

# றோயல் சலஞ்சர்ஸ் அணியை போராடி வென்றது மும்பை

டேர்பன், செப். 21

சம்பியன்ஸ் லீக் இருபது:20 தொடரின் பரபரப்பான லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி, பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. பெங்களூர் அணியின் டிராவிட், கோஹ்லி ஆகியோரின் போராட்டம் வீணானது.

தென்னாபிரிக்காவில், 2ஆவது சம்பியன்ஸ் லீக் இருபது:20 கிரிக்கெட் தொடர் நடந்து வருகிறது. இதில் டேர்பனில் நேற்றுமுன்தினம் நடந்த தொடரின் 15ஆவது லீக் போட்டியில், 'பி' பிரிவில் உள்ள இந்திய அணிகளான மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் சச்சின், துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தலைவர் சச்சின் (11) ஏமாற்றமளித்தார். அடுத்து வந்த அம்பாதி ராயுடு (3), டுமினி (10) ஆகியோர் நிலைக்கவில்லை.

விக்கெட்டுக்கள் ஒருபுறம் சரிந்தாலும், மறுமுனையில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆரம்ப வீரர் ஷிகர் தவான், 37 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் உட்பட 41 ஓட்டங்களை எடுத்து நம்பிக்கை அளித்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அதிரடி வீரர் பொலார்ட் ஓட்டம் எதுவும் பெறாமல் வெளியேறி ஏமாற்றினார்.

பின்னர் இணைந்த சௌரவ் திவாரி, பிராவோ ஜோடி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பெங்களூர் அணியின் பந்துவீச்சை எளிதாகச் சமாளித்த இந்த ஜோடி, 6ஆவது விக்கெட்டுக்கு 64 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது, 17 பந்துகளில் 2 சிக்ஸர், 3 பவுண்டரிகள் உட்பட 29 ஓட்டங்களை எடுத்த பிராவோ (29) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஹர்பஜன் (14) ஓரளவுக்குக் கைகொடுத்தார்.

மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது. திவாரி (38) ஆட்டமிழக்காமல் இருந்தார். பெங்களூர் அணியின் சார்பில் ஸ்டைன் 3, கலிஸ், பிரவீன் குமார், வினய் குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

எட்டக்கூடிய இலக்கை நோக்கி விரட்டிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு ஆரம்ப வீரரான கலிஸ் (15) ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்த றொபின் உத்தப்பா (6), ரோஸ் டெய்லர் (9) ஆகிய இருவரும் பிராவோவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினர்.



மறுமுனையில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய டிராவிட் அரைச்சதமடித்து அசத்தினார். அடுத்துக் களமிறங்கிய கேமிரான் ஒயிட் (7), ஹர்பஜனின் சுழலில் ஆட்டமிழந்தார். பின்னர் டிராவிட், விராத் கோஹ்லி ஆகியோர் இணைந்து போராடினர்கள். மும்பை அணியின் பந்துவீச்சை எளிதாகச் சமாளித்த இந்த ஜோடி, ஓட்டமழை பொழிந்தது.

பெங்களூர் அணியின் வெற்றிக்கு இறுதி ஓவரில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த ஓவரை சகீர் கான் வீசினார். முதல் பந்தில் கோஹ்லி ஒரு ஓட்டத்தை எடுத்தார். இரண்டாவது பந்தை எதிர்கொண்ட டிராவிட் ஒரு ஓட்டத்தை எடுக்க, போட்டியில் விறுவிறுப்பு அதிகமானது. மூன்றாவது பந்தை கோஹ்லி பவுண்டரி அடிக்க, 3 பந்தில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆனால் 4 ஆவது பந்தில் கோஹ்லி ஓட்டம் எதையும் பெறாமல் ஏமாற்றினார். 5ஆவது பந்தில் கோஹ்லி மீண்டும் பவுண்டரி அடிக்க, ஒரு பந்தில் 3 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. கடைசிப் பந்தை கோஹ்லி மேலே தூக்கி அடிக்க, அதனை விக்கெட் காப்பாளர் அம்பாதி ராயுடு அருமையாகப் பிடியெடுத்தார். இதனால் பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து, 163 ஓட்டங்களை எடுத்து, 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது. மும்பை அணியின் சார்பில் பிராவோ 2, சகீர் கான், அகமது, ஹர்பஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இன்று நடக்கவுள்ள லயன்ஸ், பெங்களூர் அணிகளுக்கு இடையிலான போட்டியில், பெங்களூர் அணி வெற்றி பெறும் பட்சத்தில், ஓட்டஎண்ணிக்கையின் அடிப்படையில் அரையிறுதிக்குச் செல்லும் அணி நிர்ணயிக்கப்படும். பெங்களூர் அணி தோல்வியடைந்தால், லயன்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறிவிடும். மும்பை, பெங்களூர் அணிகள் போட்டியிலிருந்து வெளியேறவேண்டிவரும்.




### உலக குத்துச்சண்டை போட்டி:

## 5ஆவது முறையாக சம்பியனானார் இந்திய வீராங்கனை மேரி கோம்

பிரிட்ஜ்டவுன், செப்.21

பெண்கள் உலக குத்துச்சண்டை போட்டியில் இந்திய வீராங்கனை மேரி கோம் தொடர்ந்து 5ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

6ஆவது பெண்கள் உலக குத்துச்சண்டை சம்பியன் ஷிப் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள பிரிட்ஜ்டவுனில் நடந்தது. இதில் 48 கிலோ உடல் எடைப் பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான மேரிகோம், ருமேனியாவின் ஸ்டெலுதாடுதாவை இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவு எதிர்கொண்டார்.

இதில் தொடக்கத்தில் மேரி கோமுக்கு சவால் அளித்த, ஸ்டெலுதா முதல் சுற்றில் 4-3 என்ற புள்ளி கணக்கில் முன்னிலை வகித்தார்.

இதன் பின்னர் சுதாகரித்துக் கொண்ட மேரி கோம், அடுத்த 3 சுற்றுகளில் எதிராளிக்கு சரமாரி குத்துகளைவிட்டார். 2ஆவது சுற்றில் 6 புள்ளிகளையும், 3ஆவது சுற்றில் 3 புள்ளிகளையும் கடைசி சுற்றில் 4 புள்ளிகளையும். மேரிகோம் சேர்த்தார். ஆனால் ஸ்டெலுதாவினால் கடைசிச் 3 சுற்றுகளில் வெறும் 2 புள்ளிகளை மட்டுமே எடுக்க முடிந்தது.

நிர்ணயிக்கப்பட்ட நான்கு சுற்றுக்களின் முடிவில் மேரி கோம் 16-6 என்ற புள்ளிகள் கணக்கில் ஸ்டெட்லுதாவை வீழ்த்தி 5ஆவது முறையாகத் தங்கப்பதக்கத்துக்கு சொந்தக்காரி ஆனார்.

## மூன்றாவது தோல்வியைச் சந்தித்த கயானா அணி அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது

ஜோகனஸ்பேர்க், செப். 21

சம்பியன்ஸ் லீக் இருபது:20 தொடரின் லீக் போட்டியில், லயன்ஸ் அணி, கயானா அணியை 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. தொடர்ந்து மூன்றாவதாக தோல்வியடைந்த கயானா அணி, அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

தென்னாபிரிக்காவில், சம்பியன்ஸ் லீக் இருபது:20 கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் ஜோகனஸ்பேர்க் நகரில் நேற்றுமுன்தினம் நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் லயன்ஸ் (தென்னாபிரிக்கா), கயானா



(மேற்கிந்தியத் தீவுகள்) அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற லயன்ஸ் அணி அணித் தலைவர் அல்விரோ பீற்றர்ஸன், துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அணிக்கு டவ்லின் (7), சாட்டர்கூன் (4) ஜோடி மோசமான ஆரம்பத்தைக் கொடுத்தது. அடுத்து வந்த அணித் தலைவர் சர்வான் (21) நீண்டநேரம் நிலைக்கவில்லை. மறுமுனையில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்டீவன் ஜேக்கப்ஸ் (34) ஆறுதல் அளித்தார்.

பின்னர் களமிறங்கிய பார்ன்வெல் (11), கிராண்டன் (3), ஜோனாதன் போ (9) ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் அடுத்தடுத்து வெளியேறினர். அடுத்து வந்த ராய்ஸ்டோன் (15), கிறிஸ்டியன் (11), லெனாக்ஸ் குஷ் (19*) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்தனர். கயானா அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து, 148 ஓட்டங்களை எடுத்தது. லயன்ஸ் அணியின் சார்பில் ஈதன் ஓ ரெய்லி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

எளிய இலக்கை விரட்டிய லயன்ஸ் அணிக்கு ஜோனாதன் வான்டியர் (8) ஏமாற்றம் அளித்தார். பின்னர் இணைந்த அணித் தலைவர் அல்விரோ பீற்றர்ஸன், ரிச்சர்ட் கேமிரான் ஜோடி, கயானா அணியின் பந்துவீச்சை சிதறடித்தது. சிக்ஸர் மழை பொழிந்த கேமிரான் (6 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள்), சம்பியன்ஸ் லீக் இருபது:20 அரங்கில் தனது முதல் அரைசதமடித்தார். இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த பீற்றர்ஸன், தன்பங்கிற்கு அரைசதமடித்துக் கைகொடுத்தார். லயன்ஸ் அணி 15.1 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 149 ஓட்டங்களை எடுத்து, 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கேமிரான் (78), அல்விரோ பீற்றர்ஸன் (57) ஆகியோர் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் அசத்திய லயன்ஸ் அணியின் ஈதன் ஓ ரெய்லி ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

### டேவிஸ் கிண்ண டெனிஸ் போட்டி

# பிரேஸிலை தோற்கடித்து உலகச் சுற்றில் இந்தியா

சென்னை, செப். 21

டேவிஸ் கிண்ண டெனிஸ் போட்டியில் அபாரமாக ஆடிய இந்திய அணி, உலகச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது, நேற்றுமுன்தினம் நடந்த மாற்று ஒற்றையர் பிரிவுப் போட்டிகளில் போபண்ணா, சோம்தேவ் தேவ்வர்மன் வெற்றிபெற்றதால், பிரேஸிலை 3-2 என்ற கணக்கில் சுலபமாக வீழ்த்தியது.

சென்னையில் டேவிஸ் கிண்ண டெனிஸ், உலகச் சுற்றுக்கான தகுதி சுற்றுப் போட்டிகள் நடந்தன. இதில் இந்தியா, பிரேஸில் அணிகள் மோதின. முதலில் நடந்த ஒற்றையர் பிரிவில், ரோகன் போபண்ணா மற்றும் சோம்தேவ் தேவ்வர்மன் தோல்வியடைய, இந்தியா 0-2 என பின்தங்கியிருந்தது. பின்னர் இரட்டையர் பிரிவில் அனுபவ பயஸ், பூபதி ஜோடி வெற்றி பெற்று, நம்பிக்கை அளித்தனர். இதையடுத்து இந்தியா 1-2 என்ற கணக்கில் முன்னேற்றம் கண்டது.

நேற்றுமுன்தினம் நடந்த மாற்று ஒற்றையர் பிரிவுப் போட்டிகள் நடந்தன. உலகத்தர வரிசைப் பட்டியலில் 113 ஆவது இடத்திலுள்ள இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன், பிரேஸிலின் 27ஆவது தரவரிசையில் உள்ள தாமஸ் பெலூச்சியை எதிர்கொண்டார். இருவரும் விட்டுக்கொடுக்காமல் போராட, முதல் செற் மூன்றாவது சுற்றுக்குச் சென்றது. இதில் விறுவிறுப்பாக ஆடிய 25 வயதான சோம்தேவ் 7-6 என வெற்றிபெற்றார். அடுத்த செற்றிலும் சோம்தேவ் 4-0 என முன்னிலையிலிருந்தார். அப்போது மிகவும் சோர்வாகக் காணப்பட்ட 22 வயதான பெலூச்சி,



போட்டியின் இடையில் விலகுவதாக அறிவித்தார். இதைத் தொடர்ந்து சோம்தேவ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட, இந்தியா 2-2 என சமநிலையை எட்டியது.

பின்னர் நடந்த மற்றொரு முக்கியமான மாற்று ஒற்றையர் பிரிவுப் போட்டியில் உலகத் தரவரிசைப் பட்டியலில் 479ஆவது இடத்தில் உள்ள இந்திய வீரர் போபண்ணா, பிரேஸிலின் ரிகார்டோ மெலோவை (தரவரிசைப் பட்டியலில் 75ஆவது இடம்) சந்தித்தார். இப்போட்டியில் வென்றால் தான், உலகச் சுற்றுக்கு முன்னேற முடியும் என்பதால், இந்திய ரசிகர்கள் மத்தியில் விறுவிறுப்புக் காண[illegible] 30 வயதான போபண்ணா 6-3 என எளிதாகக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றில் 29 வயதான ரிகார்டோ கடுமையாகப் போராட, ஆட்டம் மூன்றாவது சுற்று வரை சென்றது. இதில் 7-6 என போபண்ணா வெற்றிபெற்றார். கடைசி செற்றில் ரிகார்டோ போராட்டம் வீணானது. இறுதியில் போபண்ணா 6-3, 7-6, 6-3 என் நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார். இதையடுத்து இந்தியா 3-2 என்ற கணக்கில் பிரேஸிலை வீழ்த்தியது. டேவிஸ் கிண்ண வரலாற்றில் இந்தியா 0-2 எனப் பின்தங்கிய நிலையில் இருந்து மீண்டு, உலகச் சுற்றுக்குத் தகுதி பெறுவது இதுவே முதல் முறையாகும். தற்போது இந்தியா 16 அணிகள் மோதும் கௌரவம் மிக்க உலகச் சுற்றுக்கு முன்னேறி அசத்தியுள்ளது. பிரேஸில் அணி தொடர்ந்து 5ஆவது முறையாக உலகச் சுற்றுக்கான தகுதிப் போட்டிகளில் தோல்வியடைந்து ஏமாற்றியுள்ளது.

இந்தியாவின் வெற்றிக்கு சென்னையில் கொளுத்திய வெயிலும் முக்கிய காரணம். முதலிரண்டு நாள்கள் மேகமூட்டமாக இருந்ததால், பிரேஸில் வீரர்களுக்கு பிரச்சினை ஏற்படவில்லை. ஆனால், நேற்றுமுன்தினம் வெயில் அதிகமாக இருந்ததால், பிரேஸில் வீரர்கள் விரைவில் சோர்ந்து போனார்கள். இதில், உடல்நலம் பாதிக்கப்பட்ட தாமஸ் பெலூச்சி, போட்டியின் இடையில் விலக நேர்ந்தது. சென்னை [illegible] இடத்தில் இம்முறை டேவிஸ் கிண்ணப் போட்டியை நடத்துவது என்று இந்திய டெனிஸ் சங்கம் எடுத்த முடிவு சரியாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளில் யூனியன் வங்கியும் இணைந்து செயற்படும்

## பணிப்பாளர் அலெக்ஸ் லவல் அச்சுவேலியில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

யூனியன் வங்கி வடமாகாணத்தில் இதுவரை ஐந்து கிளைகளை நிறுவுயுள்ளது. அத்துடன் பல கிளைகளை விஸ்தரித்து வடபகுதி மக்களின் அபிவிருத்திப் பணிகளில் இணைத்துக் கொள்ளவுள்ளது.

இவ்வாறு யூனியன் வங்கியின் பணிப்பாளர் அலெக்ஸ் லவல் தெரிவித்தார்.

யூனியன் வங்கியின் புதிய கிளை அச்சு வேலியில் நேற்று முற்பகல் 11 மணியள வில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விவசாயத்திலும், கைத்தொழில் துறையிலும் அச்சுவேலி நகரம் வளர்ச்சியினைக் கண்டுவருகிறது. இந்த நிலையில் அதனை உணர்ந்து இங்குள்ள மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் யூனியன் வங்கி தன்து கிளையினை இன்று அச்சுவேலியில் நிறுவியுள்ளது.

எமது வங்கியின் ஊடாக மீன்பிடித் துறை, விவசாயத்துறை மற்றும் வீடமைப்பு எனப்பல்வேறு துறைகளுக்கு குறைந்த அளவிலான வட்டி வீதத்தில் கடன்களை வழங்கவுள்ளது.

வடமாகாணத்தில் இத்துடன் 5 ஆவது கிளையினை நாம் திறந்துள்ளோம். மன்னாரில் ஒன்றும், வவுனியாவில் ஒன்றும், யாழ்ப்பாணத்தில் 3 கிளைகளையும் நிறுவியுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்பவே எமது யூனியன் வங்கி இதுவரைக்கும் மூன்று கிளைகளை இங்கு நிறுவியுள்ளது.எதிர்காலத்தில் மேலும் பலகிளைகளை நிறுவ உள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் யூனியன் வங்கியின் நிறைவேற்று அதிகாரி நிலாந்தடீ சில்வா, அச்சுவேலிக் கிளையின் முகாமையாளர் வி.சுஜிதரன், சுன்னாகம் கிளையின் முகாமையாளர் ஆர்.சச்சிதானந்தம், யாழ்.கிளை முகாமையாளர் பி.பாலசுப்பிரமணியம் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-9)

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி,செப்.21

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் கணனிப் பிரயோகம், தையல், மரவேலை ஆகிய பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.

6 மாத காலத்திற்கு வழங்கப்படும் இப் பயிற்சி நெறியில் சேர விரும்புபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, தொழிற் பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (த-100)

# மீளக்குடியமர்ந்த மக்களின் நலன்கருதி 4 கூட்டுறவு விற்பனை நிலையங்கள்

## வடமராட்சி கிழக்கில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

வடமராட்சி கிழக்கின் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் மக்களின் அத்தியாவசிய சேவை கருதி நான்கு கூட்டுறவு விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும் கூறுகையில்-

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் திறந்து வைக்கப்பட்ட இந்தக் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் சகல அத்தியாவசியப் பொருள்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன் ஆகிய பகுதிகளிலேயே இந்த நான்கு விற்பனை நிலையங்களும் அவசரமாகத் திறந்து வைக்கப்பட்டன.,

மேலும் மக்கள் மீளக் குடியமரும் பட்சத்தில் மேலதிகமாகக் கிளை விற்பனை நிலையங்களைத் திறந்து வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (த-26)



# புங்குடுதீவு, கோப்பாய் பகுதிகளுக்கான மின்விநியோகம் வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.21

புங்குடுதீவு, கோப்பாய் கயிற்றப்புலம் வீதி ஆகியபகுதிகளுக்கு மின்சார விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளுக்கான மின்சாரம் விநியோகிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கோப்பாய் கயிற்றப்புலம் வீதிக்கான மின்சார விநியோகத்தை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மின்சாரசபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தன் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் உட்பட மின்சார சபையின் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

புங்குடுதீவுக்கான மின்சார விநியோகமும் அன்றைய தினம் அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்னர் இப்பிரதேச மக்களுக்கு ஜெனரேற்றர் மூலமே மின் விநியோகம் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-26)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,செப்.21

அரியாலை பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி (ஏ.ஆர்.வீ) ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் நேற்று திங்கட்கிழமை முதல் ஒக்ரோபர் 6ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (த-26)

# திருமறைக் கலாமன்றத்தின் 'முத்தமிழ் சங்கமம்' நிகழ்வு

கொழும்புத்துறை,செப்.21

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ் பண்பாட்டுப் பெறுமானங்களைப் பேணும் வகையிலான முத்தமிழ்ச் சங்கமம் நிகழ்வு பெரும் எடுப்பில் இம் மாதம் முதல் அடுத்த மாதம் வரை நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இம்மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளிலும் அடுத்த மாதம் 9ஆம், 10ஆம், 16ஆம், 17ஆம், 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளிலும் இது நடைபெற இருப்பதாக அறவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பேச்சுப்போட்டி, பண்ணிசை நாடகப் போட்டிகளும் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பேச்சுப் போட்டியும் மாலை 6 மணிக்கு கலை நிகழ்வுகளும், மறுநாள் காலை 9 மணிக்கு சிறுகதை பற்றிய கருத்தரங்கும் மாலை 6 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

ஒக்ரோபர் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு பண்ணிசைப் போட்டியும் மாலை 6 மணிக்கு கலை நிகழ்வுகளும் 10ஆம் திகதி காலை 9 மணிக்கு இசை பற்றிய கருத்தரங்கும் மாலை 6 மணிக்கு சங்கீதக் கச்சேரியும் நடைபெறும்.

16ஆம் திகதி காலை 9 மணிக்கு நாடகப் போட்டியும் மாலை 6மணிக்கு கலை நிகழ்வுகளும் 17ஆம் திகதி காலை 9 மணிக்கு நாடகப் பயிற்சிப் பட்டறையும் மாலை 6 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

ஒக்ரோபர் 22ஆம் திகதி காலை 9 மணிக்கு பண்பாடு பற்றிய கருத்தரங்கும் மாலை 6 மணிக்கு கலைநிகழ்வும் 23ஆம் திகதி காலை 9 மணிக்கு பட்டமளிப்பு நிகழ்வும் மாலை 6 மணிக்கு கலை நிகழ்வும் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு கருத்தாடலும் மாலை 6 மணிக்கு கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

பண்பாட்டுப் பாரம்பரியங்களில் மக்களுக்குப் பற்றுதலையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தவும் மாணவர்கள் இளையோர்கள் எமது மொழி, பண்பாடு தொடர்பான விடயங்களில் தெளிவினைப் பெற்று தன்மானத்தோடு வாழவும் கல்விசார் செயற்பாடுகளில் ஈடுபடுதலை ஊக்கப்படுத்தி மாணவரின் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் களமாக முத்தமிழ் சங்கமம் அமையவுள்ளதாக திருமறைக் கலாமன்ற இயக்குநர் தெரிவித்தார். (த-135)

# இந்தியா வழங்கிய புதிய பஸ்கள் மாநகரசபைச் சாரதிகளிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

இலங்கை - இந்திய நட்புறவுச் சங்கத்தினால் யாழ்.மாநகரசபைக்கு வழங்கப்பட்ட புதிய பஸ்கள் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் மாநகரசபையின் சாரதிகளிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

ஒவ்வொன்றும் தலா 17 லட்சம் ரூபா பெறுமதியான ஐந்து பஸ்கள் நகரின் எல்லைப் பகுதிக்குள் இ.போ.ச.பஸ்கள் சேவையில் இல்லாத பகுதிகளுக்கான போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும்.

குறிப்பிட்ட பஸ்கள் யாழ்ப்பாண நகரின் கொழும்புத்துறை, கச்சேரி, கல்வியங்காடுச் சந்தி, காக்கைதீவு, ஓட்டுமடம், கே.கே. எஸ்.வீதி நாச்சிமார் கோயில், பல்கலைக்கழகம், திருநெல்வேலிச் சந்தை, கல்வியங்காடு வழித்தடங்களில் சேவையில் ஈடுபடும்.

அத்துடன் பாடசாலை மாணவருக்கு பின்தங்கிய இடத்தில் இருந்து சேவை வழங்குவதற்கும் பஸ் நிலையத்தில் இருந்து மாநகரசபை உத்தியோகத்தர்களுக்குச் சேவை வழங்குவதற்கும் பொது வைபவங்கள், தனியார் வாகனசேவை மற்றும் சபையின் பயன்பாட்டுக்கும் பதிலீட்டுக்குமான சேவைகளையும் இந்த பஸ்கள் மேற்கொள்ளும் என யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். (த-7)

## மாநகரசபையின் பஸ்சேவை இன்னும் ஓரிரு தினங்களில்

இந்திய - இலங்கை நட்புறவின் அடிப்படையில் யாழ்.மாநகர சபைக்கு வழங்கப்பட்ட புதிய 5 பஸ்களும் இன்னும் ஓரிரு தினங்களில் சேவையில் ஈடுபடும் என்று அறிவிக்கப்படுகிறது.

இ.போ.ச. பஸ்கள் தற்போது சேவையில் ஈடுபடாத பகுதிகளான நாவலர் வீதி, அரியாலை, கோயில் வீதி போன்ற சிறு பாதைகள் ஊடாக இந்தப் புதிய சேவைகள் நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நன்மை கருதி இந்தச் சேவை காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும் என்றும் -

இதற்கான கட்டணங்கள், தரிப்பிடங்கள் அனைத்தும் இ.போ.சபையினால் ஒழுங்குபடுத்தப்படும் என்றும் யாழ். மாநகர மேயர் யோ.பற்குணராஜா தெரிவித்துள்ளார்(ஒ)



இலங்கை - இந்திய நட்புறவுச் சங்கத்தால் யாழ். மாநகரசபைக்கு வழங்கப்பட்ட பஸ்கள் கையளிப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
இந்த நிகழ்வில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பஸ் ஒன்றினை சம்பிரதாயபூர்வமாக இயக்குவதை இரண்டாவது படத்திலும் சாரதி ஒருவரிடம் பஸ்ஸின் திறப்பை அமைச்சர் கையளிப்பதை மூன்றாவது படத்திலும் கையளிக்கப்பட்ட பஸ்களுடன் யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ நிற்பதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LAST CALL

## SABINS NO – 01 Modern Healthy Farm

**Vacancies:-**

**Secretary :-**
Young girl English speaking with Computer Basic MS – Office Knowledge

**Sales Manager:-**
With Trading experience Need more Staff O/L or A/L with poultry farm experience must welcome

**Driver & Security:-**
Please send the application with Photo

**To:**
**Mr. Sabins Jeyasegara,**
**Pakia Illam,**
**Pulavar Road,**
**Navaly North.** (103609) Tel. 0778350478


# கல்விசார் உத்தியோகத்தர் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (த)


## வீடு வாடகைக்கு

379/1 நாவலர் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு மட்டும் வாடகைக்கு வழங்கப்படும். தொ.பே. 0214901517

## வீட்டுக்காணி விற்பனைக்குண்டு

அச்சுவேலி மேற்கு, இராச வீதி கைத்தொழிற் பேட்டைச் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியுடன் தனி வீடு, தனிக் கிணறு இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- யோகராசா இராணி
இராசவீதி, தோப்பு, அச்சுவேலி மேற்கு.
தொ.பே: 0775217791

## தவறிவிட்டன

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியுடைய முருகன் கந்தையா என்பவரது தேசிய அ.அட்டை [523502956V], Job அ.அட்டை [சுகாதாரத் திணைக்களம்] NPHT 8250 இலக்க மோட்டார் சைக்கிளின் காப்புறுதி, வரிப்பத்திரங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பேர்சுடன் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே: 0779949147, 0213737738.

## Walk In Interview

பிள்ளையார் இன் 'A' உல்லாசப் பயணிகள் தங்குமிடம்
('A' Grade Hotel approved by the Ceylon Tourist Board)

**Post of Night Manager**

மேற்படி வேலைக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நாளை (22.09.2010) மு.ப. 10 மணி முதல் நேரில் வரவும். (103613)

Pillaiyar Inn
31, Manipay Rd, Jaffna.
Phone 021-222-2829
Fax 021- 222- 4449
E.mail: pillaiyar.in.@gmail.com


## 25ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

அமரர் வெலிச்சோர் ஆசீர்வாதம்



அன்னை மடியில் 1912.02.09

ஆண்டவன் அடியில் 1985.09.21

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
பார்போற்ற வாழ்ந்த காலமது கடந்து
ஆனதோ ஆண்டு இருபத்தைந்து!
ஐயா உம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு. (C/570644)


# STUDY - WORK - LIVE

## AUSTRALIA, UK, NEW ZEALAND, CANADA, USA

இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உங்களுடைய கனவுகளை நனவாக்கிக்கொள்ளுங்கள்

## இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

★ மாணவர்கள் வெளிநாடு செல்ல சந்தர்ப்பங்கள்
உலகின் எப்பாகத்திலும் Engineering, IT, Management, Nursing, Physiotherapy, Pharmacy, Science போன்ற கற்கைநெறியுடன் தொடர்புடைய தொழில்வாய்ப்புக்களுடன் மாணவர்களை அனுப்புதல்.
★ கனடாவில் நிரந்தரவதிவுரிமைக்கான ஆலோசனை
★ இலங்கையில் ஆரோக்கிய கவனிப்புக் கல்வி
தாதியர் பயிற்சி நெறி (Nursing), இயன்மருத்துவம் (Physiotherapy) மருந்தியல் (Pharmacy) ஆரோக்கிய முகாமைத்துவம் (Helth Management).

நடத்துபவர்கள்
- Dr. Nihal de Silva - Dean International Institute of Health Sciences & **Former Professor of Stanford University USA.**
- Representatives from **Student World - An Australian Based Global Education Agency.**
- Representatives from **YLD Canada** - Canadian Migration Consultants.

திகதி : 25 செப் 2010
நேரம்: 10.30 - 2.00 Pm
இடம்: Tilko Holidays (Pvt)Ltd
Jaffna City Hotel, No. 70/6, K. K. S. Road, Jaffna

உடன் அனுமதிக்காக! தயவுசெய்து உங்களுடைய சுயவிபரக்கோவையுடனும் பெற்றோருடனும் சமூகம் தரவும்.

IIHS | student WORLD | YLD Canada Immigration & Recruitment Services Limited.

For Appointments, Please Contact
Prathap : 0773 53 55 90
Sabeethan : 0774 14 23 98
Amila : 0773 11 43 81
www.iihsciences.com
www.studentworld.com.au
www.yldcanada.com


# UNIVERSITY OF JAFFNA TENDER NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD) for the following works.

| Work Details | Approximate Direct ConstructionCost (Rs. in mn) | Refundable deposit(Rs.) | Non refundable deposit(Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Repairs / Improvements / Internal Painting to Department of Chemistry, University of Jaffna | 5.7 | 50,000.00 | 500.00 | M6/C7 (Buildings) |

Tender forms may be obtained from Senior Assistant Registrar / Capital Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fee at the Shroff's Counter, University of Jaffna until 29.09.2010.

Perfected tender should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00 p.m on 05.10.2010 and open immediately thereafter.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works Planning Branch of this University during office hours, if necessary.

P.0 Box 57,
Thirunelvely,
20.09.2010
(C/570647)

Registrar
University of Jaffna.
Jaffna.


IELTS அவசியமில்லை

STUDY IN UK யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்...

லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு
★ கல்விக் காலத்திலேயே குடும்பத்தினரை U.K.க்கு அழைக்கும் வாய்ப்புகள்

★ Admission within 3 days
★ 100% Visa உத்தரவாதம் - ஆவணங்கள் சரியாக இருப்பது முக்கியம்
★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை (O/L)
★ U.K - B.A - Highly Trusted College

★ விசா நிராகரிக்கப்படுமானால் College fee மற்றும் Sponsor fee திரும்பப் பெறும் வசதிகள்
★ அனைத்து நாடுகளுக்குமான விசா பெறுவதற்குரிய ஆலோசனைகள்
★ விசா கிடைக்க முன்போ கிடைத்த பிறகோ எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
★ [illegible] வசதிகள்
[illegible] Sponsor வசதிகள்



இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு: 0770871616


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்ட வடிவம் மாறிப்போயுள்ளதே தவிர இன விடுதலை உணர்வு மங்கவில்லை

## வன்னியசிங்கம் நினைவு நிகழ்வில் மாவை. எம்.பி உரை



அச்சுவேலி,செப்.21

"அகிம்சை வழியிலிருந்து ஆயுதத் தடத்துக்கு வந்த எமது போராட்டம் மீண்டும் அகிம்சை நிலைக்குச் சென்றுள்ளது. போராட்ட வடிவம் மாறியுள்ளதே தவிர இன விடுதலைக்கான போராட்ட உணர்வு எம் மக்கள் மத்தியில் எந்த வகையிலும் மாற்றம் அடையவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜா தெரிவித்தார்.

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் 51ஆவது நினைவுநாள் சிறப்பு நிகழ்வு நீர்வேலி வாழைக்குலைச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை நடந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் உபதலை வர் க.சின்னத்துரை தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மாவை மேலும் கூறியதாவது :-

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் கோப்பாய் கோமான் உரையாற்றும்போது பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி.பண்டார நாயக்கா குறுக்கிட்டு "நீங்கள் இழைத்தது இராஜ துரோகக் குற்றம். உங்களுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும்" எனக்கூறினார்.

அதற்குப் பதில் கூறும்போது; "தமிழ் இனத்தின் விடுதலைக்காக ஒரு தடவையல்ல பல தடவைகள் தூக்குக் கயிற்றை முத்தமிடுவதற்குத் தயாராக உள்ளேன்" என ஆணித்தரமாகப் பதில் கூறினார். அவரது பதில் அன்று மட்டுமல்ல இன்றும் ஏற்புடையதாக உள்ளது.

அமரர் வன்னியசிங்கம் இனத்தின் விடுதலைக்காக, தமிழ் இனத்தின் ஒற்றுமைக்காகத் தன்னால் ஆன மட்டும் பணியாற்றினார். தமிழ் இனத்தில் புரையோடிப் போயிருந்த தீண்டாமையை ஒழிப்பதற்குத் தன்னால் இயன்றமட்டும் போராடி வெற்றி கண்டார். தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிப் பாதையில் தந்தை செல்வாவுக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றினார். அவர்களுடன் அரசியல் பணியாற்றுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. என்றாலும் அவரது பங்குப் பணிகள் அவரை ஒரு போராளி என்ற நிலையிலேயே நினைக்க வைக்கிறது. தமிழ் இனத்தின் விடுதலையில் முதல் தரமான போராளியாக, ஒரு தளபதியாக அவரை நான் மதிக்கின்றேன்.

ஈழத்தமிழ் இனம் இன்று கடலில் கல்லோடு கட்டிப்போட்ட நிலையில் உள்ளது. கடலில் இருந்து கரை சேர்வதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளோம். தமிழரின் அரசியல் பிரச்சினைகளைத் தூர விலக்கி வைத்துவிட்டுத் தன்னைப் பலப்படுத்துவதில் அரசு முழுமூச்சாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் எமது பிரச்சினைக்கான தீர்வு இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, சீனா, அமெரிக்கா என்ற வகையில் தொடர்புபட்டு வேறொரு பரிமாணத்தில் உள்ளது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை நாடியே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பல்வேறு வகையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது - எனவும் அவர் கூறினார்.

இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்டத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது :-

தமிழ் அரசியல் தலைவர்களில் முன்னோடியாக, தீர்க்க தரிசனமான கொள்கைகளை முன்வைத்து தமிழ் இனத்தை வழிப்படுத்திய பெருந்தகை கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கம். அவரது கொள்கைகள் எந்தக் காலத்துக்கும் ஏற்புடையதாக மட்டுமல்லாமல் இளம் தலைமுறையினரையும் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் கோட்பாட்டில் வழிப்படுத்தி நிற்கின்றன.

அமரரின் அரசியல் பாதை தமிழ் இனத்தின் கடந்த 60 வருட அரசியல் வரலாற்றின் வழிப்படுத்தலில் நின்று நிலைக்கின்றது. அமரருடன் அரசியலில் நேரடித் தொடர்புகள் இல்லாதபோதிலும் அவரது நாடாளுமன்ற உரைகள் மற்றும் தமிழ்க் கட்சிகளின் வளர்ச்சிப் படிநிலை என்பவற்றை உற்றுநோக்கும்போது அவரது பங்குப் பணிகளைக் கண்டுணர முடிகின்றது. நிதானத்தோடு அவர் ஆற்றிய பணிகள் அரசியலில் அவருக்கான தனியான இடத்தை நிலைநிறுத்தி நிற்கின்றது - என்றார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கூட்டமைப்புப் பிரதிநிதி சி.வீ.கே. சிவஞானம், லண்டனில் இருந்து வருகை தந்த பொ.சுப்பிரமணியம், அ.பரஞ்சோதி, த.கிருஷ்ணசாமி ஆகியோரும் உரையாற்றினர். (ற-72-11)



தீவக லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக ஆ.சாந்தலிங்கம் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். யாழ்.மாவட்ட உப ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா புதிய தலைவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கிப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதைப் படத்தில்காணலாம். [படம்: நந்தன்]

# போலிப் பனங்கட்டி உற்பத்தி செய்தவர் சுகாதாரப் பரிசோதகரிடம் பிடிபட்டார்

வடமராட்சி,செப்.21

புலோலி, வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் போலியாகப் பனங்கட்டி உற்பத்தி நிலையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்ட பனங்கட்டியும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள்களும் அழிக்கப்பட்டன.

முற்று முழுதாகப் பனைமரத்திலிருந்து பெறப்படும் பதநீரில் தயாரிக்கப்பட வேண்டிய பனங்கட்டிகளை, வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் உள்ள பெண்மணி ஒருவர் கோதுமை மா, சீனி ஆகிய பொருள்களை மூலப் பொருள்களாக வைத்துப் பெருமளவில் பனங்கட்டியைத் தயாரித்துச் சந்தைப்படுத்தி வருவதாக அப்பகுதிக் கிராமசேவையாளருக்குப் புகார் கிடைத்தது.

இதனையடுத்து கிராம சேவையாளர் தி.சுபேந்திரராஜா தலைமையில் பருத்தித்துறைப் பொலிஸாரும், சுகாதாரப் பரிசோதகரும் குறிப்பிட்ட பெண்மணி வீட்டுக்குச் சென்று போலிப் பனங்கட்டி உற்பத்தியைக் கண்டுபிடித்தனர். அங்கு பெரிய சட்டி ஒன்றில் சீனிப் பாணி கொதித்த வண்ணமும், குட்டான்களில் போலிப் பனங்கட்டிகள் போட்ட நிலையிலும் இருக்கக் காணப்பட்டன. போலிப் பனங்கட்டியைத் தயாரிக்கும் பணியில் நான்கு தொழிலாளர்களும் ஈடுபட்டிருந்தனர்.

போலிப் பனங்கட்டியைப் பரிசோதித்த சுகாதாரப் பரிசோதகர் அவற்றை உடனடியாக அழித்துப் புதைக்குமாறு உத்தரவிட்டார்.

பனங்கட்டி உற்பத்தி நிலையத்திலிருந்து பல மூடைகள், மா, சீனி ஆகியனவும் மீட்கப்பட்டன. போலிப் பனங்கட்டித் தயாரிப்பில் ஈடுபட்ட பெண்மணி கடுமையாக எச்சரிக்கப்பட்டார். (த-236)

## ஆதன மீள் மதிப்பீடு

யாழ்ப்பாணம்,செப்.21

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உப அலுவலகத்தினால் மானிப்பாய் கிராமத்தில் ஆதன மீள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெற்று வருவதாக பிரதேச சபையின் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (த-318)

## கொடுப்பனவுகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,செப்.21

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இருந்து பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் உப தபாலகங்களுக்கு வந்து சேர்ந்தன.

புற்றுநோய், காசநோய் போன்றவற்றுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் அவற்றை இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (த-314)

# தமிழரசுக் கட்சியின் கிளை கொக்குவிலில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

தமிழரசுக் கட்சியின் கிளையும் மகளிருக்கான தையல் பயிற்சி நிலையமும் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் இடம்பெற்றன.

தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சம்பிரதாய பூர்வமாக நாடாவைவெட்டிக் கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்தக் கிளை அலுவலகத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன், தமிழரசுக் கட்சியின் பொருளாதாரச் செயலாளர் சி.வீ.கே.சிவஞானம், உறுப்பினர் கனகசபாபதி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்கள், இளைஞர்கள், யுவதிகள் என அதிக எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர். (த-14)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## ஞானச்சுடர் வெளியீட்டு விழா

வடமராட்சி,செப்.21

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் புரட்டாதி மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் எஸ்.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வெளியீட்டுரையை சிவ.ஆறுமுகசாமியும் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் பண்டிதர் சி.வேலாயுதமும் நிகழ்த்துவார்கள். (த-236)

# கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு ஆங்கில தேர்ச்சிச் செயலமர்வு 3 நிலையங்களில்

யாழ்ப்பாணம்,செப்.21

தமிழ்மொழியில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் தேர்ச்சியை வழங்குவதற்கான செயலமர்வு நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

இச்செயலமர்வு வலிகாமம், வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களுக்குரிய ஆசிரிய மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வில் பங்கேற்க விரும்பும் ஆசிரியர்கள் இன்று செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தங்கள் பதிவுகளை உரிய நிலையங்களில் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது. (ஐ-ற)



தமிழரசுக் கட்சியின் கிளை அலுவலகமும், மகளிருக்கான தையல் பயிற்சி நிலையமும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதை முதற் படத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாவைவெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதனை இரண்டாவது படத்திலும், தமிழரசுக் கட்சியின் பொருளாதாரச் செயலாளர் சி.வீ.கே.சிவஞானம், உறுப்பினர் [illegible] மாவை. சேனாதிராஜா, ஈ.சரவணபவன் ஆகியோர் கிளை அலுவலகத்தில் முதல் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதை மூன்றாவது படத்திலும் [illegible] எம்.ஏ.சுமந்திரன் சிறப்புரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: உமா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - சீனத் தலையீடுகளால் திண்டாடும் தெற்காசிய நாடுகள்

சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளினதும் நேரடியான பொருளாதாரத் தலையீடோ அல்லது இராஜதந்திரத் தலையீடோ தெற்காசிய நாடுகள் அனைத்தாலும் உணரப்பட்டு வருகிறது.

இதன் காரணமாகப் தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும், வெளிவிவகாரங்களிலும் பெருமாற்றங்கள் நிகழ்ந்து வருவதை வெளிப்படையாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

வலுமிக்க இரு நாடுகளுக்குமிடையில், தமது சொந்த நலன்களின் அடிப்படையில் சிறிய தெற்காசிய நாடுகள் திசை தேடி அலைகின்றமை பொதுவாக ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

தெற்காசியாவிலே பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகள் இந்த நிலைமையை எதிர்நோக்குகின்றன.

இதிலே ஒவ்வொரு நாடும் இந்திய ஆதரவுக்கும், பொருளாதார வளமிக்க சீன தலையீட்டுக்கும் இடையில் தள்ளாடுகின்றன.

இந்தியாவால் தாக்குப்பிடிக்க முடியாதளவு பொருளாதார - பலப்பிரயோகம் சீனாவால் மேற்கொள்ளப்பட்டு வருவதால் சிறிய நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகள் சீனாவின் பக்கம் சாய்வது தவிர்க்க முடியாததாகிறது.

இவ்வாறு இந்தியாவைப் பொருளாதார இராணுவ வடிவங்களில் தனக்குள்ளே உள்ளடக்கும் திட்டத்தைச் சிறிது சிறிதாக நடைமுறைபடுத்தி வருகிறது சீனா. இதன் முன்நடவடிக்கையாகச் சிறிய தெற்காசிய நாடுகளைத் தன்வசப்படுத்தும் முழு முயற்சியில் சீனா வெற்றி கண்டு வருகிறது.

இந்த முன்னைநாள் பிரிட்டிஷ் காலனித்துவ நாடுகள் அனைத்தும் லஞ்சம், ஊழல், மனித உரிமை மீறல்கள், அடிப்படைவாதம், அதிகார முறைகேடு என எண்ணிலடங்காத ஜனநாயக விரோத செயற்பாடுகளைத் தமது நிலவிரிப்பின் கீழ் தள்ளிவிட்டு மேலேநின்று இராஜதந்திரப் பண்பாடு பற்றிப் பேசி அரசியல் செய்வது மேலை நாடுகளால் வெளிப்படையாகக் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

தம்மை ஜனநாயக விழுமியங்களை பேணும் தேசங்களாகக் காட்டிக்கொள்ள விரும்புகின்ற இந்நாடுகள் பொருளாதார வளர்ச்சி, கேந்திர முக்கியத்துவம் என்பவற்றின் பேரால் சீனா உட்செல்ல வைக்கின்றது என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

### பாகிஸ்தான்

இந்தியாவுடன் நீண்டகால எல்லைப் பிரச்சினை, பொருளாதார வளர்ச்சியில் படுபாதிப்பு, உள்நாட்டு அரசியல் பிரச்சினை அத்துடன் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட இயற்கை அழிவு என்று எண்ணிலடங்காத கடின நிலையில் இருக்கும் பாகிஸ்தான், தற்போதைய நிலையில் சீனாவுடன் மட்டுமல்ல பொருளாதார உதவிசெய்யக்கூடிய எந்த நாட்டுடனும் தனது உறவு நிலையை வலுப்படுத்திகொள் கின்றமை தவிர்க்க முடியாததொன்றாகும்.

ஏற்கனவே சுமார் ஏழு ஆயிரம் அமெரிக்க டொலர் வரையில் பாகிஸ்தானில் முதலீடு செய்திருக்கும் சீனா தொலைத்தொடர்பு, மின்சக்தி, பாதைகள் மற்றும் அரச அலுவலகக் கட்டமைப்பு, பாரிய இயந்திரங்கள், தகவல் தொழில்நுட்பம், சுரங்கத்தொழில் மற்றும் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் தனது பொருளாதார சக்தியைச் செலுத்தி வருகிறது.

இதுபோன்ற மேலும் பலகோடி பெறுமதிவாய்ந்த திட்டங்களுக்கு உதவி வழங்கும் எனவும் சீனா உறுதியும் அளித்துள்ளது. 2008ஆம் ஆண்டு பாகிஸ்தானின் தலைமைப் பொறுப்பை ஏற்றதிலிருந்து ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி ஐந்து தடவைகள் சீனாவுக்குச் சென்று வந்துவிட்டார்.

பாகிஸ்தானில் அரச உயர் மட்டத்திலிருந்து இராணுவத்திலும் தனியார் வர்த்தகங்களிலும் நிதி மோசடி மலிந்துபோய்க் கிடக்கிறது. இந்நிலைமை தெரிந்தும் தனது பொருளாதாரப் பலத்தால் பல்வேறு நாடுகளைப் போல பாகிஸ்தானையும் தனது கைக்குள் வைத்திருக்க முயல்கிறது சீனா.

தனது நீண்டகால எரிபொருள் வழங்கல் பாதையில் கேந்திர இடைத்தங்கல் நிலையாக விளங்கக்கூடிய பலூசிஸ்தான் மாநிலத்தில் உள்ள குவாடார் துறைமுகத்தைச் சீனா மிக முக்கியமானதொன்றாகக் கருதுகிறது. அத்துடன், இத்துறைமுகத்தைத் தனது கடற்படைத் தேவைகளுக்காகப் பாவிக்ககூடிய நிலையையும் சீனா நன்கு உணர்ந்துள்ளது.

குவாடார் துறைமுகத்தையும், சீனாவின் நடுப்பகுதியையும் இணைக்கக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டுள்ள நவீன நெடும்பாதை ஒன்றை காரக்கோரம் நெடும் பாதையூடாக 4 ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்தில் அமைப்பதற்கு சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

இன்று வரை பாகிஸ்தானில் பலமான நிலையில் இருக்கும் அமெரிக்காவைத் தன்னுடன் சமநிலையில் வைத்து பாகிஸ்தானிய விவகாரங்களைக் கையாளக் கூடிய நிலைக்குச் சீனா தன்னை ஆக்கிகொள்வதில் முக்கியத்துவம் காட்டுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை பாகிஸ்தானிய அணு ஆயுதக் கையாள்கையே மிகப்பெரிய சவாலாக உள்ளது. ஏற்கனவே சீனாவின் ஆதரவுடன் அணு ஆயுத வசதிகளைப் பெற்றுகொண்டுள்ள பாகிஸ்தான் அணு ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட மறுத்து வருகிறது.

இந்த நிலையில் உலகின் 46 நாடுகள் இணைந்து அணுமூலப்பொருள் வழங்கல் நாடுகளாகப் பதிவு செய்துள்ளன.

இந்த அமைப்பில் சீனாவும் ஓர் அங்கத்துவ நாடாகும். கட்டுப்பாட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட எந்த ஒரு நாடும் இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திடாத நாட்டுக்கு அணுமூலப்பொருள் எதையும் வழங்கக்கூடாது என்பது விதி.

ஆனால், சீனாவோ அணு ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கையில் தான் 2004ஆம் ஆண்டு கைச்சாத்திடுவதற்கு முன்னர் பாகிஸ்தானுடன் செய்துகொள் ளப்பட்ட உடன்படிக்கையின் தொடர்ச்சியே தற்போது பேசப்படுவரும் சமூக தேவைகளுக் குப் பயன்படுத்தக்கூடிய அணு ஆயுத வசதி கட்டுமானங்களாகும் என்று கூறிவருகிறது.

பாகிஸ்தானின் பார்வையில் பொருளாதாரப் பின்னடைவுகளை நிவர்த்திச் செய்வதற்கு மின்வசதி மிக அவசியமானதாகும்.

[illegible] இடை உற்பத்தித் தொழிற்சாலைகள் மின்சார வசதிக்குறைவால் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன. இந்நிலையில் தேவையான மின்சாரத்தை ஈடு செய்ய அணுமின் உலைகளே ஒரே வழி என்று பாகிஸ்தான் வாதாடுகிறது.

கட்டுப்பாடுகள் சீர்குலைந்து கிடக்கும் அரச நிர்வாகமும், உள்ளூர் நிர்வாகத்தில் இராணுவ தலையீடுகளும், இராணுவத்தினூடே நிறைந்து கிடக்கும் லஞ்ச ஊழல் நிலையும், இஸ்லாமிய அடிப்படைவாதமும் பாகிஸ்தானை தோல்வியுற்ற ஜனநாயக தேசமாக மாற்றியிருக்கும் இவ்வேளையில் இராணுவத்தினூடே தனது செல்வாக்கைத் தக்கவைக்க அமெரிக்கா முயல்கிறது.

பாகிஸ்தானின் அயல்நாடான ஈரான் பெரும் கண்காணிப்புக்குரிய விடயமாதலால் பாகிஸ்தான் இராணுவத்துடனான தொடர்புகளை அதிகம் பேணிவருகிறது அமெரிக்கா.


அண்மைய வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தின்போது பாகிஸ்தானிய மக்களுக்கு வானத்திலிருந்து பொட்டலங்களை வீசிய அமெரிக்க - பாகிஸ்தானிய இராணுவக் கூட்டு நடவடிக்கையும் இதில் ஓர் அங்கமாகும்.

இந்தியா, சீனா, அமெரிக்கா, ஈரான் என்று பொருளாதார வல்லமை மிக்க நாடுகள் மத்தியிலே பாகிஸ்தானிய அரச நிர்வாகத்தினர் தமது இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே நிர்வாக சீர்குலைவுகண்டு சிக்கித்தவிக்கும் பாகிஸ்தானியர்கள் ஒன்றுக்கொன்று முரணான நாடுகளுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது அடுத்த சில பத்தாண்டுகளுக்குப் பெரும் கடின பாதையே காத்திருக்கிறது எனக் கருதலாம்.

- லோகன் பரமசாமி-

வரைபடம் வங்கக்கழிமுகம்




### பங்களாதேஷ்

இந்தியப் பெருநாட்டால் மூன்றுபுறமும் சுற்றிச் சூழப்பட்டும் தெற்கே வங்கக் கடலை பிரதான கடல்வழி வினியோகம் மூலமாகக் கொண்ட நாடு பங்களாதேஷ். இந்த நாடு பொருளாதாரப் பலத்துடனும், பன்முகப்படுத்தப்பட்ட உற்பத்தித் திறனுடனும், உலகின் மூலைமுடுக்கு எங்கும் ஆழ வேரூன்றி வியாபித்து நிற்கும் சீன வல்லாதிக்கத்தின் இராஜதந்திர நகர்வுகளால் ஈர்க்கப்பட்டுக் கிடக்கிறது.

பங்களாதேஷுக்கு இந்தியா சுதந்திரம் வாங்கித்தந்தது என்பது பொதுவாகப் பேசப்படும் ஒரு கருத்தாகும். ஆனால், அந்நாடு உருவாக்கப்பட்ட 1971ஆம் ஆண்டிலிருந்து பங்களாதேஷின் பெரும்பாலான அரசுகள்

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குச்சவெளி சந்தைக் கட்டட வேலையை உடன் நிறுத்துமாறு பிரதேச செயலர் உத்தரவு

திருகோணமலை செப்.21

குச்சவெளிப் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் சந்தைக் கட்டட வேலைகளை உடன் நிறுத்துமாறு குச்சவெளிப் பிரதேச செயலாளர் திடீர் அறிவிப் பொன்றை விடுத்துள்ளார்.

குச்சவெளிப் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியொன்றில் யு.என்.டி.பியின் 15 இலட்சம் ரூபா நிதியுதவியில் 5 கடைத் தொகுதிகள், மலசலகூடம், கிணறு ஆகிய வசதிகளுடன் மேற்படி சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்டுவந்தது.

இவ்வேலைத் திட்டத்தை உடன் நிறுத்துமாறு குச்சவெளிப் பிரதேச செயலாளர் ஏ. உமாமகேஸ்வரன் குச்சவெளி பிரதேச சபைக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி சந்தைக்கட்டடம் அமைக்கப் பட்டுவரும் காணி குச்சவெளிப் பொலிஸ் நிலையம் முன்பாக அமைந்துள்ள விகாரைக்குச் சொந்தமானது என பிரதேச செயலகத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே மேற்படி இடைநிறுத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகக் குச்சவெளிப் பிரதேசத் தலைவர் ஏ. தௌபீக் கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்-

இக்காணி 1983 காலப்பகுதிக்கு முன்பிருந்தே அன்று இயங்கிய கிராம சபைக்குச் சொந்தமானதாக இருந்தது. யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வால் இக்காணி கவனிப்பாரற்றுப்போனது.

கடைத்தொகுதி, பொதுக்கிணற்றுடன் கூடிய மலசலகூட வசதி ஆகியவற்றைக் கொண்டதாக அமையும் இச்சந்தைக் கட்டடத் தொகுதியின் கட்டுமானப் பணிகள் இன்று இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இக்கட்டடப் பணிக்கான கிணறு தோண்டும் போது, 20 அடி ஆழத்தில் புதைபொருள் கட்டடப் பகுதி ஒன்று காணப்பட்டது எனக் கூறப்படுகிறது. இதனாலேயே இந்த உரிமைப் பிரச்சினை தோன்றியுள்ளது. விசாரணை முடியும் வரை இடைநிறுத்தம் நீடிக்கும். (ஸி)

# சம்மாந்துறையில் கலாசார நிகழ்ச்சி

மட்டக்களப்பு,செப்.21

நோன்புப் பெருநாளை முன்னிட்டு, பல்லின சமூக ஐக்கிய ஒன்றியத்தின் ஆதரவில் தலைவர் அல் - ஹாஸிம் ஏ.ஆர்.எம். இர்பான் தலைமையில் கலாசார நிகழ்ச்சியொன்று சம்மாந்துறை நகர மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறைப் பிரதேசசபைத் தவிசாளர் எம்.ஐ.எம். மன்சூர் பிரதேசச் செயலர் எம்.எம்.மன்சூர் ஆகியோர் உட்படப் பலர் இந்நிகழ்சியில் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இலங்கையின் முன்னணி இஸ்லாமிய வானொலிப் பாடகர் மாத்தளைக் கமாலின் இன்னிசை நிகழ்ச்சி, சிங்களப் பிரிவேணவினதும் இஸ்லாமிய மத்ரசா மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் ஆகியவையும் இடம்பெற்றன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் - சிங்கள - முஸ்லிம் மக்கள் திரளாக இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். (ஸி)

# வலதுகரை வாய்க்கால் பிரதேசத்தில் 24 ஆயிரம் ஏக்கரில் பெரும்போகச் செய்கை

மட்டக்களப்பு,செப்.21

அக்கரைப்பற்று கல்லோயா வலது கரை வாய்க்கால் திட்டத்திற்குட்பட்ட பிரதேசத்தில் பெரும்போகத்தில் 24 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயச் செய்கையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் தலைவர் எம்.ஐ.அபூபக்கர் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி அக்கரைப்பற்று மேற்கு கமநல மத்திய நிலையத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திட்ட முகாமையாளரின் வழிகாட்டலோடு மாவட்டத்தின் அரச உயர் அதிகாரிகள், விவசாயச் சங்கங்களின் தலைவர்கள், விவசாயிகள் ஆகியோர் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வலதுகரை வாய்க்கால் திட்டத்திற்குட்பட்ட பிரதேசத்தில் 24 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மூன்று அல்லது முன்றரை மாத நெல்லினங்களைப் பயிரிடவும் , விதைப்புக் காலத்தை ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை மேற்கொள்ளவும் இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஸி)




# பொது நூல் நிலையத்தில் நூல்கள் பற்றாக்குறை

புத்தளம்,செப்.21

முந்தல் பிரதேச செலகத்திற்குட்பட்ட கடையாமோட்டை பொது நூல் நிலையத்தில் நூல்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என நூலகப் பொறுப்பாளர் ஏ.ரி.எம். ராசிம் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரம் ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களின் பரீட்சை வழிகாட்டி நூல்கள், புலமைப் பரீட்சை மாணவர்களுக்கான வழிகாட்டி நூல்கள், சிறுவர்களுக்கான கதைப் புத்தகங்கள் ஆகியவற்றுக்குத் தற்போது தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, இந்த நூல் நிலையத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோரைப் பொது நூலகம், கடையாமோட்டை, மதுரங்குளி எனும் முகவரியுடனோ அல்லது 0716097004 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஸி)

# வாகரையில் குடியமர்ந்த கிராம வாசிகளுக்கு 11 லட்சம் ரூபா சுயதொழில் உபகரணங்கள்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் மீள் குடியேறியுள்ள ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு சுமார் 11 லட்சம் ரூபா பெறுமதியான சுயதொழில் உபகரணங்கள் நேற்று வியாழக்கிழமை காலை பகிர்ந்தளிக்கப்பட்டன.

வாகரைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.இராகுலநாயகி தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, சிறுகடை வியாபாரம், விவசாயம் ஆகிய தொழில்களுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

காயங்கேணி, மதுரங்குளம், ஆலங்குளம், கட்டுமுறிவு, வட்டவான், மாங்கேணி, புட்டாங்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இப்பொருட்களைப் பெற்றுக் கொண்டனர். ஹரிட்டாஸ் எகெட் நிறுவனத்தினால் இந்நிவாரணம் வழங்கப்பட்டது என நிறுவனத்தின் ஊடகப் பொறுப்பாளர் எஸ். மைக்கல் தெரிவித்தார். (ஸி)

# கலஹா புப்புரஸ்ஸ தோட்டத்தை ஏலத்தில் விடும் தீர்மானம் இரத்து

கண்டி,செப். 21

கண்டி - கலஹா புப்புரஸ்ஸ தோட்டத்தைப் பகிரங்க ஏலத்தில் விடும் விவகாரத்தை இலங்கை வங்கி கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தைப் பகிரங்க ஏலத்தில் விடும் விவகாரத்தில் தோட்ட உரிமையாளர் வங்கியுடன் நடத்திய பேச்சுக்குப் பின்னரே ஏலம் கைவிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

தோட்டத்தின் உரிமையாளர் வங்கிக்கு ஒருதொகை முற்பணத்தைச் செலுத்தியதோடு நிலுவையையும் விரைவில் செலுத்துவதற்கு ஒத்துக்கொண்டுள்ளார் என்றும் இதையடுத்தே தோட்டத்தை ஏலத்தில் விடும் தீர்மானத்தை வங்கி கைவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தோட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஏலம் போடப்படுவதாக விளம்பரப் படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கண்டி, புப்புரஸ்ஸ குறூப்பைச் சேர்ந்த ''நியூ புப்புரஸ்ஸ எஸ்டேட் பிரைவேட் லிமி டட்'' என்ற இத்தோட்டத்தை இலங்கை வங்கி ஏலத்தில் விடுவதாக அறிவித்தது. இதையடுத்து, இத்தோட்டத் தொழிலாளர்களிடையே பதற்றமும், பீதியும் ஏற்பட்டுள்ளது.

இத்தனியார் தோட்டத்தை வங்கியில் அடகுவைத்து கடன்பெற்ற தோட்ட உரிமையாளர் பணத்தை வங்கிக்கு மீளச் செலுத்திக் காணியை மீட்காத காரணத்தாலேயே வங்கி தோட்டத்தை ஏலம் போடத் தீர்மானித்தது. அதற்கான திகதியையும் அறிவித்தது.

79 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட தோட்டத்தில் மூன்று பாதைகள் உள்ளன. 39.5 ஏக்கர் நிலத்தில் தேயிலை விளையும். 47 தொழிலாளர் குடும்பங்கள் வாழ்கின்றன.

2008 ஆம் ஆண்டு இத்தோட்டம் மூடப்பட்டது. தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய 12 வருட சேவைக்காலக் கொடுப்பனவு களும் வழங் கப் பட. வில்லை. தோட்டத்தை ஏலத்தில் எடுப்பவர்கள் இதனை வழங்கப் போவதில்லை என்பதால் தொழிலாளரிடையே பதற்றம் தோன்றியது.

இங்குள்ள தொழிலாளர்கள் இ.தொ.காவின் தொழிற்சங்க அங்கத்தவர்களாவர். எனவே, அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க கண்டி மாவட்ட அமைப்பாளர் துரை மதியுகராஜா தொழிலாளர் பிரதிநிதிகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை வங்கியுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

இதேநேரம், தோட்டத் தொழிலாளர்கள் ஏலம் தொடர்பில் புப்புரஸ்ஸ பொலிஸில் முறைப்பாடு ஒன்றையும் செய்திருந்தனர். இது தொடர்பான விசாரணை கடந்த செவ் வாய்க்கிழமை புப்புரஸ்ஸவில் நடைபெற்றது.

பொலிஸார் தோட்ட உரிமையாளரான உபதிஸ்ஸ வெலகெதரவை விசாரணைக்கு அழைத்திருந்தனர்.

இதேவேளை, இலங்கை வங்கியால் தோட்டம் ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ள விவகாரம் தொடர்பாக தோட்டத் தொழிலாளர்களின் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட கம்பளை தொழிலுறவு காரியாலயமும் தோட்ட முதலாளியைச் சந்திக்க மூன்று தொழிலுறவு உத்தியோகத்தர்களை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸி)

# குக்குலேகம தோட்ட மக்கள் இன்னும் உறவினர் வீடுகளில்

## அவர்களுக்கு உதவத் தயார் என்கிறார் வாசுதேவ எம்.பி

இரத்தினபுரி,செப்,21

நிவித்திகல, குக்குலேகம தோட்டத்தில் வசித்த தமிழ் மக்கள் தம்முடன் தொடர்பு கொண்டால் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்குத் தம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இரத்தினபுரி மாவட்ட ஆளும் கட்சி எம்.பி.யான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிவித்திகல, குக்குலேகம தோட்டத்தில் வசித்த தமிழ் மக்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அச்சம் காரணமாக இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் இரத்தினபுரி 201, பண்டார நாயக்க மாவத்தையிலுள்ள தமது அலுவலகத்துடனோ அல்லது 045-222 3182, 072-327 1211 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நிவித்திகல, குக்குலேகம தோட்டத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த காவலாளியொருவர் கடந்த திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டார். இதனையடுத்து அடுத்த நாள் இரவு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் தோட்டக் குடியிருப்புகளில் தமிழ் மக்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளை வீடுகளை அடித்து உடைத்து சுமார் 15 வீடுகளைத் தீக்கிரையாக்கினர். இதனால் அவர்களது முக்கிய ஆவணங்கள் யாவும் தீக்கிரையாகின. பாடசாலைப் பிள்ளைகளின் புத்தகங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களும் தீக்கிரையாகின.

இதனையடுத்து உடமைகள் இழந்தாலும் பரவாயில்லை. உயிரையாவது பாதுகாக்க வேண்டுமெனக் கருதி அப்பாவித் தமிழ் மக்கள் அன்றிரவு காடுகளிலும், தேயிலைத் தோட்டங்களிலும் தமது பிள்ளைகளுடன் மறைந்திருந்து மறுநாள் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று தஞ்சமடைந்தனர். இதனால் குக்குலேகம தோட்டப் பிரதேசம் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தது.

இந்த நிலையில் குறித்த பிரதேச மக்களின் தற்போதைய நிலைவரங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவிடம் வினவிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (த)




# வத்துகாமம் - கண்டி பிரதான வீதி தற்காலிகக் கட்டடங்கள் அகற்றல்

கண்டி,செப்.21

வத்துகாமம் - கண்டி பிரதான பாதையில் மடவளை நகரின் இரு மறுங்கிலும் அமைந்துள்ள கட்டடங்களின் முன் தற்காலிகமாக - அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள சகல கட்டடங்களையும் - கொட்டில்களையும் அகற்றுமாறு பாத்த தும்பறைப் பிரதேசசபை உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து நிழலுக்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக விஸ்தரிப்புகள், பெயர்ப் பலகைகள் உட்பட அனைத்துக் கட்டடங்களும் அகற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கட்டடங்கள் உடைக்கப்பட்டு அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநல சேவைகள் நிலையத்துக்கு 4 கோடி ரூபா நட்டம்

கொழும்பு, செப். 21

கரடியனாறில் நடைபெற்ற வெடிப்புச் சம்பவத்தில் தமது திணைக் களத்திற்கு 4 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டக் கமநல சேவைகள் உதவி ஆணையாளர் டாக்டர் ஆர். ருசாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கமநல சேவைகள் கேந்திர நிலையம், பசளை மற்றும் விவ சாயிகளுக்கான பொருட்கள் உட்பட 4 கோடிரூபா நட்டம் ஏற்பட்டுள் ளது. தற்போது இக்கட்டடம் பாவிக்க முடியாதளவுக்கு முற்று முழு தாக சேதமடைந்துள்ளது. அதனால் இன்று முதல் நிலையத் திற்கு அண்மையிலுள்ள தனியார் வீடு ஒன்றில் தற்காலிகமாக இயங்கவுள்ளது.

தனியார் வீட்டில் இயங்கவுள்ள கமநல சேவைகள் கேந்திர நிலையத்தை விவசா யிகள் தமது தேவைகளுக்குப் பயன்படுத்த லாம் எனவும் சேதமுற்ற தமது நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்டதன் பின் னரே இந்த முடி எடுக்கப்பட்டது - இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை**

மலர்வு: 20.05.1938 உதிர்வு: 21.09.2005

பாடும் குயிலோன் பார்புகழும் நல்லறிஞன்
மூடும் விழியென்றும் மூடாது எந்நாளும்
ஓடும் நதியாய் ஓசைதரும் நல்யாழாய்(க்)
கூடும் குலவும் குன்றின்மேல் ஒளிவீசும்

குடும்பத்தினர்

## குருநகர் பகுதியில் புதிய மாடி வீடுகள்

யாழ்ப்பாணம், செப்.21

குருநகர்ப் பகுதியில் புதிய மாடிவீடு களை அமைக்க யாழ்.மாநகர சபை நட வடிக்கை எடுத்துள்ளதாகவும் ஒவ்வொன் றும் ரூபா 8 லட்சம் செலவில் 40 மாடி வீடு கள் அமைக்கப்படும் எனவும் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராஜா தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையின் நிதியில் இருந்து இந்த வீட்டுத்திட்டம் செயற்படுத்தப்படு வதாகவும் முதல்வர் மேலும் தெரிவித் தார். (த-7)

## பங்குச் சந்தை முதலீடு கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், செப்.21

பங்குச் சந்தை முதலீடுகள் தொடர் பான கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டு றவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெறும் என கொழும்புப் பங்குச் சந்தையின் யாழ். கிளையின் முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.

பங்குச்சந்தை தொடர்பான அறிவைப் பெறவிரும்பும் பொதுமக்கள், மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெறலாம் எனவும் அவர் தெரிவித்தார். (த-322)

**வீடு வாடகைக்கு**

கோண்டாவில் மேற்கு, புகையிரத வீதியில் K.K.S.வீதிக்கண்மையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு இலக்கம்: 0779798181.

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே

## கொலைச் சந்தேக நபருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, செப். 21

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளேயின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள நபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த நபர் முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே தொடர்பான தகவல்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கினார் எனப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்குத் தொடர்பான சகல ஆவணங்களையும் நீதி மன்றில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்த புலனாய்வுப் பிரிவினர், நீதிமன்றின் ஆலோசணைக்கு அமைய இந்த வழக்குத் தொடர் பான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (சி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 05 . 08 . 1934



மறைவு 22 . 08 . 2010

**அமரர் வேலன் கந்தசாமி (வரணி வடக்கு)**

கடந்த 22.08.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும் பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (21.09.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள் ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

வரணி வடக்கு,
வரணி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/570641)

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயந்தி பஞ்சாட்சரம்



யாழ்ப்பாணம், அத்தியடி குறுக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் 39D, Station Road, கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயந்தி பஞ்சாட்சரம் 18.09.2010 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம்- நாகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான முருகேசு- இராசநவமணி தம்ப தியரின் அன்பு மருமகளும் Capt. பஞ்சாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும் விதுபானு, சைறாபானு, பானுரேக்கா, பெறாமகன் விஜித்குமார் ஆகியோரின் அன்புத் தாயும் சுகுமாரன், மயூரன், டிலக்ஷன், டீப்பாபாலினி, பாலடினேஷ், டிலாணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆராதனா, அர்ச்சனா, அகில்சரண், கணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விஜயகுமார், ஜெயக்குமார், சிறிகாந்தா, வசந்தி காலஞ்சென்றவர்களான ஜெகன், உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரி யும் யோகானந்தராஜா, பொன்ராணி, தனலக்ஷ்மி, உதயரமணி, துர்காதேவி, முத்துக்குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் திரு. திருமதி கணேசன், திரு. திருமதி தங்கராஜா, திரு.திருமதி இன்பராஜா ஆகியோரின் அன்புச் சம் பந்தியும் ஞானகுரு, சரஸ்வதி, காலஞ்சென்ற இராஜரட்ணம்- இராஜேஸ்வரி தம்பதியரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2010) புதன்கிழமை அவ ரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகப் பிற்பகல் 5 மணியளவில் கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

39-D, ஸ்ரேஷன் வீதி,
கல்கிசை.
(KEELS SUPER MARKET அருகில்
Old Quary Road இலகுவானது).

(சி/570979)

தகவல்:

Capt. பஞ்சாட்சரம் (கணவர்),
MOBILE: 0714835000
விஜயகுமார் (தம்பி),
MOBILE: 0718422467
TEL: 2730468, 2737029.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனை பாதையில் வரலாறு படைக்கும் டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகம்

இலங்கை உதைபந்தாட்ட வரலாற்றில் டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு என்றுமே உரிய இடமுண்டு. அந்தவகையில் பல்வேறு காலங்களில் பல்வேறு சவால்களையும், சாதனைகளையும் சோதனைகளையும் சந்தித்து வெற்றிப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் விளையாட்டுக் கழகங்களில் இதுவுமொன்று. அந்த வகையிலே இக்கழகம் 1935 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இப்பகுதி மக்கள் காலி, மாத்தறை, கண்டி, நாவலப்பிட்டி, பதுளை, அனுராதபுரம், மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு வர்த்தகத்தின் பொருட்டு சென்றனர். அவர்களில் வே.மு.கந்தவனம் என்பவர் யாழ்ப்பாணம் வந்து உதைபந்தாட்டம் வதிரிப் பகுதியில் ஆரம்பிக்க தூண்டுகோலாக இருந்தார்.

அவ்வகையில் குறிப்பாக டயமன்ட்ஸ் அணியின் உதைபந்தாட்டம் துளிர் விடத் தொடங்கியது. 1965 காலப்பகுதிதான். அந்த வேளையில் டயமன்ட்ஸ் அணி பல தடவை சம்பியனாகி வந்தது. இந்த வகையில் இந்தக் காலப்பகுதியில் தங்கராஜா, சாந்தநாதன், இராஜநாதன், மணிகலாதன், இராஜதுரை இரட்ணசிங்கம் என்போர் ஆரம்பத்தில் சுற்றுப் போட்டிகளில் பங்கு பற்றினர். இதற்கு முன்னர் டாக்டர் பரம், கே.திரவியசிங்கம், சின்னத்தம்பி, மு.கந்தவனம், வ.பாஸ்கரன் தர்மராஜா, கந்தசாமி போன்றவர்கள் இந்த அணிக்காக விளையாடினர். சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் இப்பிரதேச மாணவர்கள் கல்வி கற்றதன் பிரதிபலனாக சிறந்த விளையாட்டு நுட்பங்களை அறிந்து இந்த அணியைப் பலப்படுத்த உதவினர். 1970 காலங்களில் யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டபோது அதில் டயமன்ட்ஸ் கழகமும் அங்கத்துவக் கழகமாக இணைக்கப்பட்டது. இதனால் தேசிய ரீதியிலான உதைபந்தாட்டத் தொடர்கள் கிடைக்கப்பட்டு அவை டயமன்ஸ் கழகத்தின் வளர்ச்சிக்கு உதவியது. இதன் பின்னர் 1972 பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டது. இதன் காரணமாக டயமன்ட்ஸ் கழகம் மேலும் விரிவாக்கம் பெற உதவியது. இக்காலத்தில் இந்த லீக்கினூடாக பல சுற்றுப் போட்டிகள் பல பயிற்சி மூகாம்கள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டபோது டயமன்ஸ் வீரர்களின் பங்களிப்பு அதிகமாக விளங்கியது.

டயமன்ட்ஸ் கழகத்தின் விளையாட்டு வீரன் திரு ர.ரட்ணசிங்கம் லீக்கின் பயிற்றுனராக நியமிக்கப்பட்டு முதன் முதலில் தேசிய ரீதியிலான பயிற்சிக்கு அனுப்பப்பட்டார். அவர் பெற்ற பயிற்சி டயமன்ட்ஸ் விளையாட்டு வீரர்களுக்கு பெரிதும் உதவின. சில இளைஞர் அணிகள் டயமன்ட்ஸ் கழகத்தின் உள்ளே பிரிக்கப்பட்டு அவர்களுக்கு முறையான பயிற்சிகளை திரு ர.ரட்ணசிங்கம் வழங்கினார். இதனால் பல புதிய ஆட்ட நுட்பங்கள் திறன்கள் உதைபந்தாட்ட விடயங்களை டயமன்ட்ஸ் அணி வீரர்கள் மிக இலகுவாகப் பெறமுடிந்தது. இக்காலத்தில் பருத்தித்துறை ஆத்தியடி என்னும் இடத்தில் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட அணி அறிமுகம் செய்யப்பட்டது. தொடர்ந்து 5 வருடங்கள் சுற்றுப்போட்டி சம்பியனை டயமன்ட்ஸ் அணி சுவீகரித்தது. காங்கேசன்துறை பங்றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த நிறை × உயரம் என்ற சுற்றுப்போட்டியை இரண்டு வருடங்கள் டயமன்ட்ஸ் அணி சுவீகரித்தது. இதனால் பல புதிய இளம் வீரர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர்.

இளைஞர்கள் மத்தியில் நடத்தப்பட்ட சுற்றுப் போட்டிகள் மூலம் பல புதிய வீரர்கள் இனங்காணப்பட்டனர். இக்காலத்தில் புஸ்பராஜா, குணசிங்கம், சிவபாலசிங்கம், ஜெகசோதிநாதன், யோகராஜா, தவராஜா, ஆனந்தநாதன் போன்றோரின் சிறப்பான ஆட்டம் இக்கழகத்தை வளர்த்தது. இதன் பின்னர் 1975ஆம் ஆண்டு திரு வரதராஜன், பொ.பொன்ராஜன் ஆகியோர் தேசிய ரீதியில் உதைபந்தாட்டப் பயிற்சி முகாமுக்குச் சென்றனர். சர்வதேச உதைபந்தாட்ட பயிற்றுனர் திரு.வெக்காட்பாப்பே என்பவரின் பயிற்சியிலும் திரு.ரி.ரட்ணசிங்கம் நடத்திய பயிற்சியின் கீழும் ஜேர்மன் பயிற்றுவிப்பாளர் எகாட் றொட்சன் நடத்திய உதைபந்தாட்ட பயிற்சியிலும் இவர்கள் பங்கு பற்றினர்.

(தொடரும்)




தொகுப்பு: ஹரிஸ்

# புதிய அத்தியாயத்தில் பிரவேசிக்கும் ஊறணி வைத்தியசாலை



வைத்தியசாலைகள் என்பவை கோயில்கள். மருத்துவப் பணி செய்பவர்கள் கடவுளுக்கு நிகரானவர்கள். அந்த வகையிலே வடமராட்சியில் அலைமோதும் கடலோரம் அமைதியான சூழலில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது ஊறணி வைத்தியசாலை என்று எல்லோராலும் அழைக்கப்படும் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை. இவ்வைத்தியசாலை தற்போது றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ளது.

இவ் அமைவிடத்தில் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசாங்க மருந்தகம் ஒன்று இயங்கி வந்துள்ளது. இது ஒரு சிறிய மருந்தகமாகவே செயற்பட்டது. இதனால் இவ்வூர் மக்களும் அயல் கிராமத்தவர்களும் தமது மருத்துவத் தேவைகளை நிவர்த்தி செய்துகொள்ள பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இதனை அவ்தானித்த பரோபகாரி திரு இ.அப்புக்குட்டிப்பிள்ளை அவர்களின் நெறிப்படுத்தலுடனும் முயற்சியுடனும் ஊறணி பிரதேசத்தில் வைத்தியசாலை நிர்மாணிக்கும் பணி ஆரம்பமானது. இச்சூழ்நிலையில் இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர் ஹென்றி மொங்மெசன்மூர் என்பவரின் புரிந்துரையின் கீழ் 30 ஆம் திகதி வைகாசி மாதம் 1945ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு ஆஸ்பத்திரியை நிர்மாணிக்கும் புனித பணி ஆரம்பமாகியது. அக்காலப் பெறுமதியில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் கட்டட நிர்மாணம் ஆரம்பமாகியது. கட்டட வேலைக்கான பொருள்கள் பாய் மரக்கப்பல்கள் மூலம் கொண்டு வரப்பட்டு வைத்தியசாலைக்கு முன்பாக இறக்கப்பட்டு கட்டட வேலைகள் முடிவுக்கு வந்தன. பின்னர் ''இந்திராணி வைத்தியசாலை'' எனப் பெயரிடப்பட்டு போரூட் நிறுவனத்தின் உதவியில் பெண்கள் விடுதி புனரமைக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களம் வழங்கிய நிதியில் இருந்து நோயாளர் வாகனத் தரிப்பிடம் என்பன நிறுவப்பட்டுள்ளது.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து அருகில் உள்ள கிணற்றிலிருந்து வைத்தியசாலைக்கு நீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

2001 ஆம் அண்டு அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தினால் வைத்திய தொழில் நுட்ப ஆய்வுகூடம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. 2003ஆம் ஆண்டு அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தினால் நல்லெண்ணத்தூதுவர் ஏஞ்சலியா என்பவரின் உதவியினால் பிரசவ அறை, சிறுவர் விடுதி ஆகியன மறுசீரமைக்கப்பட்டு உள்ளது. அவுஸ்ரேலியாவில் உள்ள வல்வை நலன்புரிச் சங்கத்தின் நவீன இரத்த பரிசோதனை நுண்கருவி ஒன்று வழங்கப்பட்டு 20.10.2004 அன்று முதல் இடம்பெற்று வருகின்றது. இக்கருவி இயங்குவதற்குரிய பொருள்கள் போன்றவை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்பட்டது. 'நிக்கொட்' என்ற அமைப்பினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து சமையல் அறை கட்டி முடிக்கப்பட்டு 07.11.2004 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அவுஸ்ரேலியா செஞ்சிலுவைச் சங்க உயர் மட்ட அதிகாரிகள் நேரில் வருகை தந்து இவ்வைத்தியசாலையைப் பார்வையிட்டதோடு சுமார் 60 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதன்மூலம் பல கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டும் புனரமைக்கப்பட்டும் துரிதகதியில் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இவ்வைத்தியசாலையின் சமூக சேவைகளாக இலவச மருத்துவமுகாம், கண்பரிசோதனை போன்ற சேவைகளை அனைவரும் மெய்சிலிர்க்கும் வண்ணம் நடத்தி வருகின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்



துணையாக இருந்த சிலரே தொல்லையாக மாறலாம். சில வேலை கடனாக, கைமாத்தாகக் கொடுத்த பணம் திரும்பவரும். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறும்சூழ்நிலை உருவாகும். பல நாள்களாக சாதிக்க நினைத்த ஒரு விடயத்தை இன்று சாதித்து காட்டலாம். நண்பர் ஒருவருக்காக மற்றொரு நண்பரிடம் பரிந்து பேசுவீர்கள்.

### இடபம்



எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும் நாள். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள முற்படுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். இளைய உடன்பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அனுகூலமான நாள்.

### மிதுனம்



வழக்கமான சில வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம் அல்லது பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வீண் செலவுகளைக் குறைத்து சிக்கனத்தை அதிகரிக்க வேண்டும். முக்கியமான சில வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம்.

### கடகம்



நீங்கள் நல்ல எண்ணத்துடன் சில காரியங்களைச் செய்தாலும், மற்றவர்கள் அதைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆட்படலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். பெரிதும் நம்பிக்கையுடன் இருந்த ஒரு விஷயம் கடைசி நேரத்தில் கை நழுவிப் போகலாம்.

### சிங்கம்



சண்டை போட்ட உறவினர்கள் சிலரிடம் சமாதானமாகப் போவீர்கள். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் நாட்டம் செல்லும். இளைய உடன்பிறப்புக்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். பயணங்கள் நல்ல விதமாக அமையலாம். தம்பதியர் இடையே அன் யோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம்.

### கன்னி



பொது விடயங்களில் அக்கறை காட்டி புகழ் சேர்க்க முற்படுவீர்கள். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே தொலைபேசி வழியில் சில வேலைகளை முடிப்பீர்கள். சக ஊழியர்கள் சிலர் மூலம் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். வேலையாள்கள் வழியில் உருவான தொல்லை குறையும். உதிரி வருமானங்களைப் பெறலாம்.

### துலாம்



உங்களின் தேவை ஒன்றை மற்றவர்கள் செலவில் முடித்துக் கொள்வீர்கள். உடல் ரீதியான சிறு உபாதைகளால் உள்ளம் சோர்வடையலாம். ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். சக ஊழியர்கள் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். கூட்டுத் தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம்.

### விருச்சிகம்



பல நாள்களாக பார்க்காத உறவினர் ஒருவரை அவர்களின் வீட்டிற்கு சென்று பார்க்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்களுக்காக சில விடயங்களை விட்டுக் கொடுத்து, நீங்கள் சிரமங்களை எதிர்கொள்ளலாம். விரும்பாத ஒருவரை முக்கியமான இடத்தில் சந்திக்கலாம். கோபம் அதிகரிக்கும்.

### தனுசு



காலை முதல் மாலை வரை பரபரப்பாகச் செயற்படுவீர்கள். பெண்கள் சிலர் மூலம் உதவிகள் கிடைக்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரியாமல் சில தவறுகளைச் செய்வீர்கள். கடின உழைப்பு ஒன்றுக்கு பலன் கிடைக்கும். புதிய இடம் ஒன்றுக்குச் செல்ல நேரிடலாம். உறவினர்கள் சிலர் உங்களிடம் மனம் விட்டுப் பேசுவர். நாவன்மை கூடும்.

### மகரம்



குடும்ப உறுப்பினர்கள் சிலருடன் வாக்குவாதம் செய்யலாம் அல்லது சண்டை போடலாம். துவங்கிய சில வேலைகளில் தடைகள் ஏற்பட்டு பின்னர் முடிவுக்கு வரும். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். உங்களின் ரகசியம் ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொள்ளலாம். பயணங்களுக்காக, பொழுது போக்கு விடயங்களுக்காக செலவு செய்யலாம்.

### கும்பம்



பொறுமை, சகிப்புத்தன்மையுடன் செயற்பட வேண்டும். சிலர் உங்களை சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. பல நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை திடீரென சந்திக்கலாம். சிவாலய வழிபாட்டின் மூலம் நிம்மதி பெறலாம்.

### மீனம்



தர்ம, புண்ணிய காரியங்கள் செய்வதில் நாட்டம் செல்லும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசலாம். சக ஊழியர்கள் சிலர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். மறதியைத் தவிர்க்கவும்.


## சர்வதேச சமாதான தினம் புரட்டாதி 21-2010



சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் ஒருங்கிணைப்பில்

"நல்லிணக்கம் சமாதானத்திற்கான வழி"

கலை நிகழ்வில் கலந்துகொள்ள அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்

கிளிநொச்சி/புனித திரேசா பெண்கள் பாடசாலை மைதானத்திற்கு காலை 10 மணிக்கு

### அதிபரின் சமாதானச் செய்தி

நல்லிணக்கத்தினூடாக அமைதியான சமூகத்தை உருவாக்குவோம்

"சமாதானம்" என்பது அரசியலுடன் கலக்கப்பட்ட வியாபாரச் சொல்லாக எம் அனைவராலும் நோக்கப்படும் நிலையில் உள்ளது. தவிர, அரசியலிலும், உலக அரங்கிலும் பதவிக்கு ஏணியாக, பணத்திற்கான ஒரு சந்தையாக சமாதானம் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இந்நிலைமை வருந்தத்தக்கதொன்றாகும்.

சமாதானம், அரசியல் விடுதலையை மட்டும் குறித்து நிற்கும் ஒரு பதம் அல்ல. மாறாக தேசிய, இன, மத, மொழி, பண்பாட்டின் எல்லைகளைக் கடந்து ஆன்மீக விடுதலையையும் குறித்து நிற்கும் ஒரு பதமாகும்.

மக்கள் இன்மொழிபேசி, இரக்கம் காட்டி, உயிர்களுக்கு மதிப்பளிப்பது, ஒன்றுபட்டு, வேற்றுமையில் ஒற்றுமையாய் வாழ்வது சமாதானத்தின் சிறப்பாகும். பண்பாட்டின் வேற்றுமைகளைக் கொண்டாடுவதை விடுத்து, அவற்றை முரண்பாட்டின் காரணங்களாகப் பாவித்தல் கூடாது. இன, மத, மொழி, தேசிய அவலங்களால் பல உயிர்களைப் பறிகொடுத்து துன்பியல் வாழ்வை அனுபவிக்கும் நாம், சமாதானத்திற்காக ஒன்றுபடுவோம். குறிப்பாக வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி நகர்ந்து, சமாதானப் பண்பாடொன்றை எம் மத்தியில் உருவாக்குவோம். சமாதானப் பண்பாடென்பது நல்விழுமியங்களின், மனநிலைகளின், நடத்தை முறைகளின், வாழ்க்கை வழிகளின் தொகுப்பு, மட்டுமன்றி, இது வன்முறையை விடுத்து முரண்பாட்டைத் தடுத்து, தனித்துவங்களை மதிக்கும் ஒரு பண்பாகும்.

ஆகவே, மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள் அனைத்து சமூக நலன்விரும்பிகள் ஆகிய நாம் எல்லோரும் இணைந்து இத்தினத்தில் எமது சமூகத்தை நற்பண்பாடு கொண்ட சமூகமாகவும், சமாதானத்தைக்கொண்ட சமுதாயமாகவும் கட்டியெழுப்ப இன்றே உழைப்போமாக.

"நல்லிணக்கம் சமாதானத்திற்கான வழி"

- அதிபர்
யா/மயிலிட்டி றோ.க.த.பாடசாலை

*சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்.*
*# 8, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.*


## சனசமூக பிரதிநிதிகளுக்கு விசேட கூட்டம்

தென்மராட்சி, செப்.21

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையப் பிரதிநிதிகளுக்கான விசேட கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சனசமூக நிலையத்தின் வங்கிப் பாஸ்புத்தகம், நிர்வாக அறிக்கை, பொதுக்கூட்ட அறிக்கை ஆகியவற்றுடன் நிலையத் தலைவரையும் செயலாளரையும் வருகை தருமாறு நகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஐ-207)

## பௌர்ணமி தினத்தில் விசேட கலந்துரையாடல்

சுழிபுரம், செப்.21

சுழிபுரம் வடக்கு, யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் ஒவ்வொரு மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று பி.ப.3 மணி தொடக்கம் 5 மணி வரைக்கும் சமய விழுமியங்கள் பற்றியும், கிரியைகள் செய்யப்படுவதன் நோக்கம் பற்[illegible] [illegible] இடம்பெறும்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லத்துரை
**பூபாலசிங்கம்**

மலர்வு
21★05★1930

உதிர்வு
02★10★2009

திதி: 21.09.2010

ஆண்டு ஒன்று போனதுவே உமைப்பிரிந்து
ஆனாலும் இன்னும் ஆறவில்லை எம் துயரம்
ஆருயிர்த் தெய்வமே அன்பான ஐயாவே-எங்கள்
ஆண்டவனாய் நின்று ஆறுதலைத் தந்திடுங்கள்

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (10347)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் சுரேஸ்குமார்



ஆனைக்கோட்டை, கூழாவடியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொறன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சுரேஸ்குமார் நேற்று முன்தினம் 19.09.2010 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும் விதுரசனி(சிந்து), கஜகேசன் (கபில்), சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவீந்திரன், ஜீவகாந்தி, பிரபாகரன், ஜனனி, அமரர் உமாசுதன் (சுதன்) ஆகியோரின் சகோதரரும் சற்குணம், உசேனி (குவைத்), விசாகினி, அமரர் கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும் உஷாநந்தினி, கோபிநாத், ரிசிகேசன், பிரசாந் ஆகியோரின் மாமனும் சியாமளன், சாருஜன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தந்தை, சகோதரங்கள்
தொ.பே: 0213216264

கனடா.
தொ.பே:- 0014167476305


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் இரகசியம்

வீட்டிலே மனைவியின் தொந்தரவு தாங்கமுடியவில்லை!
''கிரைண்டர்'' ஒன்று வேண்டுமாம் .. ஒரே பிடிவாதம்!
அது தேவைதானே... வாங்கிக் கொடுங்களேன்!
பேசாமல் தென்கொரியாவில் பிறந்திருக்கலாம் போலிருக்கிறது.
என்ன சொல்கிறீர்கள்!''

அங்கே கியூன்னியா என்கின்ற ஒரு மலைப்பகுதி... கடல் மட்டத்தில் இருந்து 650 உயரம். அங்கே 100 குடும்பம் இருக்கின்றது. அந்த ஊரில் அடுப்பே எரிப்பதில்லை!

அப்படி என்றால்...?

அங்கே சமைப்பதில்லை பச்சையாகவே உண்ணுவார்கள்... பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள் இவைதான் ஆகாரம். மூன்றுவேளையும் இவைதான் சாப்பாடு. எந்த வீட்டிலும் அடுப்பே இல்லை...!''

ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!

அந்த ஊரில் அடுப்பு எரிக்காமையால், புகை வருவதில்லை. சுத்தமான காற்றை சுவாசிக்கிறார்கள்... இயற்கை தருவதை அப்படியே சாப்பிடுவதனால் எந்த நோயும் வருவதில்லை... சின்னத் தலைவலி கூட யாருக்கும் வருவதில்லை... எல்லோருமே ஆரோக்கியமாக வாழ்கின்றார்கள். 90 வயது, 100 வயது ஆசாமிகள் எல்லாம் அங்கே சர்வ சாதாரணம்!

நாங்களும் அப்படி உண்டால், நல்லதுதானே

நல்லதுதான்... இருந்தாலும் என்னால் அது முடியாது.. மனைவியை சமாதானப்படுத்துவது மிகவும் கடினம். ''கிரைண்டர்'' தொந்தரவு மிகவும் பெரிதாக இருக்கின்றது...!

நான் உங்களை மாதிரி இல்லை!

அப்படியா?

என் மனைவி இதுபோல் சமையல் சம்பந்தமான எதையும் கேட்டுத் தொந்தரவு செய்ய நான் இடம் கொடுக்கமாட்டேன்!

அதற்கு என்ன செய்வீர்கள்!

நானே சமைத்து விடுவேன் என்றார்.

கோ.சுவாமிநாதன்.

# கஸ்டங்களைக் கஸ்டப்படுத்துவோம்

தருமரின் தலையில் மகுடம் சூடும் நாள் பட்டாபிசேஷகம் முடிவடைந்து கண்ணன் புறப்பட ஆயத்தமாகும் போது தருமர், அருச்சுனன், பீமன், நகுலன், சகாதேவன் அனைவரையும் வணங்கி விட்டுத் தேரில் ஏறினான்.


குந்திதேவியை வணங்க மறந்த கண்ணன் தேரில் இருந்து இறங்கி வந்து குந்தியை வணங்கினார். அப்போது குந்தி வரம் கேட்டாள். கண்ணா கஸ்டங்கள் வேண்டும், துன்பங்கள் வேண்டும், இன்னும் இன்னும் இன்னல்கள் வேண்டும். அனைவருக்கும் அதிர்ச்சி. அத்தை நீ பட்ட கஷ்டங்கள் போதாதா. பிறந்த வீட்டில் நீ வரைவில்லை பெற்ற பிள்ளை கர்னனை நீ வளர்க்கவில்லை. இன்னும் எவ்வளவு துன்பங்கள் பட்டாய். பிறகேன் கஷ்டத்தைக் கேட்கிறாய்?



என் ஒவ்வொரு கஷ்டத்திலும் நான் யாரை நினைத்தேன். உன்னைத்தானே. நீ தான் என்னைக் காப்பாற்றினாய். கஷ்டங்கள் வரும் போதுதான் உன்னை நினைக்கிறேன். அதனால்தான் கஷ்டங்களைக் கேட்கிறேன். இது தான் குந்தி தவம். கஷ்டங்கள் தான் கடவுளை ஞாபகப்படுத்துகிறது.

சுகி.சிவம்

# தாழ்வு மனப்பாங்கு தவிர்க்கப்பட வேண்டியது



இன்றைய உலகில் மனிதர்கள் எவ்வளவு உயர்வான நிலையில் இருந்தாலும் தாழ்வு மனப்பாங்கில் சிக்குண்டு மீழ்ச்சி காணமுடியாமல் தவித்துக் கொண்டிருப்பது இயல்பு.

இத் தாழ்வு மனப்பான்மைக்கு உளவியல் ஆய்வாளர்கள் கூறும் கருத்தை நோக்குவோமானால், தாழ்வு நிலையை இரண்டு வகையாகக் கொள்ளலாம்.

I. சிற்றம்சம்,

II.பேராம்சம்

எஸ்.செந்தமிழ்

இதில் சிற்றம்சமானது குழந்தைப் பருவத்தில் தவறான முறையில் வளர்க்கப்படுகின்றமை, பேரம்சமானது ஒடுக்கப்பட்ட உணர்வுகள், பாதிக்கப்பட்ட செயல்களினால் ஏற்படுகின்றது.

ஒரு குழந்தையை அடக்கி, ஒடுக்கித் தவறான முறையில் வளர்க்கும் போது அக் குழந்தை வளர்ந்து பெரியவனாகியதும் அதன் செயற்பாடுகளில் பல்வேறுபட்ட மாற்றங்களை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அதாவது பிறரோடு பழகக் கூச்சம் கொள்வது, எவ்விடயங்களாயினும் விலகி நிற்பது, தன்னைப் பற்றிக் குறைவாக எண்ணிக்கொள்வது, எதையும் ஒருவித சலிப்போடு நோக்குவது, எந்தச் செயலைச் செய்யும் பொழுதும் படபடப்புடன் காணப்படுவது இது போன்ற அறிகுறிகளை இப்படிப்பட்ட பிள்ளையிடம் நாம் காணக்கூடியதாக இருக்கும்.

இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம் என்னவெனில் மனங்களுக்குள் மறைந்து கிடக்கும் பயம் தான். நான் பார்க்கும் வேலையில் தவறு உண்டாகி விடுமோ, நம்முடன் சேர்ந்திருப்பவர்கள் எமக்குக் துரோகம் செய்து விடுவார்களோ, நாம் எடுத்திருக்கும் இந்த வேலை தோல்வியில் முடிந்து விடுமோ என்று சிந்தித்துச் சிந்தித்து, கடைசியில் தொடங்கிய காரியங்கள் தோல்வியில் முடிய, தம் விதியின் மேல் பழியைப் போட்டுத் தமக்குள்ளே ஒருவித தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

எமக்குள் வீடுகட்டிக் குடிகொள்ளத் துடிக்கும் தாழ்வு மனப்பான்மையை நாம் விரட்டியடிக்க வேண்டுமானால் நாம் இதுவரை காலத்திலும் பெற்றுக் கொண்ட வெற்றிகளையும், எமக்குள் காணப்படுகின்ற தனித்திறமைகளையும் சிந்தித்து மகிழ்ச்சி அடைய வேண்டும். இவ்வாறு செய்து கொள்வோமானால் எமக்குள் இருக்கும் தாழ்வு மனப்பாங்கை விரட்டி அடிப்பதோடு; தோல்விகளை எதிர்த்துப் போராடும் ஆற்றல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுவாக அனைவருமே, நாம் தொடங்கும் ஒவ்வொரு செயல்களுமே வெற்றி பெறுவதோடு, அனைவரினதும் நன்மதிப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்துடன் எமது முழு சக்தியையும் பயன்படுத்திச் செயலாற்றுகிறோம்.

இருப்பினும் அதில் சிறிய தவறு ஏற்பட்டுவிட்டால் எங்களுடைய தன்மானம் (கௌரவம்) பாதிக்கப்பட்டதாக நினைத்து நாமே எங்கள் மனதுக்குள் எம்மைப்பற்றிக் குறையாக எண்ணிக்கொண்டு தாழ்வு மனப்பான்மையை எம்வசப்படுத்தி விடுகிறோம்.

இன்னும் சிலர் இயற்கையால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் குறைபாடுகளால் தமக்குள்ளே ஒரு விதமான தாழ்வு எண்ணத்தை வளர்த்துக் கொண்டு, இந்த உலகிலே தம்மால் வாழ முடியாது என்ற உணர்வையும் ஏற்படுத்தி இவ் உலகில் இருந்து விடுபட்டோ, விலகியோ இருக்க விரும்புகிறார்கள். சிலர் தற்கொலை முயற்சியில் கூட ஈடுபடுகிறார்கள். இது மிகவும் தவறாகும்.

இந்த உலகில் இறைவனால் படைக் கப்பட்ட ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொரு விதமான குறைபாடுகள் இருக்கும் என்பது யதார்த்தம்.

இப்படிப்பட்ட இயல்பு கொண்டவர்கள் ஒன்றைமட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் இறைவன் உங்களிடம் அழகைக் குறைத்துக் கொண்டான் என்றால் ஏதே ஒரு விதமான திறமையைக் கட்டா யம் கொடுத்திருப்பான். அழகை விடத் திறமை தான் மேன்மையானது. அழகானது இளமையுடன் கூடவே மறைந்து சிதைந்து போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.etisalat.lk
0722 123 123

# யாழ்ப்பாணத்தில் வாங்கும் சிம்களுக்கு ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்

இந்தியா - ரூ.2.00

கனடா - ரூ.2.50

அமெரிக்கா - ரூ.2.50

யூகே - ரூ.2.50
(நிலையான தொலைபேசிகளுக்கு)

குறைக்கப்பட்ட கட்டணங்களை அனுபவிக்க
IDD இலக்கத்திற்கு முன்
100 ஐ டயல் செய்து அழைக்கவும்

இன்றே சிம்மொன்றை வாங்கிக்கொள்ளுங்கள்!

பிரதான விற்பனை முகவர்:
ஆர் அன்ட் ஆர் டெலிகொம் யாழ்ப்பாணம் (பிரைவேட்) லிமிட்டட்
127, M.P.C.S. கட்டிடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கான தீர்வை அவசரமாகக் கருதாமல் பதவி நீடிப்புக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொக்குவில் கிளை அலுவலகம் மற்றும் தொழில்பயிற்சி நிலையம் ஆகியன கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் உள்ள கட்டடத்தில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன.**

**அந்நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆற்றிய உரை இது.**

**18ஆவது திருத்தத்துக்கு எதிராக கூட்டமைப்பு ஏன் வாக்களித்தது என்பது குறித்து விளக்கமளிக்கும் வகையில் அமைந்தது அவரது உரை.**

கடந்த 08.09.2010 அன்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 18ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த நிலைப்பாடு குறித்து எம்மை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்த மக்களுக்கு விளக்கம் அளிக்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு. அந்த அரமைப்புத் திருத்தத்துக்கு எதிராக ஏன் வாக்களித்தோம் என்பது குறித்து சகலரும் அறியவேண்டியது அவசியமாகும்.

### 13 ஆவது திருத்தத்திற்கும் அப்பால்

1987ஆம் ஆண்டு இந்திய -இலங்கை ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தப்படி அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஒன்றின் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மக்களின் அபிலாஷைகளை அந்தத் திருத்தம் பூர்த்தி செய்யவில்லை எனத் தமிழர் தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் கொண்டுவரப்பட்ட இந்த 13 ஆவது திருத்தம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஆரம்பமே என்றும் எதிர்காலத்தில் அது விரிவுபடுத்தப்படும் என்றும் இந்தியத் தரப்பு சார்பில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அப்போதைய பிரதமர் ராஜிவ்காந்தி எழுத்து மூலம் கடிதம் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதன் பின்னர் தமிழர் தரப்பின் அழுத்தங்கள் காரணமாக 13 ஆவது திருத்தத்தை விரிவுபடுத்த முயற்சிகள் இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்டன.

சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் மங்கள முனசிங்க தலைமையிலான குழு, 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் அதிகாரங்களைப் பகிர்வது குறித்து விரிவாக ஆராய்ந்தது. அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்தபோது, அனைத்துக் கட்சிக் குழுவை அமைத்தார். 13 ஆவது திருத்தத்தில் மேலும் திருத்தங்களைச் செய்து மேலும் அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பாக ஆராய்வதற்கே இந்தக் குழுவை அவர் நியமித்தார்.

13ஆவது திருத்தத்துக்கு அப்பால் அதிகாரங்களைப் பகிரப்போவதாக அடிக்கடி அவர் கூறி வந்தார்.

ஆனாலும் ஆயுதக் குழு இருக்கும் போது அதிகாரங்களை பகிரமுடியாது. அவர்கள் இல்லாமல் போனால்தான் அதிகாரங்களைப் பகிர்ந்து அவற்றை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி கூறிவந்தார்.

அர்த்தமுள்ள சமஷ்டி அடிப்படையிலான எமது பிரதேசத்தை நாமே நிர்வகிக்கக்கூடிய சுயாட்சி அதிகாரம் கொண்ட தீர்வு ஒன்றையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர் என நாம் தேர்தலில் தெரிவித்தோம். அதற்கு தமிழ் மக்கள் எமக்கு ஆணை தந்தார்கள்.

தேர்தல் முடிந்த பின் ஜனாதிபதியுடன் பேசியபோது தமிழ்மக்கள் தந்த ஆணையை அவருக்குத் தெரிவித்தோம். எமது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வே வழங்கவேண்டும் என நாம் அவரிடம் வலியுறுத்தினோம்.



13 ஆவது திருத்துத்துக்கு அப்பால் சென்று தீர்வு ஒன்றைக் காண ஏற்பாடு செய்வேன் என்று அப்போது ஜனாதிபதி எம்மிடம் கூறினார்.

அதன் பின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருடன் நாம் நடத்திய பேச்சுக்களிலும் இதே கருத்தையே வலியுறுத்திவந்தோம்.

### இருந்தவையும் பறிமுதல்

ஆனால் திடீரென 18 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் திருத்தத்தில் நாட்டின் முக்கியமான இனப் பிரச்சினைக்கு தீர்வு எதுவும் இல்லை.

## 18 ஆவது திருத்தத்தை கூட்டமைப்பு எதிர்த்து வாக்களித்தமைக்கான காரணம்

இருந்த ஒரு சில அதிகாரங்களையும் பறிக்கும் திருத்தமாகவே அது வந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி இரண்டாவது பதவிக் காலத்தை இன்னும் ஆரம்பிக்காத நிலையில் அவசரப்பட்டு இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இந்தத் திருத்தம் குறித்து எம்முடன் ஜனாதிபதி பேசினார். நாங்கள் அந்தத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்தோ ஆதரவு அளிப்பது குறித்தோ அவரிடம் கருத்துக் கூறவில்லை. இந்தத் திருத்தம் குறித்து நாங்கள் சிந்திக்கத் தயாரில்லை என்று கூறினோம்.

13ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை பறிக்கும் வகையில் 18ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. 13 ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிர்வாக, பொலிஸ் அதிகாரங்கள் 18ஆவது திருத்தத்தின் கீழ் மத்திய அரசு வசமாகியுள்ளன.

## கொக்குவில் தொழில் பயிற்சி நிலையத்தின் திறப்பு விழாவில் சுமந்திரன் எம்.பி விளக்கம்

23 வருடப் போராட்டத்தைக் கூடக் கணக்கில் எடுக்காது, அரசு செயற்பட்டிருக்கிறது.

நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், 13ஆவது திருத்தத்தில் இருந்த அதிகாரங்களைக் கூட அரசு இப்போது பறித்துவிட்டது. சில அதிகாரங்கள் நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் அவை சட்டத்தில் இருந்தன. அந்த அதிகாரங்களை எவ்வாறு எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சிந்திக்காமல் 18 ஆவது திருத்தம் மூலம் அவை பறிக்கப்பட்டுவிட்டன. அதிகாரங்களை பறித்துக் குறைத்தது நாட்டுக்கு கேடு விளைவிக்கும் செயலாகும். எமக்குத் தீங்கான விடயமாகும்.

ஜனாதிபதி பதவிக்காலம் நவம்பரில் முடிந்து இரண்டாவது பதவிக்காலம் தொடங்கி மேலும் 4 வருடங்கள் அவகாசம் இருக்கும்போது அவசரப்பட்டு மூன்றாவது பதவிக்காலத்துக்காக 18ஆவது திருத்தத்தை அரசு கொண்டு வந்துள்ளது. நாட்டின் அவசர பிரச்சினையாக இருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காணமுயலாமல் பதவிக் காலத்தை நீடிப்பதில் அவசரம் காட்டப்பட்டுள்ளது.

இது ஏன் என்பது எமக்குப் புரியவில்லை.

### தவறான வாதம்

13ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பறிக்கும் இந்த 18ஆவது திருத்தத்தை ஏன் ஆதரிக்கிறீர்கள் என நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று எம்.பிக்களிடமும் எமது சக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கேள்வி எழுப்பினார். 13 ஆவது திருத்தம் அரைகுறைத் தீர்வு என்று நீங்கள் கூறிக்கொண்டிருக்கிறீர்களே என்று அவர்கள் பதில் கூறினர்.

அது உண்மையில் அரைகுறைத் தீர்வுதான். ஆனால் அதில் இருந்து மேலே செல்லவேண்டும். அதைவிடுத்து அதில் உள்ள அதிகாரங்களையே பறிக்கும் 18 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு கொடுக்க முடியுமா? அதற்காகவே அந்தத் திருத்தத்தை எதிர்க்க நாம் முடிவு செய்தோம்.

ஏதோ தெரியவில்லை. 18 ஆவது சட்டத் திருத்தத்தின் பிரதியை வாசிக்க முன்பே அதற்கு ஆதரவு கொடுக்க பலர் முன்வந்தார்கள். திருத்தத்தை வாசிக்காமல் முஸ்லிம் காங்கிரஸ் முழுதாக அரசுப் பக்கம் போனது. ஐ.தே.கவின் எம்.பிக்கள் பலர் போனார்கள். ஏன் எமது உறுப்பினர் ஒருவர் கூட அரசுப் பக்கம் போனார்.

திருத்தத்தில் என்ன இருக்கிறது என்று அமைச்சர்களுக்கோ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ தெரியாது. நாடாளுமன்றத்தில் அத்திருத்தம் சமர்ப்பிக்கும் வரை அதில் என்ன இருக்கிறது என்று எவருக்கும் தெரியாது.

ஏன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பின் கூட அதில் என்ன இருக்கிறது என்று எவருக்கும் தெரியாது.

இச்சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது சட்டப் பிரச்சினை ஒன்றை நான் எழுப்பினேன்.

### திருத்தச் சட்ட பிரதி வழங்கவில்லை

இந்தச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. அதன் பிரதி எவருக்கும் வழங்கப்படவில்லையே என்று சபாநாயகரிடம் கேட்டேன். அவருக்குக் கூட பிரதி வழங்கப்படவில்லை.

எனது சட்டப்பிரச்சினைக்குப் பின்புதான் அவசர அவசரமாக அந்தத் திருத்தத்தின் பிரதி எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

சட்டத் திருத்தத்தில் என்ன இருக்கிறது என்று தெரியாமலேயே நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்க முன்வந்தார்கள். பச்சைப் பசேலான பகுதிக்கு தாவிச் சென்றார்கள்.

இந்தச் சட்டத் திருத்தத்துக்கு ஆதரவு தரவேண்டும் என்று எம்மிடம் கேட்டார்கள். இந்தச் சட்டத்தை ஆதரித்தால் ஜனாதிபதி பல நன்மைகளைச் செய்வார் என்று எம்மிடம் கூறினார்கள்.

ஜனாதிபதிக்கு இவர்கள் உதவி செய்யாவிட்டால் இவர்களின் மக்களுக்கு ஏன் உதவவேண்டும் என்று ஜனாதிபதி கேட்பதாக எமக்குக் கூறப்பட்டது. எமக்கு பயம், அச்சம் ஊட்டக்கூடிய வகையில் செயல்கள் முன்னெடுக்கப்பட்டன.

### நாம் மானத்தை விற்கவில்லை

எதிர்காலத்தில் பின்விளைவுகள் எதுவாக இருந்தாலும் தன்மானத்துடன் இருப்போம். சாத்திரத்தில் தவறுவிடவில்லை என்பதை பதிவுசெய்வோம் என்பதற்காக எதிர்த்து வாக்களிக்க முடிவு செய்தோம். எமது மக்களின் மானத்தை நாம் விற்கவில்லை.

வழங்கப்பட்ட அதிகாரங்களை பறிக்கும் 18 ஆவது சட்டத் திருத்தத்தை எதிர்த்தோம். வரலாற்றில் முக்கிய இடத்தை பதிவு செய்தோம்.

எமக்கு அச்சுறுத்தல் ஏதாவது வந்தாலும் எம்மை தெரிவுசெய்த மக்களுக்கு பாதிப்பு வரும்போது அதற்கு இடமளிக்காத வகையில் செயற்படுவோம். எமது அடிப்படைக் கொள்கையில் இருந்து விலகமாட்டோம்.

### அரசியல் குழுவைப் புறக்கணித்தது ஏன்?

உயர்மட்ட நியமனங்களுக்காக அரசமைப்புச் சபை ஒன்று முன்னர் இயங்கி வந்தது. 18ஆவது சட்டத் திருத்தத்தின் கீழ் அது நாடாளுமன்றக் குழு என மாற்றப்பட்டுள்ளது.

அந்தக் குழுவுக்கு கூட்டம் கூட இடமில்லை. அதற்குத் தலைவர் இல்லை. அந்தக் குழுவில் இடம்பெறுபவர்கள் எல்லோரும் உயர் மட்டத்திலான நியமனங்களுக்குச் சிபார்சு செய்யும் வேலையை மட்டுமே செய்வார்கள். அத்தகைய குழுவில் நாம் இடம்பெறவேண்டுமா?

அந்தக் குழுவின் உறுப்பினராக என்னை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்தார். எமது மக்களின் நலனுக்கு,மறுவாழ்வுக்கு அந்தக் குழு உதவமாட்டாது என்ற காரணத்தால் அதை ஏற்க மறுத்துவிட்டேன். அந்தக் குழுவில் அங்கம் பெறுவதன் மூலம் உயர் பதவிகளுக்கு ஆள்களை நியமிக்கும் போது சிபார்சுகளை மட்டுமே செய்ய முடியும். அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது.

அத்தகைய குழுவில் இடம்பெற்று எமது மக்களின் அபிலாஷைகளுக்கு தீர்வு எதையும் காணமுடியாது என்ற காரணத்தால் அதை ஏற்க மறுத்தேன்.

ஜனாதிபதி வழங்கிய சலுகைகளை நாங்கள் ஏற்காததால், சந்தர்ப்பத்தை இழந்துவிட்டோம் எனக் கூறலாம். இந்தச் சிறு சலுகைகள் அல்ல எமது இலக்கு. என்ன காரணத்துக்காக எமது மக்கள் எமக்கு ஆணை தந்தார்களோ அந்த ஆணையை நிறைவேற்றவே அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

எமது எதிர்கால சந்ததியினரின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு உதவ வேண்டும். அந்தச் சிந்தனையின் வெளிப்பாடாகவே இன்று தொழில்பயிற்சி ஆரம்பிக்கப்படுகிறது.

எல்லாவிடயத்திலும் வீழ்ந்துவிட்ட இனமாகிவிட்டோம் என்று சிந்திக்காமல் விரக்தி, தோல்வி நிலையில் உள்ள மக்களை மீண்டும் எழவைக்கவேண்டும். அந்த மக்களின் அரசியல் தீர்வுத் தேவைக்கு அப்பால் அவர்களை பொருளாதாரத்தில் மேல் நிலைக்குக் கொண்டுவர செயற்பாடுகள் முன்னெடுக்க வேண்டும்.

எமது இளம் சந்ததியினருக்கு உதவும் வகையில் தொழில் பயிற்சிகளை நாம் வழங்கவேண்டும். கணனிப் பயிற்சிகள் வழங்கவேண்டும்.

இந்த வகையில் எமது சக உறுப்பினரான ஈ.சரவணபவன் இன்று ஆரம்பித்து வைக்கும் தொழிற்பயிற்சித் திட்டம் சகல இடங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும். இதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

பொருளாதாரத் துறையில் எமது மக்கள் மேம்பட வேண்டிய திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். அப்போதுதான் நாங்கள் வீழ்ந்த இனமல்ல என்பதைக் காட்டமுடியும் - இவ்வாறு சுமந்திரன் கூறினார். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.03.1994

✱மண்டைதீவுப் பகுதியிலிருந்து படையினரால் யாழ்.நகர குடியிருப்புப் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் நான்கு பொது மக்கள் பலியானதாகத் தெரிவிப்பு.

✱இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா எதிர்காலத்தில் நேரடியாகச் செயற்பாட்டில் இறங்காது என இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலாளரும் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதருமான ஜே.என்.டிக்ஸிற் தெரிவிப்பு.

17.03.1994

✱இலங்கையின் வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் போரை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்த வேண்டும் என ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 50ஆவது கூட்டத் தொடரின்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱யாழ்ப்பாண நிலைமைகளை அறிவதற்காக யாழ்ப்பாணம் வரமுயலும் பௌத்த பிக்குகளை தடுக்கும் முயற்சி கொழும்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

18.03.1994

✱சமீபகாலமாக கொழும்பில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழர்களில் அனேகமாக முழுப்பேருமே அப்பாவி மக்களாவர் என இலங்கை அரசின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு.

✱வட பகுதியில் முக்கிய இராணுவ முகாம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை தெரிவிப்பு.

19.03.1994

✱வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அகதிகளுக்கும், உறவினர்களுடன் தங்கியுள்ள அகதிகளுக்கும் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தை இம் மாதத்துடன் நிறுத்தி விடுமாறு அரசு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிப்பு.

✱பிரபாகரனால் வழி நடத்தப்படும் விடுதலைப் புலிகள் இயக்கம் இன்றைய மிகப்பெரிய கெரில்லாப்படை என இந்திய அமைதிப் படையின் பணியாற்றிய மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா தெரிவித்திருப்பதாக 'சண்டே' சஞ்சிகை தெரிவிப்பு.

20.03.1994

✱தென்மாகாண சபைத் தேர்தலில் கலவரங்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தில் அங்கு பொலிஸ் கொமாண்டோக்கள் அரசினால் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱வடக்கு - கிழக்குக்கு வெவ்வேறான இரு நிர்வாகக் கூறுகளை அமைத்து தனியான நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க தெரிவிப்பு.

21.03.1994

✱தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நல்லூரில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சர்வோதயத் தலைவர் ஆரிய ரத்னாவாலும் கிறீஸ்தவ மத குளுக்களாலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அரசாங்கம் ஆதரவு வழங்கவில்லை என ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

22.03.1994

✱மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகாவைப் படுகொலை செய்ய சதித்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாக அம்பாந்தோட்ட மாவட்ட எம்.பியான மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு முறை யீடு.

✱தென்மாகாணத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் ஜனாதிபதி விஜேதுங்க விடுதலைப் புலிகள் தொடர்பாக வெளியிட்டுவரும் கடும் போக்குக் கருத்து தொடர்பாக தென்மாகாண மக்கள் அக்கறை காட்டவில்லை என பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு.

23.03.1994

✱இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் ஈடுபட்டுள்ள கிறீஸ்தவ மதகுழு ஒன்றுடன் அமைச்சர் தொண்டமானும் கனடாவுக்குச் செல்ல உள்ளதாகத் தெரிவிப்பு.

✱சபாநாயகர் எம்.எச்.முகம்மதுவின் யாழ்ப்பாண விஜயத்துக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

24.03.1994

✱இனவாத அடிப்படையில் ஜனாதிபதி விஜேதுங்க மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் முட்டாள்தனமானவை என 'சண்டே ஐலன்ட்' ஆங்கிலவார இதழ் விமர்சிப்பு.

✱அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வேட்பாளராக டி.பி.விஜேதுங்கா இருப்பாரா என்பதையும், சந்திரிகாவின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதையும் இன்று நடைபெறும் தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் நிர்ணயிக்கும் என 'வெரித்தாஸ்' வானொலி தெரிவிப்பு.

25.03.1994

✱தென்மாகாணசபை தேர்தலில் முதலில் கிடைத்த தேர்தல் முடிவுகளின்படி எதிரணியினர் அமோக வெற்றியீட்டும் நிலையில் இருந்ததாக பத்திரிகைகள் தெரிவிப்பு.

✱சிங்களவர்கள் தோல்வியடைந்த இனமாக வாழ்வதிலும் பார்க்க தெய்வேந்திர முனையில் இருந்து கடலினுள் பாய்ந்து இறப்பது நல்லது என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க றுகுணு மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவிப்பு.

26.03.1994

✱ஜனாதிபதி விஜேதுங்காவின் பேரினவாதக் கொள்கையை தெற்கு மக்கள் நிராகரித்துள்ளமை தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் மூலம் புலப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

✱இனவாத அரசியல் முழு நாட்டுக்கும் சாதாரண மக்களுக்கும் ஏற்புடையதல்ல என்பதை தென்மாகாணசபைத் தேர்தல் முடிவு உறுதி செய்கிறது என சந்திரிகா பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.

27.03.1994

✱இடம்பெயர்ந்து சென்று இந்தியாவில் அகதி முகாமில் வசித்துவிட்டு அண்மையில் நாடு திரும்பிய குருநகரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் எங்கள் பிறந்த மண்ணில் வாழ்வதுபோல எங்குமே வாழ முடியாது என கருத்துத் தெரிவிப்பு.

✱நாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என சந்திரிகா பி.பி.ஸி. வானொலிக்குத் தெரிவிப்பு.

28.03.1994

✱நிதிப் பற்றாக்குறை காரணமாக 75 கோடி ரூபாவிற்கு ஐந்து யுத்தக் கப்பல்களை வாங்கும் திட்டத்தை இலங்கை அரசு கைவிட்டு உள்ளதாக அறிவித்துள்ளமை கடற்படைத் தளபதிக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிப்பு.

✱சிறுபான்மை மக்களை ஒதுக்கிவிட்டு அரசியல் நடத்த இயலாது என்பதை தென்மாகாணசபைத் தேர்தல் உறுதி செய்திருப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

29.03.1994

✱மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகாவை, இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் சந்தித்து நாட்டின் நிலைவரம் தொடர்பாக பேசியதாகத் தெரிவிப்பு.

✱இராணுவக் கட்டமைப்பில் மாற்றம் மேற்கொள்ளுமாறு அரசுக்குச் சிபார்வு செய்யப்பட்டிருப்பதாக 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தெரிவிப்பு.

30.03.1994

✱வடக்கு - கிழக்கு யுத்தத்துக்காக இலங்கை அரசு மேலும் 300 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் யுத்த தளபாடங்களையும் ரஷ்யாவிடமிருந்தும் தென்னாபிரிக்காவிடமிருந்தும் கொள்வனவு செய்யவிருப்பதாகத் தெரிவிப்பு.

31.03.1994

✱விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக யாழ்ப்பாணம் செல்லவிருந்த சபாநாயகர் எம்.எச்.முகம்மது தமது விஜயத்தை ஒத்திவைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

# சேதமடைந்த பொலிஸ் நிலையச் செயற்பாடு ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தில்

கொழும்பு, செப்.21

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் கடமைகள் ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படும் எனப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளும், அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்களும் இதுவரை மேற்கொண்ட பரிசோதனைகளுக்கு அமைய கரடியனாறு பொலிஸ் வளாகத்தில் இடம்பெற்ற வெடிச் சம்பவம் திடீர் விபத்தினால் ஏற்பட்டதென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த வெடிச்சம்பவம் எந்த விதத்திலும் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்பு டையது அல்ல.

இதேவேளை கரடியனாறு பொலிஸ் நிலையக் கட்டடம் முற்றாக சேதமடைந்துள்ளதால் பொலிஸ் நிலையத்தின் கடமைகளை ஆயித்தியமலைப் பொலிஸாரினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த கரடியனாறு பொலிஸ் நிலையம் மிக விரைவில் புனரமைக்கப்படும். - இப்படி அந்த அறிக்கையில் உள்ளது. (சி)

## காயமடைந்த பொலிஸாரில் 16 பேர் கொழும்புக்கு

கொழும்பு, செப்.21

கரடியனாறுவெடிப்புச் சம்பத்தில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 16பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு கொழும்பு நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலைக்கு மாற்றப்படுள்ளனர். மற்றும் ஒருவர்பொலநறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலிருந்து 5 அம்புலன்ஸ்கள் மூலம் இவர்கள் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். காயமடைந்த பொது மக்கள் தொடர்ந்தும் மட்டக்களப்புபோதனா வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)


ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 20.09.2010 திங்கட்கிழமையிலிருந்து 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன் விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்கள்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 03 . 1929



மறைவு 02 . 10 . 2009

திருமதி பிள்ளையம்மா கந்தையா

திதி: சதுர்த்தசி வியாழக்கிழமை
ஆண்டொன்று சென்றாலும்
அழியாதம்மா உம் நினைவு

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

186, யாழ் வீதி,
மானிப்பாய்.

(103298)


சீட்டிழுப்பு இல. 2294
திகதி 19.09.2010

மஹஜன சம்பத
அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்
D 2 7 3 5 3 3

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | D | 2 | 7 | 3 | 5 | 3 | 3 | ரூபா. 12,746,527/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | | 2 | 7 | 3 | 5 | 3 | 3 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | | | 7 | 3 | 5 | 3 | 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 07 |
| 3ம் பரிசுகள் | | | | 3 | 5 | 3 | 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 72 |
| 4ம் பரிசுகள் | | | | | 5 | 3 | 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 747 |
| 5ம் பரிசுகள் | | | | | | 3 | 3 | ரூபா. 100/= | பரிசுகள் 7440 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 73154 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 2 | 7 | 3 | 5 | 3 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 08 |
| 8ம் பரிசுகள் | | 2 | 7 | 3 | 5 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 78 |
| 9ம் பரிசுகள் | | 2 | 7 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 742 |
| 10ம் பரிசுகள் | | 2 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 7334 |
| 11ம் பரிசுகள் | D | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 29282 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா.
12,994,478.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,558,620.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline:2433631

முடிவுகளை அறிய
www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை 5 ஆயிரத்து 479 பேர் மீள்குடியமர்வு

கிளிநொச்சி, செப்.21

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 251 குடும்பங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 1691 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 479 பேர் இங்கு மீளக்குடியமர்ந்துள்ளனர்.

வவுனியா மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் நீண்ட காலமாகத் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களே இவர்களாவார்கள்.

இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவின் இயக்கச்சி, கோயில் வயல், முகாவில் ஆகிய பகுதிகளில் 251 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 284 பேர் மீள்குடியேற்றப்பட்டனர்.

மேலும் 18 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை ஆயிரத்து 691 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 479 பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் 34 ஆயிரத்து 105 குடும்பங்கள் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-14)

## மன்னாரில் சமாதான நிகழ்வுகள்

மன்னார், செப்.21

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு நாளைய தினம் மன்னார் நகர மண்டபத்தில் சமாதான நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

மன்னார் சமாதானத்திற்கும் மீளிணக்கத்திற்குமான வளங்கள் நிறுவனத்தால் கொண்டாடப்படவிருக்கும் இந்த நிகழ்வுக்கு மன்னார் அரச அதிபர் அ.நீக்கொலஸ்பிள்ளை தலைமை வகிப்பார்.

இதில் பல்வேறு கருத்துரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன் 'உதயம்' பத்திரிகையின் வெளியீடும் அதன் ஆய்வுரைகளும் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். (க-80)

## மீள்குடியமர்ந்தவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் உதவி

கிளிநொச்சி, செப்.21

கடந்த வியாழக்கிழமை மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள கோவில்வயல் இயக்கச்சி, முகாவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 252 குடுபங்களுக்கு யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் பணமும், உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 20 ஆயிரம் ரூபாவும் உலர் உணவுப் பொருள்களும் சமையல் உபகரணங்கள் மற்றும் கூடாரங்கள் போன்றன வழங்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (க-313-315)

## ஆக்கத்துக்கான காலப்பகுதி இது அதனை இறுகப் பற்றிக் கொள்வோம்

### அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

கிளிநொச்சி, செப்.21

தற்போது ஆக்கத்திற்கானதொரு காலப்பகுதியை அரசாங்கம் எமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதனை இறுகப் பற்றி முன்னேறுவது எமது பொறுப்பாகுமெனப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாக அவரது ஊடகச் செயலாளர் ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தில் இடம்பெற்ற விவசாயிகளுக்கான உள்ளீடுகள் மற்றும் உழவு இயந்திரங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்ததாக மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தால் வடபகுதி விவசாயிகள் மட்டுமல்ல நாடு பூராகவுமுள்ள விவசாயிகள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாண விவசாயிகள் விசேடமாக ஊக்குவிக்கப்படுவார்கள் என்று கூறினார்.

இதில் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேயவர்த்தன, பராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 'வருடிய இளமைக்காற்று' கவிதை நூல் வெளியீடு

மன்னார், செப்.21

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜே.ஆர்.மயூரன் எழுதிய 'வருடிய இளமைக்காற்று' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் முதன்மை விருந்திரனராகக் கலந்துகொண்டதுடன் நூலினை வெளியிட்டு வைக்க நூலின் ஆசிரியர் மயூரனின் பெற்றோர் அதனைப் பெற்றுக்கொண்டனர்.

மன்னார் சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த மயூரனின் இந்தக் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே.வரம் கலந்துகொண்டார். கௌரவ அதிதிகளாக மன்னார் நகரசபைச் செயலாளர் திருமதி ஆர். பெர்னடேற் குரூஸ், வைத்தியகலாநிதி எஸ். லோகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆசியுரையை அருட் சகோதரர் எஸ். ஸ்ரனிலோஸ் அவர்களும், வெளியீட்டுரையை தமிழ்ச் சங்கத்தின் பொது செயலாளர் கவிஞர் வி.எஸ். சிவகரனும் நிகழ்த்தினார்கள். (க-80)

## அத்துமீறிய குடியிருப்பாளரின் செயற்பாட்டால் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்க முடியாத நிலை

கிளிநொச்சி, செப்.21

கிளிநொச்சி மாவட்டத்தில் 50 வீடுகள் அமைப்பதற்காகத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஒதுக்கப்பட்ட முடிக்குரிய காணியில் சிலர் அத்துமீறிக் குடியேறியிருப்பதனால் இந்த வீட்டுத்திட்டத்தை ஆரம்பிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

வன்னிப் பிரதேசம் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களிலும் முகாம்களிரும் வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தற்பொழுது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் துரிதமாக மீள்குடியேற்றப்பட்டு வருகின்றன. இதேபோல் அரச அலுவலகங்களும் இயங்க ஆரம்பித்துள்ளன.

யுத்தம் காரணமாக வன்னியிலுள்ள பெரும்பாலான வீடுகள் முற்றாகவும் அரைகுறையாகவும் அழிந்து போனதால் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கூரைத் தகடுகளையும் சீமெந்தினையும் பயன்படுத்தித் தற்காலிகக் குடிசைகளை அமைத்துள்ளார்கள். இந்தியா 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன் வந் துள்ளது.

இந்த நிலையில் மீளக்குடியேறிய மக்களுக்காக தேசிய வீடமைப்பு அதிகார சபை கிளிநொச்சி மாவட்டத்தில், பொன் நகர்ப்பகுதியில், அறிவியல் நகரில் 50 வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளதுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள முடிக்குரிய காணியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தது.

இந்த வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரினால் நாட்டப்பட்டு தொடர்ந்து வேலைகள் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கால் ஏக்கர் விஸ்தீரனத்தில் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடும் நிர்மாணிக்கப்படவிருந்தது. அத்துடன் அனைத்து வீடுகளும் 3 மாத காலத்துக்குள் கட்டிமுடிக் கப்பட்டுத் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு வழங்குவதற்கான ஒழுங்குகளையும் மேற்படி சபை மேற்கொண்டிருந்தது.

வீட்டுத்திட்டத்திற்கான வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் வீடுகள் அமைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட முடிக்குரிய காணியில் சிலர் அத்துமீறிக் குடியேறிய துடன் காணிக்கு உரிமைகோரவும் முன் வந்துள்ளனர். ஆனால் காணிக்குரிய ஆவ ணங்கள் எவையும் அவர்களிடம் காணப் படவில்லை.

ஒரு சிலர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையினால் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட முடியாத நிலை தேசிய அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இத்திட்டம் காலதாமதப்படுவதால் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்படுமா அல்லது கைவிடப்படுமா என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்த வீட்டுத்திட்டத்தைப் போல் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்தும் பல வீட்டுத் திட்டங்கள் வீடமைப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்படவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-115)

## மன்னார் பிரஜைகள் குழுவினர் எம்.பிக்களுடன் கலந்துரையாடல்

மன்னார், செப்.21

மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவினர் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதற்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பிரஜைகள் குழுவின் பொருளாளர் வைத்தியகலாநிதி செல்வமனோகரன், உபசெயலாளர் அல்ஹாஜ் எம்.ஏ.யூனுஸ் ஆகியோர் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். வரவேற்புரையையும், [illegible] பிரசைகள் குழுவின் உபதலைவரான அன்ரனி மார்க் ஆற்றினார். குழுவின் அங்கத்தவரான கலாநிதி மனோகரசர்மா ஆசியுரை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் மாவட்டத்தின் செயற்பாடு, மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகள், இக்குழுவின் கடந்தகால செயற்பாடுகள், வருங்காலத் திட்டங்கள், சட்ட ஆலோசனைகள் என்பன பற்றி ஆராயப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் தங்களது பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். (க-80)

## கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பு

கிளிநொச்சி, செப்.21

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக சுகாதார திணைக்களம் கிளிநொச்சி மற்றும் பளை, பச்சிலைப் பள்ளி பிரதேசசபைகள் இணைந்து சிரமதான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்கள் தோறும் மக்களுடன் இணைந்து விண்ணப்பப் படிவம் ஒன்றினை ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கி, அவர்களால் மேற்கொள்ளப்படும் டெங்கு நோய் சம்பந்தமான மாற்று சிரமதான நடவடிக்கைகளைப் பார்வையிட்டு அவற்றுக்கு எடுக்கும் கால எல்லை, காணப்பட்ட குறைபாடுகள் என்பன உத்தியோகத்தர் ஒருவரால் பதிவு செய்யப்படுகின்றது.

நுளம்பு பெருகும் வகையில் இடங்கள் துப்புரவின்றிக் காணப்பட்டால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. இதனை மீறினால் அவர்களுக்கு எதிராக 2007 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதேச சபைச் செயலாளரும் விசேட ஆணையாளருமான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (க-313-315)

## மன்னாரில் குவியும் உல்லாசப் பயணிகள்

மன்னார், செப்.21

மன்னாரில் உல்லாசப் பயணிகள் வருகை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும் தாயக மண்ணைவிட்டு வெளிநாட்டில் வாழ்பவர்களுமே தினமும் வந்து குவிகின்றனர். இவர்கள் பேருந்து வண்டிகளிலும், சிற்றூர்திகளிலும், மகிழுந்துகளிலும் குடும்பமாகவும் தனியாகவும் வருவதைக் காண முடிகின்றது.

இவர்கள் மன்னாரில் வரலாற்றுப் புகழ் வாய்ந்த திருக்கேதீஸ்வர சிவாலயம், புனித மடுத்தேவாலயம், சுவர்ண பிம்பராம விகாரை, கப்பல் ஒலி தர்கா, பெருக்கு மரங்கள், அல்லி அரசி கோட்டை, குஞ்சுக்குளம் தேக்கத்தில் அமைந்துள்ள தொங்குபாலம், நீர்ச்சுனை, அருவியாற்றுப் பாலம் மற்றும் இன்னும் பல பிரசித்தி பெற்ற இடங்களைக் கண்டு மகிழ்வதோடு மன்னாரில் புகழ்மிக்க மீன் உணவுகள் , கருவாடு, பனங்கிழங்கு, பனம்பழம், ஒடியல்மா, ஒடியல் கூழ், பனங்கள்ளு என்பவற்றைச் சுவைத்து மகிழ்வதையும் காண முடிகின்றது. (க-80)




## எள்ளுப்பிட்டிக் கிராமத்தில் 50 குடும்பங்கள் மீள்குடியமர்வு

மன்னார், செப்.21

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மாந்தை மேற்கு எள்ளுப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 50 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் தங்கியிருந்த 50 குடும்பங்களைச் சேர்ந்த இருநூறுக்கும் அதிகமான பொதுமக்களே இவ்வாறு மீள்குடியமர்த்தப்பட்டவர்கள் ஆவர். இவர்களை மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி-டி-மெல் தமது நேரடி மேற்பார்வையில் மீள்குடியேற்றி வைத்தார்.

இந்த மக்களுக்கு உடனடியாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் மீள்குடியேற்றக் கொடுப்பனவான ரூபா 25 ஆளயிரம் வழங்கப்படவில்லை. வீட மைப்பு மானியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் காலக்கிரமத்தில் வழங் கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-80)

## மன்னாரில் அமைதிபேண மக்கள் வேண்டுகோள்

மன்னார், செப்.21

மன்னாரில் இளம் காடையர்கள் அட்டகாசம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பல்வேறு தரப்பிலிருந்தும் புறப்படும் இத்தகையவர்களின் அட்டகாசம் நாள்முழுவதிலும் குறிப்பாக இரவு வேளைகளில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனை வெளியில் செல்வோர் அச்சுறுத்தலுக்கும், மரண எச்சரிக்கைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உரியவர்கள் இவர்களை கட்டுப்படுத்தி மன்னாரின் அமைதியைக் காக்க வேண்டுமென்பதே மன்னார் மக்களின் வேண்டுகோளாக உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டச் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் கொடுக்கல் வாங்கலுக்கப்பால் சமூக சேவையும் செய்கிறது

## கூட்டுறவு உதவி ஆணையாளர் அருந்தவநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

கடன் கொடுக்கல் வாங்கல்களுக்கப் பால் சமூக கலாசார மேம்பாட்டிலும் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுற வுச் சங்கங்கள் கரிசனையுடன் செயற்படு கின்றன. யாழ்.மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் சங்கங்களின் சமாசத்தின் சங்கானைப் பிராந் திய சபையால் நடத்தப்பட்ட 88ஆவது சர் வதேச கூட்டுறவாளர் தின விழாவில் பிர தம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை யாவது:

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் சமாசமும் பாராட் டத்தக்க வகையில் தமது சேவைகளைச் செய்து வருகின்றன.

எனினும் சங்கானை ப.நோ.கூ சங்கத் தின் செயற்பாடுகள் போதுமானதாகக் காணப்படவில்லை. எனவே இதன் செயற் பாடுகளை மேம்படுத்த அனைவரும் ஒத் துழைக்க வேண்டும். இதற்குரிய வழி காட்டல்களையும் ஆலோசனைகளையும் நாம் வழங்கவுள்ளோம்.

கூட்டுறவு மக்கள் அமைப்பு என்பதால் மக்கள் அனைவரும் விழிப்புடன் செயற் பட்டு அதைச் செழிப்புறச் செய்ய வேண் டும் - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உதவித் திட்டப் பணிப்பாளர் வி.சிவகுமார் தனது ரையில் தெரிவித்தவை வருமாறு:

சங்கானைப் பிரதேச கூட்டுறவு பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. முதலா ளித்துவ முறைமையால் உருவான சவால் கள் கூட்டுறவின் தோற்றத்திற்கு மூலகார ணமாக இருந்த போதிலும் எல்லா சவால் களையும் எதிர்கொண்டு வளர்ச்சி அடைந் துள்ளது.

தற்போதைய சந்தைப்பொருளாதார முறைமையும் உலக மயமாகல் செயற் பாடும் ரஷ்யா, சீனா போன்ற சமதர்ம சமூக அமைப்பைக் கொண்ட நாடுகள் முதலா ளித்துவ நிலைமைக்கு இசைவாக்கம் பெற் றுள்ளன.

இதனை ஒவ்வொரு கூட்டுறவாளனும் புரிந்துகொண்டு பொறுப்புடன் செயற்பட வேண்டிய காலம் இது என்றார்.

சங்கானை பிராந்திய சபைத் தலைவர் வி.செல்வரத்தினம் தலைமையில் வட்டு மூளாய் வீதி ஸ்ரீ கணேச வாசிகசாலைக் கேட் போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ் வில் பிரதமவிருந்தினராகக் கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்த வநாதனும் சிறப்பு விருந்தினர்களாக சங் கானைப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் வி.சிவகுமாரும் யாழ்.மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் உப தலைவர் செ. இலகுநாதன் ஆகியோரும் கலந்து கொண் டனர். (த-16)

## யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டி

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.பஸ்நிலையத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் பொலிஸார் முறைப் பாட்டுப் பெட்டி ஒன்றை வைத்துள்ளனர்.

குடாநாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்கள், முறைப்பாடுகள் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே இது அங்கு வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் தமது முறைப்பாடுகளைக் கடிதம் மூலம் இப்பெட்டியில் சேர்ப்பதன் மூலம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும் எனப் பொலிஸார் தெரி வித்தனர். (த-26)

# இந்தியத் தலையீடுகளால்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுடன் சார்பான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை.

இதற்குக் காரணம் பங்களாதேஷின் விடுதலையின்போது இந்தியப்படைகள் அந்நாட்டில் செய்த அட்டூழியங்கள் அரச தலைவர்கள் மட்டத்திலும், ஊழியர்கள் மட்டத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் பெரும் வெறுப்பை விளைவித்திருப்பதே.

இந்திய - பங்களாதேஷ் உறவு நிலை மேலும் பல்வேறு காரணங்களால் பிரிவுபட்டுக் கிடக்கின்றது. ஏனைய சிறிய தெற்காசிய நாடுகளைக் கையாளுவது போலவே பங்களாதேஷையும் இந்திய மத்திய அரசு கீழ்நிலையில் வைத்துக் கையாள்வது போன்ற உணர்வு பங்களாதேஷ் தலைவர்களுக்கு என்றும் இருந்து வந்தது.

1985இல் சார்க் அமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது இந்தியாவையும், பாகிஸ்தானையும் இந்த அமைப்புக்குள் இணைப்பதற்கு அன்றைய பங்களாதேஷ் இராணுவத் தலைவர் எர்சாத் மிக முக்கியமாக உழைத்திருந்தார்.

அதன்பின்னர் இந்தியாவின் பலவான் போக்குக் காரணமாக சார்க் அமைப்புக்குள் சீனாவின் தலையீட்டை சிறிய நாடுகள் விரும்பின என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் இந்தியா தம்மைக் குறைத்து எடைபோடுவதை பங்களாதேஷ் உட்பட சிறிய நாடுகள் தவிர்க்க முயற்சிக்கின்றன.

பங்களாதேஷில் இருபெரும் அரசியல் கட்சிகள் பெருமளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவாமி லீக் கட்சி - இது ஷேக் முஜிபுர் ரஹ்மானால் ஆரம்பிக்கப்பட்டது. முஜிபுர் ரஹ்மான் பங்களாதேஷை பாகிஸ்தானிலிருந்து பிரிப்பதற்கு முன்னின்று உழைத்தவர். இதனால் இந்திய ஆய்வாளர்கள் அவாமி லீக் கட்சி இந்தியாவுக்குச் சாதகமான கட்சி என்றும் கூறி வருகின்றனர்.

தற்போது ஆட்சியில் இருக்கும் இக்கட்சியின் தலைவியும் முஜிபுர் ரஹ்மானின் மூத்த புதல்வியுமான ஷேக் கசீனா வசத், சீனாவுடன் புதிய பல முதலீட்டு உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதில் ஆர்வம் காட்டி வருகிறார்.

முஜிபுர் ரஹ்மான் 1975இல் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேஜர் ஜெனரல் ஜியா உர் ரஹ்மான் பதவியை கைப்பற்றினார். இவர் நேரடியாக இந்திய எதிர்ப்போக்கை தனது ஆட்சிக்காலத்தில் கடைப்பிடித்தார்.

இந்தியாவிலே பிரிவினை கோரிப் போராடிய தீவிரவாதிகளுக்கு சிலர் பங்களாதேஷில் அடைக்கலம் கொடுத்தார் என இந்திய அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.

ஜியா உர் ரஹ்மானின் காலத்தில் உருவாக்கப்பட்ட பங்களாதேஷ் தேசிய கட்சி அடுத்த பெரிய கட்சியாகக் கருதப்படுகிறது. இதன் தலைவியாக இருப்பவர் ஜியா உர் ரஹ்மானின் மனைவியாவார்.

ஜியா உர் ரஹ்மானின் படுகொலையின் பின்பே ஜெனரல் எர்சாத் பதவியைக் கைப்பற்றினார். 1975 முதல் 1991 வரை பங்களாதேஷ் இராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது. 1991இல் மக்கள் புரட்சி மூலம் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது.

இதேவேளை டில்லி கொள்கை வகுப்பாளர்களும், ஆய்வாளர்களும் பங்களாதேஷைச் சந்தேகக்கண் கொண்டே பார்க்கின்றனர்.

பங்களாதேஷ் இன்னமும் இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களான அசாம் மற்றும் மணிப்பூர் தீவிரவாதிகளுக்கும் இந்திய எதிர்ப்பு இஸ்லாமிய அடிப்படைவாதப் பயங்கரவாதிகளுக்கும் புகலிடம் கொடுத்து வருகின்றது என டில்லி கொள்கை வகுப்பாளர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்திய - பங்களாதேஷ் எல்லை முரண்பாடுகள் என்றும் ஓயாத பிரச்சினைக ளாகவே இருந்து வந்திருக்கின்றன. எல்லைக் காவல்படையினர் வகுக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் அத்துமீறல்களைச் செய்வதும், தீவிரவாதிகளும் அடிப்படைவாதி களும் அத்துமீறுவதும் எப்பொழுதும் பெரும் பிரச்சினையாகக் கருதப்படுகிறது. இந்நிலை யில் பங்களாதேஷில் சீனாவின் தலையீடு மிக இலகுவாக அமைந்து வருகிறது. சிட்டகொங் துறைமுகத்தை ஆழப்படுத்தி நவீன தரம் வாய்ந்ததாக ஆக்குவதில் சீனா ஆர்வம் காட்டி வருகிறது. அத்துறைமுகத்தை சீனாவின் தென் பகுதி முக்கிய நகரங்களில் ஒன்றான கும்மிங் உடன் தரைவழிப் பாதை ஊடாக மியான்மர்(பர்மா) நாட்டை ஊடறுத்து இணைப்பதற்கான பூர்வாங்க வேலைதிட்டங்கள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன.

பங்களாதேஷை முப்பரிமாண பாதுகாப்புக் கட்டமைப்புகளைக் கொண்ட ஒரு நாடாக உருவாக்குவதன் மூலம் பிராந்திய நிலைத்தன்மையைப் பேணக்கூடிய நாடாக அதனை மாற்று வகையில் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய மூன்றையும் சீன ஆயுத தளபாடங்கள் கொண்டு நவீன மயப்படுத்தும் கோரிக்கைகள் பங்களாதேஷ் அரசியல்வாதிகளால் விடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தொலைத்தொடர்பு, வீதிகள் புனரமைத்தல், பாலங்கள் கட்டுதல், ஏற்றுமதி வரிச்சலுகைகள் கொடுத்தல் என எண்ணற்ற விடயங்களில் சீனா தலையிடுகிறது.

அதேவேளை, இந்திய முதலீட்டாளர்களின் முதலீடுகளும் பங்களாதேஷ் பொருளாதார வர்த்தக நிலைமைகளை வலுப்படுத்துவதாக இருக்கும் போதும் இந்தியாவை பொறுத்தவரையில் இந்திய உள்நாட்டுப் பாதுகாப்பு, எல்லைப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட காரணிகளுக்கே மிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

ஆனால் சீனாவோ பொருளாதார ரீதியாக உடன்படிக்கைகள் செய்துகொள்வதன் மூலம் நாட்டைச் சீன மயமாக்கும் அல்லது சீனாவில் தங்கி இருக்கக்கூடிய வகையில் வைத்திருப்பதற்கேற்றவாறு நீண்டகாலத்திற்குத் திட்டங்களைத் தயார் செய்து வருகின்றது.

(தொடரும்)


1st முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

2010.09.21




தவதுர்ஷனா தவவர்ஷனா

வசாவிளான், குட்டியபுலத்தைச் சேர்ந்த
திரு.திருமதி து.சாந்தன்-சகுந்தலா தம்பதியரின் செல்வப் புதல்விகள்
**தவதுர்ஷனா -தவவர்ஷனா**
தங்கள் முதலாவது பிறந்தநாளை இன்று (2010.09.21) செவ்வாய்கிழமை அவர்களது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள் இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார்கள் சந்திரன், சசிகரன், சாந்தன், அன்ரிமார் சாரதா, லதா, நாயன்மார்கட்டில் வசிக்கும் அப்பப்பா, அத்தை கருணா, மாமா புஸ்பராஜா, பெரியப்பா பீற்றர், பெரியம்மா போறதி, அண்ணா சியாஸ், அக்கா றிகா, சித்தப்பா யோகேஸ், சித்தி கௌரி, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லூர் முருகன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழத்துகின்றோம்.

தகவல்:
குட்டியபுலம்,
வசாவிளான். (103614) **புஸ்பன் மாமா.**



**6ஆம் ஆண்டு நினைவலைகள்**



**T.சுந்தரலிங்கம்**

தோற்றம்
18 ✱ 04 ✱ 1944

மறைவு
27 ✱ 09 ✱ 2004

திதி: சதுர்த்தசி

எம் அருமை அப்பாவே!
ஆறு ஆண்டென்ன
ஆயிரம் ஆண்டுகள்தான்
உருண்டாலும் உங்களது
நினைவுகள் எங்களை
என்றும் விட்டு அகலாது!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

150, நெடுங்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (101696) **மனைவி, மக்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண லியனகே அதிரடிச் சதத்தினால் யாழ்.மத்திய கல்லூரியை வென்றது என்.சி.சி



யாழ்ப்பாணம், செப்.21

பூரண லியனகேயின் அதிரடிச் சதம் கைகொடுக்க என்.சி.சி விளையாட்டுக் கழக அணி யாழ். மத்திய கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கு இடையிலான சிநேகப் பூர்வ ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து என்.சி.சி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் யூலியஸ் ஆட்டம் இழக்காமல் 60 ஓட்டங்களையும், சண்சேயன், ஒனாசியஸ் ஆகியோர் முறையே 36, 28 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் என்.சி.சி விளையாட்டுக்கழக அணி வீரர்களான பசிந்து பெரேரே நான்கு ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் நிச்மித்த பெரேரோ நான்கு ஓவர்கள் பந்துவீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு 183 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய என்.சி.சி விளையாட்டுக்கழக அணி 19.4 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பூரண லியனகே 50 பந்துகளை எதிர்கொண்டு 9 பவுண்டறிகள், எட்டு சிக்ஸர்கள் அடங்கலாக 100 ஓட்டங்களையும் மினுற கல்வத்துர 26 ஓட்டங்களையும், டொக்கான் ரைக்கான் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான ஸ்ரெபான் 4 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், யூலியஸ் நான்கு ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (த-23)

## அருணோதயா, மகாஜனா அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி

வலி.வடக்கு, செப்.21

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி அரையிறுதி ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை கட்டுவன் மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

மற்றொரு போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டதில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து மகாஜனாக் கல்லூரி 6:5 கோல்கள் என்ற கணக்கில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடத்தகுதி பெற்றுள்ளது. (த-86)

## தனபாலன் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.21

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மறைந்த அதிபர் சிவசம்பு தனபாலன் ஞபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கான 6 பேர் பங்குகொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் பல அணிகள் பங்குகொள்கின்றன. (த-23)




## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, செப்.21

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 3 ஆம் இடம் மற்றும் இறுதி ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

3 ஆம் இடத்துக்கான ஆட்டம்

* தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

இறுதிப்போட்டி

* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

(த-86)

* * *

யாழ்ப்பாணம், செப்.21

யாழ்.மாவட்டத்தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை உடுவில் சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் நவாலி சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி இளைஞர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் மரதன் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.21

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் "இன ஒற்றுமைக்கான 2010 வேலைத்திட்டத்தின் கீழ்" பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வீதியோட்டப் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு வலயங்களிலிருந்தும் 10 மாணவ, மாணவிகள் போட்டியில் பங்கு பற்றமுடியும். இப்போட்டியில் அநுராதபுர வலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆண்களுக்கு 8 கிலோமீற்றர் தூரமும் பெண்களுக்கு 5 கிலோமீற்றர் தூரமும் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுகின்ற மாணவர்கள், மாணவிகள் மரதன் ஓட்டத்தில் பங்குபற்றுவதற்கான தேக ஆரோக்கிய நிலையில் உள்ளனர் என்பதை வைத்தியரின் மருத்துவச் சான்றிதழின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

ஆள் அடையாளத்தை உறுதி செய்கின்ற தேசிய அடையாள அட்டை, தபால் அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பவற்றுடன் போட்டிக்குச் சமுகமளிக்க வேண்டும்.

போட்டியில் பங்குகொள்ளவிரும்புகின்ற மாணவர்கள், மாணவிகள் தத்தமது வலயக் கல்விப்பணிப்பாளர் அல்லது உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்களிடம் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (த-9)

## குண்டு எறிதல் போட்டியில் யாழ்.வீரர் புதிய சாதனை

வலி.வடக்கு, செப்.21

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் குண்டு எறிதல் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பிரதீப்குமாரின் 13.50 மீற்றர் பெறுபேறு புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய சாதனைப் பட்டியலைத் தயாரிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப் பட்டியல் பதிவுசெய்யப்படவுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பிரதீப்குமார் குண்டு எறிதல் போட்டியில் 13.50 மீற்றர் தூரத்தையும் 2008 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். வாகீசன் 12.32 மீற்றர் தூரத்தையும் இவ்வாண்டு யாழ். மாவட் டத்தைச் சேர்ந்த எஸ்.வாகீசன் 12.66 மீற்றர் தூரத்தையும் எறிந்திருந் தனர்.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பிரதீப்குமாரின் 13.50 மீற்றர் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

## திருநெல்வேலி வி.கவுடனான ஆட்டத்தில் 8 விக்கெட்டுக்களால் வென்றது ஜொலிஸ்ரார்

வலி.வடக்கு, செப்.21

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 8 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டமொன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகமும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்களைப் பெற்றது.

சாந்தன் 69 ஓட்டங்களையும், சுதாஸ் 19 ஓட்டங்களையும் ரஜிந்தன் 15 ஓட்டங்களையும் லவன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வாமணன் 6 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிரஞ்சன் 6 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும், பகீரதன் 6 ஓவர்கள் பந்து விசி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஆதவன் 31 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

மணிவண்ணன் 45 ஓட்டங்களையும் பிரியதர்சன் 34 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது சஜீகன் 35 ஓட்டங்களையும் சிவராஜ் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கபில் 4 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பிரதீஸ் 36 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)



யாழ்ப்பாணம் நகர்மைய றோட்டறிக் கழகம் நடத்திய மூன்று பேர் பங்குபற்றும் மின்னல் வேக பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 'ஏ' அணி, 'பி' அணி வீராங்கனைகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## உதயசூரியன் அணி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், செப்.21

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்துடனான ஆட்டத்தில் அம்பிகை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

வேலணை அம்பிகைநகர் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவையொட்டி தீவக மட்டத்தில் இடம் பெற்ற 9 பேர் பங்கு கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட் டியின் அரை இறுதியாட்டத்தில் அம்பிகைநகர் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்தி ஜி விளையாட்டுக்கழக அணிமோதியது.

இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றிதோல்வியை நிர்ணயிக்க 5 சமநிலைத் தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

அம்பிகைநகர் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணியை 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றிகொண்டது. (ஜ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலவாய நாடுகளுக்கான போட்டிகள் ஆரம்பமாகும் நிலையில்

# டில்லியில் சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு!

புதுடில்லி,செப்.21

டில்லியில் அடுத்த மாதம் பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. இதற்காக டில்லியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. இந்த நிலையில் தீவிரவாதிகள் தாய்வான் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலானது பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் நாடுகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே நடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



டில்லி ஜும்மா மசூதி அருகே, மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், வெளிநாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் காயமடைந்தனர். இதன் பின், முக்கிய இடங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு, சகஜநிலை திரும்பியதையடுத்து, தலைநகர் டில்லியைச் சுற்றிப் பார்க்கும் ஆவலுடன் செல்லும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்.

தாய்வான் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் 5 பேர், டில்லியில் உள்ள புகழ்பெற்ற ஜும்மா மசூதியைப் பார்ப்பதற்காக நேற்றுமுன்தினம் காலை 11.30 மணிக்கு வந்துகொண்டிருந்தபோது, அங்கு ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த, 2 தீவிரவாதிகள் சுற்றுலாப் பயணிகளை நோக்கித் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர்.

மசூதியின் 3ஆவது வாசல் அருகே இந்தச் சம்பவம் நடந்தது. திடீரென்று தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதும் அந்தப் பகுதியில் நின்றுகொண்டிருந்தவர்கள் பயந்து ஓடினார்கள். பின்னர் தீவிரவாதிகள் இருவரும் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு, தாய்வான் நாட்டு சுற்றுலாப் பயணிகளில் 2 பேர் படுகாயமடைந்தனர். ஒருவருக்கு தலையிலும், மற்றொருவருக்கு அடிவயிற்றிலும் குண்டுகள் பாய்ந்தன. உடனடியாக, அவர்கள் இருவரும் அருகில் உள்ள லோகநாயக் ஜெயப்பிரகாஷ் நாராயணன் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

வயிற்றில் குண்டு பாய்ந்த நபருக்கு, சத்திர சிகிச்சை மூலம் குண்டு அகற்றப்பட்டது. தலையில் குண்டு பாய்ந்தவருக்கு, மண்டை ஓட்டில் பாதிப்பு ஏற்படவில்லை என 'ஸ்கான்' பரிசோதனையில் தெரிய வந்தது. இருவரும் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார்கள் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்ததாவது:-

இந்தச் சம்பவம் குறித்து அனைத்துக் கோணத்திலும் விசாரணை நடத்தி வருகிறோம். டில்லி முழுவதும் எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பல்வேறு முக்கிய பகுதிகளில் தீவிர சோதனைகள் நடத்தப்படுகிறது. குற்றவாளிகள் விரைவில் பிடிபடுவார்கள் என நம்புகிறோம். சம்பவம் நடந்ததும், அங்கு நின்றிருந்த ஒரு பொலிஸார், மர்மநபர்களை விரட்டிச் சென்றுள்ளார். எனினும், அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். அந்தப் பகுதியில் தொலைபேசிகளும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு 'இந்தியன் முஜாகிதீன்' என்ற தீவிரவாத இயக்கம் பொறுப்பு ஏற்றுள்ளது.

### காரில் குண்டு வெடிப்பு

துப்பாக்கிச் சூடு நடந்த சிறிது நேரத்தில், அந்த இடத்தில் இருந்து 50 மீற்றர் தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு கார் திடீரென்று தீப்பற்றி எரிந்து நாசமானது. அந்தக் காரில் 'குக்கர் குண்டு' வைக்கப்பட்டிருந்ததாகவும் அது வெடித்ததால் கார் தீப்பிடித்து எரிந்ததாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர் வன்முறைகளுக்கு சுமுகமான தீர்வுகாண்பதற்கு

# இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் காஷ்மீர் செல்கிறது சர்வ கட்சிக்குழு

புதுடில்லி,செப்.21

2 நாள்கள் பயணமாக அனைத்துக் கட்சிக் குழுவினர் நேற்று காஷ்மீர் மாநிலத்துக்குச் சென்றனர். காஷ்மீர் மாநிலத்தில், இராணுவத்துக்குச் சிறப்பு அதிகாரம் வழங்கும் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்பன உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. போராட்டத்தின்போது ஏற்பட்ட கலவரம் மற்றும் வன்முறை சம்பவங்களில் இதுவரை நூற்றுக்கும் அதிகமான பேர் பலியாகியுள்ளனர். இதனால் பல இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கலவரத்தை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் கடந்த புதன்கிழமை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டி ஆலோசனை நடத்தினார். அந்தக் கூட்டத்தில், காஷ்மீர் மாநிலத்தில் நிலவும் சூழ்நிலைகளை நேரில் கண்டறிந்து அதன் அடிப்படையில் அமைதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கு அனைத்துக் கட்சி குழு ஒன்றை அனுப்பி வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் சுஷ்மா சுவராஜ், அருண் ஜெட்லி, சமாஜ்வாடி தலைவர் முலாயம் சிங் மற்றும் ராம்விலாஸ் பஸ்வான் (லோக் ஜனசக்தி), சரத்யாதவ் (ஐக்கிய ஜனதா தளம்), ராஜ்நிதி பிரசாத் (ராஷ்டிரீய ஜனதாதளம்), பாசுதேவ் ஆச்சார்யா (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), குருதாஸ் தாஸ்குப்தா (இந்திய கம்யூனிஸ்ட்), டி.ஆர்.பாலு (தி.மு.க.), தம்பிதுரை (அ.தி.மு.க.) உள்ளிட்ட 38 பேர் கொண்ட குழுவினர் நேற்று டில்லியில் இருந்து காஷ்மீர் செல்கிறார்கள். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பிரதிநிதியும் இந்தக் குழுவில் இடம் பெற்று உள்ளார்.

உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அல்லது நிதி அமைச்சர் [illegible] இருவரில் ஒருவர் இந்தக் குழுவிற்கு தலைமை தாங்கிச் செல்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அனைத்துக்கட்சி குழுவில் இடம் பெற்றுள்ள மூத்த காங்கிரஸ் தலைவரும், மத்திய நீர்வளத் துறை அமைச்சருமான பவன்குமார் பின் சால் நேற்றுமுன் தினம் சண்டிகார் நகரில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையில் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழக துணைவேந்தர்கள், ஹோட்டல் அதிபர்கள், படகு உரிமையாளர்கள், தொழில், வர்த்தக பிரமுகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் அனைத்துக்கட்சி குழுவினர் சந்தித்து பேசுவார்கள்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

அனைத்துக்கட்சிக் குழுவினரிடம் கருத்துகளைத் தெரிவிக்க முன்வருமாறு சையத் அலி ஷா கிலானி, மிர்வாய்ஸ் உமர் பரூக் ஆகியோர் தலைமையிலான ஹூரியத் மாநாடு அமைப்பின் குழுக்களுக்கும், ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி அமைப்பின் தலைவர் யாசின் மாலிக்குக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

ஆனால், அனைத்துக்கட்சி குழுவினரை சந்தித்துப் பேசமாட்டோம் என்று கிலானி தலைமை யிலான ஹூரியத் மாநாடு அமைப்பு அறிவித்துள்ளது.


சகல பிரிவினருக்கும் கணினி கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் 25/9/2010 முதல் ஆரம்பமாகின்றன.....

**Diploma in**
- Microsoft Office 2007
- Java Programming
- Macromedia Applications
- Web Design & Web Development
- Computer Programming
- Desktop Publishing

100% Practical

80% கட்டணக் கழிவு

சர்வதேச தராதரமிக்க சான்றிதழுடன் கூடிய கற்கை நெறிகள்.

விரிவுரைகள் யாவும் பட்டதாரி ஆசிரியர்களாலே மேற்கொள்ளப் படுகின்றன.

விசேட கட்டணக்கழிவுடன் சிறுவர்களுக்கான கணினி வகுப்புகளும் ஆரம்பமாகின்றன......!

- Certificate in English
- Certificate in Internet & Email
- Certificate in Video Editing



Global COMPUTER EDUCATION
#5, First Floor, New Market Building,
Jaffna. Tel : 011-3050111, 0776684302

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 ★ 05 ★ 1918



விண்ணில் 21 ★ 09 ★ 2009

வல்லிபுரம் பரமலிங்கம்
(நயினாதீவு)

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஓராண்டு கழிந்ததே ஐயா!
உங்கள் உருவம்தான் மறைந்தது
உங்கள் அழகான புன்சிரிப்பு முகம் மறையவில்லை
உங்களை இழந்த துயரில் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (1036228) - குடும்பத்தினர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு
அளப்பரிய பங்காற்றிய
ப.விக்னேஸ்வரன்
அவர்கள் வடமாகாணக் கல்விப்
பணிப்பாளராக பதவியுயர்வு
பெற்றமையையிட்டு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.



பாடசாலைச் சமூகம்
யா/தாவடி இந்து தமிழ்க்கலவன்
பாடசாலை (103621)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலிகாமம் வலயக் கல்விப்
பணிப்பாளராக இருந்து வடக்கு
மாகாணக் கல்விப்
பணிப்பாளராக பதவி உயர்வு
பெற்றிருக்கும்
உயர்திரு.
ப.விக்னேஸ்வரன்



அவர்களை மன நிறைவுடன்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை.
(103624)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் மைந்தனும்
பழைய மாணவர் சங்கத் தலைவரும்
யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட
சிரேஷ்ட விரிவுரையாளருமான
கலாநிதி
பு.ரவிராஜன்
அவர்கள் விஞ்ஞான
ஆராய்ச்சிகளுக்காக
ஜனாதிபதியினால் விருது வழங்கிக்



கௌரவிக்கப்பட்டமையை மனமுவந்து பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

யா/புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை.
(103625)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா எப்ப வீட்டை வருவார் சின்ன மழலை ஒன்றின் கெஞ்சுதல் இது

கண்ணீரின் கோடுகளால் காலம் துன்பத்தின் ரேகைகளை ஒன்றன்மேல் ஒன்றாக - அடுக்கடுக்காக - அங்கிருந்த எல்லோர் மீதும் ஆழமாக வரைந்துவிட்டிருந்தது துன்பத்தில் சுளிக்குள் எவருமே தப்பவில்லை. எல்லோருமே அதனுள் விடுபட்டு தம் உறவுகளைத் தொலைத்து, அவர்களைத் தேடி அலைந்து களைத்துப்போன முகத்தோடு அங்கே காத்திருந்தார்கள். நேரம் மதியமாகிக் கொண்டிருந்தது. அங்கிருந்தோரின் மனங்களில் பொங்கி எழுகின்ற வெம்மையைப் போலவே அந்தப் பகுதியெங்கும் அனலாகத் தகித்துக்கொண்டிருந்தது. இவ்வளவுபேர் சாட்சியமளிகத் திரண்டுவருவாரென ஆணைக்குழுவினர்கூட எதிர்பார்த்திருக்கவில்லை. நடந்துமுடிந்த கோரங்களைப் பதிவு செய்வதற்காக கிளிநொச்சிக்கு ஆணைக்குழுவினர் வந்திருக்கின்றனர் என்ற செய்தி காதுக்கு எட்டிய உடனேயே எல்லா வேலைகளையும் அப்படியே விட்டுவிட்டு உடுத்த துணியோடே வந்தவர்கள் பலர். அவர்களின் எல்லா இலக்கும் எப்படியாவது தமது உறவுகள் விடுதலையாகி விட வேண்டும் என்பதில் மட்டுமே மையம் கொண்டிருந்தது. அதனால் தமது உறவுகளைப் பிரிந்த வலியை எப்படியாவது சாட்சியமாகச் சொல்லி அவற்றைப் பதிவு செய்து உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்வதனூடாக தடுப்பு முகாம்களில் வாடுகின்ற தம் பிரியத்துக்குரியவர்களின் விடுதலையை ஓரளவுக்கேனும் துரிதப்படுத்திவிட முடியும் என்று அவர்கள் நம்பினார்கள்.


அழுதுபுரள்கிறோம் பிள்ளைகள் வருவார்களா

''இதுபோல எத்தனையோ விசாரணைக் குழுக்கள் வந்துவிட்டன. அந்தக்குழுக்களின் முன்னால் எல்லாம் நாங்களும் ஓடியோடிச் சென்று எல்லாவற்றையும் பதிவு செய்தோம். கண்ணீர் விட்டுக் கதறினோம். எப்படியாவது எமது உறவுகளை மீட்டுத் தாருங்கள் என்று கெஞ்சினோம். நாங்கள் சொல்வதை எல்லாம் செவிமடுத்த அவர்கள் உங்கள் பிள்ளைகள் விரைவில் வீடுகளுக்கு வருவார்கள் என்று உறுதிகூறிச் சென்றார்கள். ஆனாலும் எல்லாமே நீர்மேல் எழுத்துப்போல் மாறிவிட்டன. எங்கள் பிள்ளைகளும் வீடுகளுக்கு வரவில்லை. விசாரித்துச் சென்ற அமைப்புகளிடமிருந்தும் உரிய பதிலில்லை. கொஞ்சக் காலம்


தனது மகன் எப்போது வருவான் என ஏங்கும் தந்தை

சென்றால் எங்கள் பிள்ளைகளைப் போலவே இத்தகைய விசாரணைக் குழுக்களும் காணாமல் போய்விட்டதாக நாங்கள் தேடித்திரிய வேண்டியிருக்கும். ''என்று சலித்துக்கொண்ட பின்னரும்கூட வேதனையின் வெளிப்பாட்டை கொட்டிவிட முனைந்தவர்களும் பலர். 300இற்கு மேற்பட்ட மக்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்ய ஆணைக்குழுவினருக்கு நேரம் போதாமல் இருந்தது. ஏதோ ஒப்புக்கு நாலைஞ்சுபேர் மட்டுமே சாட்சியமளிக்க வருவார்கள் என்றுதான் அவர்கள் எண்ணி வந்திருக்க வேண்டும். ஆனாலும் தன்னுடைய தீ நாக்குகளால் ஒட்டுமொத்த வன்னி மக்களையும் போர் சுட்டுப்பொசுக்கி இருந்த விடயம் ஏசி அறைகளுக்குள் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆணைக்குழுவினருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லைத்தானே?

என்ன செய்வதென்று ஆணைக்குழுவினர் யோசித்தனர். ஒருசிலரின் வாய்மொழிமூல சாட்சியங்களைத் தவிர ஏனையோரின் கோரிக்கைகளை - காணாமல் போய்உள்ள உறவுதனின் வேதனைகளை - வரி வடிவில் எழுதித் தரச்சொன்னார்கள். ஆணைக்குழுவின் வேலையை இந்த யோசனை சுலபமாக்கிவிட்டது. காகிதமும் பேனாக்களும் காணாமற் போனதை அத்தாட்சிப்படுத்தும் ஆவணங்களுமாக கரைச்சிப் பிரதேச செயலகச் சூழல் அடுத்தநொடியே மாறியது. தமது உணர்ச்சிகளை உள்ளிருக்கும் மனக்குமுறல்களை அணைஉடைத்த நீராக வார்த்தைகள் வழியே கொட்டிவிட முனைந்த மக்களின் எல்லோராலும் காகித வடிவிலான கண்ணீர்க் கோரிக்கைகளை தயார்செய்ய முடியாமலிருந்தது. வயோதிபமும் போதிய கல்விப் பரிச்சயமின்மையும் கடிதத்தை எழுதவிடாது அந்த மக்களின் கைகளைக் கட்டிப்போட்டது. ஆசை வெட்கம் அறியாது என்பார்கள். இங்கே வேதனையும் வெட்கம் அறியாததாக மாறிப்போனது. யாராவது எமது பிள்ளைகளை விடுவிக்கக்கோரும் கடிதங்களை எழுதித்தர மாட்டார்களா என்று ஏங்கித்திரிந்தனர் பலர். அடிபட்டவனுக்குத்தான் அந்த அடியின் முழு வேதனையும் தெரியும். ஏற்கனவே ஆணைக்குழு முன்பாக காகிதக்கோரிக்கைகளைச் சமர்ப்பித்தவர்கள் கடிதம் எழுதத்தெரியாமல் வெற்றுக் காகிதமும் கண்ணீருமாக அலைந்தவர்களுக்கு கைகொடுக்க முன்வந்தார்கள். இவ்வாறு தேவைப்படுவோருக்கு கடிதங்களை எழுதிக்கொடுத்துக் கொண்டிருந்தவர்களைச் சுற்றி சிறு கூட்டமே கூடத்தொடங்கிவிட்டது. சொல்பவர்களின் துன்பத்தில் எழுதுபவர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள். வேதனை, பிரிவு, தேடி அலைதல், காத்திருத்தல் என்னும் புள்ளிகள் அங்கு கூடியிருந்த எல்லோரிடத்திலும் கண்ணுக்கே தெரியாத இறுக்கமான இணைப்புகளை ஏற்படுத்தியிருந்தன. தன்னைச் சூழ்ந்திருந்தோருக்கு எந்தவித முகச்சுழிப்பும் இல்லாமல் கைவலிக்கும் வரை கடிதங்களை எழுதிக் கொடுத்துக்கொண்டிருந்த கருணா தனுசியா (வயது 21) எங்கள் கண்ணில் பட்டார். அவர் கண்களிலும் வேதனையின் சாயல் இன்னமும் மறையவில்லை. அழுகையை அடக்கும் குரலில் தன் கதையைச் சொல்லத் தொடங்கினார். எனக்குக் கலியாணம் கட்டேக்கை 19 வயது. இந்தச் சின்ன வயசிலை குடும்ப வாழ்க்கைக்குள்ளை போக வேண்டிய கட்டாயத்தை சண்டை ஏற்படுத்திப் போட்டுது. வீட்டுக்கு ஒரு ஆள் சண்டைக்குப் போக வேணும் எண்ட நிலைமை மாறி கடைசியிலை வீட்டிலை இருக்கிற இளம் ஆள்கள் எல்லாருமே சண்டைக்கு வரவேணும் எண்டு இயக்கம் சொல்லிச்சு. வீடுவீடாப் புகுந்து ஆட்களைப் பிடிக்கத் தொடங்கிட்டாங்கள். அப்பிடி வரேக்கை எங்கடை அப்பா எந்தை நெத்தியிலை குங்குமத்தைப் பெரிசா வைக்கச் சொல்லுவார். குங்குமப் பொட்டு வைச்சிருந்தால் கலியாணம் கட்டின ஆள்கள் எண்டு நினைச்சு பிடிக்காமல் போய்விடுவாங்கள். நெடுக இப்பிடிப் பேக்காட்ட முடியாது. அதாலை ஏற்கனவே நான் 'லவ்' பண்ணியிருந்தவரை - புண்ணியசிங்கம் கருணா (வயது 23) அப்பா எனக்குக் கட்டிவைச்சார். பிறகு எல்லாத்துக்காலையும் தப்பி அருணாசலம் முகாமுக்குப் போனம். அங்கை வைச்சு இவரை ஆமி பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். இப்ப அவர் வவுனியா தருமபுரம் தடுப்பு முகாமிலை இருக்கிறார். சரியான சாப்பாடு இல்லை. எங்களைப் பிரிஞ்ச கவலை. அதாலை சரியா மெலிஞ்சு போட்டார். ஒண்டும் செய்யாத ஆட்களை ஏன் உவங்கள் அடைச்சு வைச்சிருக்கிறாங்கள்? எங்கடை உயிரைப் பாதுகாக்கிறதுக்காண்டி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளை வந்ததுதான் நாங்கள் செய்த பிழையா? முந்தி இயக்கம் பிடிச்சுது. அதுக்கை தப்பி வந்தால் ஆமி பிடிக்குது. அப்ப நாங்கள் எங்கைதான் போகிறது? ''


கைவலித்தாலும் கடிதங்கள் எழுதியாவது உறவுகளை மீட்கும் முயற்சியில்

மேற்கொண்டு பேசமுடியாதவராய் வெளியே பாய்ந்துவிடத் துடிக்கும் கண்ணீரை அடக்கிக்கொண்டு யாரோ ஒருவரின் விடுதலைக்காகக் கடிதம் ஒன்றை எழுதிக்கொடுக்கத் தொடங்கினார் தனுசியா. அவவுடன் நடந்த உரையாடலை ஒரு ஓரமாக அமர்ந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த முதியவர் எங்களிடம் ஏதோ பேச எத்தனித்தது தெரிந்தது. அவர் அருகே சென்றோம். நாங்கள் செல்வதற்கு முன்னரே தனுசியாவின் கதையைக் கேட்டு அவர் அழுதுவிட்டிருந்தார். அவர் பெயர் முனுசாமி கோவிந்தசாமி (வயது 67) தனுசியாவின் தந்தை. எங்களைக் கண்டவுடன் அடக்கி வைத்திருந்த வார்த்தைகளைக் கொட்டத் தொடங்கினார்.

''என்ரை பொம்பிளைப் பிள்ளேன்ர வாழ்க்கையும் இப்பிடியாப் போட்டுது. இருந்த பொடியனும் தடுப்புக்குப் போட்டான். மாத்தளத்துக்கு ரெண்டு பக்கமும் அடி விழும் எண்டு சொல்லுவினம். நானும் அப்பிடித்தான். மகளின்ர புருசனையும் மகனையும் ஒரேயடியாத் தடுப்பிலை இருக்க விட்டுட்டு நான் தனிக்கட்டையாய் இருந்து அழவேண்டிக் கிடக்கு. நாங்கள் கஸ்ரப்பட்டனாங்கள். அதோடை வருத்தமும். இந்த நேரத்திலை உழைச்சுக் காப்பாத்த வேண்டிய ஆம்பிளை ரெண்டுபேரும் தடுப்பிலை இருக்கினம். எனக்கு மகனை நினைச்சுக் கவலைப்படுறதா? புருசன் இல்லாமல் இந்தச் சின்ன வயதிலை அலைஞ்சு திரியிற மகளைப் பார்த்துக் கவலைப்படுறதா? நாங்களும்போகாத இடமில்லை. எல்லாரும் இப்ப விடுகிறம், அப்ப விடுகிறம் எண்டு சொல்றாங்களே தவிர உருப்படியா ஒண்டும் நடக்கேல்லை.'' எண்டு சொல்லிவிட்டு மகளின் தலையை ஆதரவோடு தடவிக்கொடுத்தார். குனிந்தபடி கடிதத்தை எழுதிக்கொண்டிருந்த தனுசியாவின் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருக்கெடுக்கத் தொடங்கியிருந்தது.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் வீசிக்கொண்டிருந்த காற்று கண்ணீர் சுமக்கும் கதைகளால் கனத்துப் போயிருந்தது. ஒரு மரண வீட்டில் நிற்பது போன்ற உணர்வை அந்தச் சூழல் தந்துகொண்டிருந்தது. எங்களிடம் ஓடிவந்து தங்களின் கண்ணீர்க் கதைகளைப் பகிர்ந்து கொள்வோருக்கு எதைக் கொடுப்பதென்று எங்களுக்குத் தெரியவில்லை. அவர்களின் கண்ணீருக்கு எங்களால் அணை கட்ட முடியாது. காதுகொடுத்துக் கேட்பது மட்டும் தான் எங்களால் அப்போதைக்குச் செய்ய முடிந்த காரியமாக இருந்தது. அப்படிக் காதுகொடுத்துக் கொண்டிருந்தபோது ''அம்மா! இண்டைக்காவது அப்பா வருவாரா?'' என்ற மழலைக்குரல் எங்கள் கவனத்தை ஈர்த்தது. அந்தக் குழந்தையின் தாய் ஏதோ சொல்லி குழந்தையின் கண்ணீரைத் தற்காலிகமாக நிறுத்த முயற்சித்துக் கொண்டிருந்தார். அந்தத் தாயின் பெயர் சவுந்தரராசா டயானா (வயது 29) குழந்தையின் அழுகையை நிறுத்த முயற்சித்துக்கொண்டே தன் கதையை எங்களுக்கும் சொல்லிக்கொண்டிருந்தார். ''எந்தை கணவர் தியாகராசா சவுந்தரராசா (வயது 40) முந்தி இயக்கத்திலை இருந்தவர். பிறகு கலியாணம் கட்டின பிறகு விலத்திட்டார். எல்லாமா எங்களுக்கு 3 பிள்ளையள். இவர் (கையிலிருந்த பிள்ளையைச் சுட்டிக்காட்டி) கடைசிப்பிள்ளை தமிழ்கீரன் (வயது 2). இந்தச் சண்டைக்குள்ளை எல்லாம் எத்தனையோ தரம் அருந்தப்பிலை தப்பியிருக்கிறம். அவர் எங்களுக்கு என்ன நடந்தாலும் பிள்ளையளுக்கு ஒண்டும் நடக்கக் கூடாது எண்டதிலை கவனமாயிருந்தார். எல்லா ஆபத்துக்களையும் தாண்டி ஓமந்தை முகாமுக்கு வந்தம். முகாமிலை இயக்கத்திலை ஒருநாள் இருந்தால்கூட வந்து பதியுங்கோ எண்டு அறிவிச்சாங்கள். அப்பிடி வந்து பதியிற ஆள்களுக்கு பொது மன்னிப்பு, தொழில்வாய்ப்பு தாறதாவும் சொன்னாங்கள். அதை நம்பி என்ரை அவரும் போய்ப் பேரைப் பதிஞ்சார். ஆனா அறிவிச்ச மாதிரி ஒண்டும் நடக்கேல்லை. அவரோடை சேர்த்துக் கனபேரை வேனிலை ஏத்திக்கொண்டு போட்டாங்கள். அதுக்குப் பிறகு அவரை விர்றாங்கள் இல்லை. அவரைக் கொண்டுபோகேக்கை தமிழ்க்கீரன் 6 மாதக்குழந்தை. இப்ப ரெண்டு வயசாகிட்டுது. நெடுகலும் அப்பாவைப்பற்றித் தான் கேட்டபடி. நான் என்னத்தைச் சொல்லி இந்தப் பச்சைப்பிள்ளையை ஏமாத்த முடியும். ஒவ்வொரு முறையும் இதுமாதிரி விசாரணைக்

ஒளண்யன்

குழுக்களிட்டைப் போகேக்கை ஏன்ரை பிள்ளை இண்டைக்காவது அப்பாவைக் கூட்டிக்கொண்டு வருவீங்களோ எண்டு கேப்பான். நான் ஓம் எண்டு சொல்லிப்போட்டு வருவேன். ஆனாலும் ஒவ்வொருமுறையும் அவன்ரை அப்பாவைக் கூட்டிக்கொண்டு வீட்டை வரமுடியல்லை. இண்டைக்கும் அப்பிடித்தான் கேட்டான். அதுதான் இந்தமுறைக்கும் பிள்ளைக்கு ஏமாத்தத்தைக் கொடுக்காமல் அவனையே கூட்டிக்கொண்டு வந்திட்டன். பிள்ளையைக் கூட்டிக்கொண்டு வந்தாலாவது ஏதாவது நடவடிக்கை எடுப்பாங்கள் எண்டு நினைச்சன். ஆனாலும் வழமை மாதிரி இண்டைக்கும் கூட்டிக்கொண்டு வாறமெண்டு வாயாலை சொல்றாங்களே தவிர வேறொண்டும் செய்ததாகத் தெரியலை.'' என்று தன்கதையைச் சொல்லி முடித்த டயானா தன்னுடைய தந்தையான குணரத்தினம் கிருசா (வயது 21) என்பவரையும் காணாமற் போனாரின் பட்டியலுக்குள் பறிகொடுத்துவிட்டு கணவரினதும் தங்கையினதும் விடுதலைக்காகக் காத்துக்கொண்டே இருக்கிறார். அவர் எமக்குச் சொன்ன கதைகள் எதுவுமே சின்னஞ்சிறு குழந்தையான தமிழ்க்கீரனுக்குப் புரியாததால் ''அம்மா... அப்பா எப்ப வீட்டை வருவார்?'' என்று கேட்டபடி மீண்டும் அழுகையைத் தொடங்கினான். கண்ணீர்த் துளிகள் எங்கும் சிந்தத் தொடங்கின. (கண்ணீர்க்கதைகள் இன்னும் வரும்.)


இந்த மழலையின் வேண்டுதல் எப்போது நிறைவேறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் ஆட்சி மாறாது: பிரதமர் கிலானி நம்பிக்கை

லாகூர், செப். 21

பாகிஸ்தானில் ஆட்சி மாற்றம் ஏற்படாது என்று பிரதமர் யூசுப் ரஸா கிலானி லாகூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

''நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நாடாளுமன்றத்திலும், மக்கள் மத்தியிலும் எங்களுக்குப் பெரும்பான்மை பலம் உள்ளது. ஆட்சி கவிழும் என்று வதந்திகளைப் பரப்பி உங்கள் நேரத்தை வீணடிக்க வேண்டாம்.

பிரதமராக நீடிக்க வேண்டும் என்பதில் எனக்கு விருப்பமில்லை. ஆனால், பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான ஆட்சி முடிவுக்கு வரும் என்று மட்டும் யாரும் கனவு காண வேண்டாம். அது நிச்சயமாக நிறைவேறாது.

நான் பிரதமராகப் பொறுப்பேற்றபோது 3 மாதங்கள்தான் பதவியில் நீடிப்பார் என்று கணித்து கூறினார்கள். அதன்பின் அவ்வப்போது காலஅவகாசத்தை நீடித்தார்கள். அந்தக் கணிப்புகள் அனைத்தும் பொய்யாகி வருகின்றன.

வெள்ள நிவாரணப் பணிகளை விரைவாக மேற்கொண்டு வருகிறோம். நாடு முழுவதும் ஜனநாயகம் தழைத்தோங்க செய்து வருகிறோம். முஷாரப் ஆட்சியில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து நீதிபதிகளையும் விடுதலை செய்துள்ளோம்.

இராணுவத் தளபதி கயானியின் பதவிக் காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடித்துள்ளோம். எங்கள் அரசின் அனைத்து முடிவுகளுக்கும் மக்கள் ஆதரவாக உள்ளனர். 2013 பொதுத்தேர்தல் வரை பாகிஸ்தான் மக்கள் கட்சியே ஆட்சியில் நீடிக்கும்.'' இப்படி பிரதமர் கிலானி தெரிவித்தார்.

வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளில் பாகிஸ்தான் அரசு தோல்வியடைந்து விட்டது என்றும் அதனால் அந்த ஆட்சியை மாற்ற மக்கள் ஓரணியில் திரளவேண்டும் என்றும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், பாகிஸ்தான் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் 'முக்தாஹிதா குவாமி மூவ்மெண்ட்' வெள்ள நிவாரணப் பணிகளில் ஊழல் நடைபெற்று வருகிறது என அதிருப்தி தெரிவித்துள்ளது.

இந் நிலை நீடித்தால் பிரெஞ்சு புரட்சி போல் பாகிஸ்தானிலும் புரட்சி வெடிக்கும் என்று அந்தக் கட்சியின் மூத்த தலைவர் ஹூசைன் எச்சரித்துள்ளார்.

இதனால், பாகிஸ்தானில் ஆட்சி மாற்றம் ஏற்படக்கூடும் என்று பரவலாகப் பேசப்படுகிறது. இதற்குப் பதிலளிக்கும் வகையில், பிரதமர் கிலானி, லாகூர் கூட்டத்தில் பேசினார்.

# ஆப்கானிஸ்தானில் அமெ. சிப்பாய்கள் மூவர் பலி!

காபூல், செப். 21

அமெரிக்க கூட்டுப்படையைச் (நேட்டோ) சேர்ந்த 3 வீரர்கள் ஆப்கானிஸ்தானில் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்நாட்டின் தெற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவெடிப்பில் இரண்டு வீரர்களும், வடக்குப் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஒருவரும் உயிரிழந்தனர் என நேட்டோ அமைப்பு காபூலில் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

அமெரிக்க கூட்டுப் படையைச் சேர்ந்த 1.5 இலட்சம் வீரர்கள் ஆப்கானிஸ்தானில் பணியாற்றி வருகின்றனர். தலிபான்களுக்கு எதிராகப் போரிட்டுவரும் இவர்கள், நாடாளுமன்றத் தேர்தலையொட்டி பெரும் சவால்களைச் சந்தித்து வருகின்றனர். தேர்தல் தொடர்பான தாக்குதல்களில் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

# பக்தாத்தில் இரட்டைக் குண்டுவெடிப்பு: 31 பேர் பலி; 10 பேர் படுகாயம்!

பக்தாத், செப். 21

ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரட்டை கார்க் குண்டு வெடிப்பில் 31 பேர் உயிரிழந்தனர்.

பக்தாத்தின் மேற்குப் பகுதியில் முதல் கார்க் குண்டு வெடித்ததில் 10 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர். 10இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

அடுத்த சில நிமிடங்களில் பக்தாத்தின் வடக்குப் பகுதியில் மற்றொரு கார்க் குண்டு வெடித்தது. இதில் 21 பேர் கொல்லப்பட்டனர். 70இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

புனித ரமழான் மாதத்தையொட்டி அமைதியாக இருந்த பக்தாத்தில் மீண்டும் பயங்கரத் தாக்குதல் நடைபெற்றமை அந்நாட்டு மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவங்களுக்கு இதுவரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஈராக்கில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படைகளை வாபஸ் பெற ஜனாதிபதி பராக் ஒபாமா அண்மையில் உத்தரவிட்டார்.

அதன்படி கடந்த முதலாம் திகதி முதல் தலைநகர் பக்தாத்தின் பாதுகாப்பு ஈராக் இராணுவம், பொலிஸார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பக்தாத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

ஈராக் பாதுகாப்புப் படையினரை குறிவைத்து தீவிரவாத அமைப்புகள் மேலும் பல்வேறு தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளன என அமெரிக்க உளவு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

# பாப்பரசருக்கு எதிராகச் சதி: லண்டனில் கைதான 6 பேர் விடுதலை

லண்டன், செப். 21

பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினர் என லண்டனில் கைதுசெய்யப்பட்ட 6 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸார் ஞாயிற்றுக் கிழமை தெரிவித்துள்ளனர்.

கத்தோலிக்க கிறிஸ்தவ மதத் தலைவரான பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பர் பிரிட்டனில் ஆன்மிக பயணம் மேற்கொண்டிருந்தார். இரு நாட்களுக்கு முன்னர் அவர் தலைநகர் லண்டனில் முகாமிட்டிருந்தார்.


அப்போது, அவரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினர் என துப்புரவுத் தொழிலாளர்கள் 6 பேர் கடந்த 17ஆம் திகதி லண்டனில் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் அல்பேனியாவைச் சேர்ந்த இஸ்லாமிய அடிப்படைவாதிகள் என்று முதலில் கூறப்பட்டது. விசாரணையில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்படாததால் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தேநீர்க் கடையில் பேசிக் கொண்டிருந்தபோது, பாப்பரசர் ரொக்கெட் குண்டுத் தாக்குதலில் உயிரிழப்பார் என்று அவர்கள் கற்பனையாகப் பேசிக் கொண்டிருந்தனர் எனக் கூறப்படுகிறது.

அவர்களின் உரையாடலைக் கேட்ட சக தொழிலாளர்கள் பொலிஸாரிடம் கூறினர். அதன்பேரில் 6 பேரும் கைதுசெய்யப்பட்டனர் என லண்டன் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே பாப்பரசர் தனது லண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு வத்திகானுக்கு ஞாயிற்றுக்கிழமை திரும்பினார். அவரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினர் எனக் கூறப்படும் விவகாரத்தை பெரிதாக அவர் எடுத்துக்கொள்ளவில்லை என்று வத்திகான் தெரிவித்துள்ளது.



4 நாள் பயணமாக பிரிட்டன் வந்திருந்த பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பர் (நடுவில்) வத்திகான் திரும்பினார். அவரை பேர்மிங்ஹாம் விமானநிலையத்தில் பிரதமர் டேவிட் கேமரூன் (வலது) வழியனுப்பி வைக்கிறார்.

உலக அரங்கில்

# ஆப்கானிஸ்தான் தேர்தல் முடிவுகள் நாளை அறிவிப்பு

காபூல், செப். 21

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் நாளை புதன்கிழமை (செப்ரெம்பர் 22) வெளியாகும் என்று தெரிகிறது.

தேர்தலின் இறுதி முடிவும், வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் ஒக்டோபர் 31ஆம் திகதிவரை வெளியிடப்படும்.

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்ற கீழவைக்கான தேர்தல் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் மொத்தமுள்ள 249 இடங்களுக்கு 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் போட்டியிட்டனர்.

தேர்தலில் 40 சதவீத வாக்குகள் பதிவாயின. சில இடங்களில் வாக்குப் பதிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வாக்குப் பதிவு முடிந்த இடங்களில் சிலவற்றில் இப்போது வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது.

தேர்தலை சீர்குலைக்க குண்டு வெடிப்பு, ரொக்கெட் தாக்குதல் ஆகிய பயங்கரவாதத் தாக்குதல்களும் நடைபெற்றன. இவற்றில் 6 பாதுகாப்புப் படையினரும், பொதுமக்களில் 9 பேரும் உயிரிழந்தனர்.

பாதுகாப்புப் படையினரின் பதிலடியில் 89 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

# மெக்ஸிக்கோவில் 9 பொலிஸார் மர்மக் கும்பலால் கடத்தல்

அகாபுல்கோ, செப்.21

மெக்ஸிக்கோவில் பொலிஸார் ஒன்பது பேர் மர்மக் கும்பலால் கடத்தப்பட்டனர். அவர்களில் இரண்டு பேர் கொலை செய்யப்பட்டனர்.

மெக்ஸிக்கோவின் தென்பகுதியிலுள்ள குவாரேரோ மாகாணம், போதை மருந்து கடத்தல் கும்பல்கள் ஆதிக்கம் நிறைந்த பகுதி. அங்கு நடந்த கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த, ஒன்பது பேரைக்கொண்ட பொலிஸ் படை சென்றது.

இந்நிலையில், அங்கு சென்ற பொலிஸ் படையினர் மர்மக் கும்பலால் கடத்தப்பட்டனர்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி பெர்னாண்டோ லேய்வா குறிப்பிடுகையில்,

''குவாரேரோ மாகாணத்தின் வட பகுதியில் நடந்த கொலை குறித்து விசாரித்து, கொலை செய்யப்பட்டவரை அடையாளம் காண்பதற்காக கொமாண்டோ படைச் சிப்பாய் ஒருவர் உட்பட ஒன்பது பொலிஸார் சென்றனர்.

ஆனால், அங்கு சென்றது முதல் அவர்களிடமிருந்து எந்தத் தொடர்பும் இல்லை. அவர்களை மர்மக் கும்பல் துப்பாக்கிமுனையில் கடத்திச் சென்றிருக்கலாம் என கருதுகிறோம்.

இந்நிலையில், கடத்தப்பட்ட பொலிஸாரில் இரண்டு பேர், ரிவிலாடோ என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டு கிடந்தனர். கடத்திச் செல்லப்பட்டவர்களை மீட்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்'' எனத் தெரிவித்துள்ளார்.



நைஜீரியாவின் ஜனாதிபதித் தேர்தல் 2011ஆம் ஆண்டு நடைபெறுகிறது. ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட குட்லக் ஜோனாதன் தனது ஆதரவாளர்களுடன் பொதுமக்களைச் சந்திக்கிறார்.

# சீனாவில் பூகம்பம்

சீனாவின் சில பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பூகம்பம் ஏற்பட்டது. இதில் உயிரிழப்போ அல்லது சேதமோ ஏற்படவில்லை.

தென்மேற்கு சீனாவிலுள்ள கிஷோ மாகாணத்தின் லுவோடியான் மாவட்டத்துக்கும், தென் சீனாவிலுள்ள குவாங்ஸி ஷுவாங் தன்னாட்சிப் பிராந்தியத்தின் டியான் மாவட்டத்துக்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதியில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டது. இதன் அளவு 4.4 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

லுவோடியான் மாவட்டத்தில், பூகம்பம் காரணமாக அந்தப் பகுதியே ஆட்டம் கண்டதுபோல் உணரப்பட்டது. பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் வாழும் சுமார் 133 குடும்பங்களைச் சேர்ந்த 603 பேரை பத்திரமாக மீட்க மீட்புக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பூகம்பம் காரணமாக உயிரிழப்போ சேதமோ ஏற்படவில்லை என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன என ஜிங்குவா செய்தி ஏஜென்ஸி தெரிவித்துள்ளது.

முன்னர் யுன்னான் தலைநகர் குன்மிங் நகரிலும் லேசான பூகம்பம் ஏற்பட்டது. இதன் அளவு 3.1 புள்ளிகள் என பதிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷர் - ஈ-தொய்பா அமைப்பின் போராளிகள் 200 பேருக்கு அதிகமானோர் கொழும்பில்

## அமெரிக்க புலனாய்வுத்துறை அறிக்கை

கொழும்பு, செப். 21

பாகிஸ்தானின் லக்ஷர்-ஈ-தொய்பா அமைப்பின் 200இற்கும் அதிகமான போராளிகள் இலங்கையில் இருக்கின்றனர் என அமெரிக்க புலனாய்வுத்துறை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் இலங்கை அரசுக்கு அமெரிக்கா எச்சரித்துள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவுக்கும் இது தொடர்பில் அமெரிக்கா எச்சரித்துள்ளது என எம்எஸ்என் செய்தி இணையம், தகவல் வெளியிட்டுள்ளது.

லக்ஷர்-ஈ-தொய்பா அமைப்பு இந்தியாவுக்குள் நுழைவதற்கு இலங்கையை பயன்படுத்துவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கையில் பயிற்சி பெற்றார் எனக் கூறப்பட்ட அந்த அமைப்பின் போராளி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, ஏற்கனவே இங்கு வெளிநாட்டுப் போராளிகள் அமைப்பு ஒன்றும் இல்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தமையை மேற்கோள்காட்டியுள்ளார்.

இவ்வாறான எச்சரிக்கை அறிக்கை ஒன்றும் தமக்கு கிடைத்திருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

இந்திய மாநிலமான மஹாராஷ்டிராவில் உள்ள ஜேர்மன் பேக்கரி ஒன்றில் சில மாதங்களுக்கு முன்பு இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுடன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குத் தொடர்பில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

மஹாராஷ்டிரா பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினர், 'த ஹிந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் லக்ஷர்-ஈ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த பாய்க் என்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பில் பயிற்சி பெற்றார் என முன்னர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும், இதனை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்திருந்தார்.

இந்த நிலையில் பாய்க்கிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்கள் கொழும்பில் பயிற்சி பெற்றிருப்பினும் உள்நாட்டு அமைப்பு எதுவும் அதில் சம்பந்தப்பட்டு இருக்கவில்லை என 'த ஹிந்து' தெரிவித்துள்ளது.

லக்ஷர்-ஈ-தொய்பா உறுப்பினர்களின் சந்திப்பு இடமாக மாத்திரமே கொழும்பு இருந்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-சி)

# உப்புவெளி கிணற்றில் எலும்புக் கூடுகள் மீட்பு

கொழும்பு, செப்.21

திருகோணமலை உப்புவெளி, சும்புலிபுரம் பகுதியில் உள்ள கிணறொன்றில் இருந்து ஞாயிற்றுக்கிழமை எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி நேற்றுக் கூறினார்.

ஞாயிறு மாலை உப்புவெளி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமையவே இவை கண்டெடுக்கப்பட்டன என்று அவர் மேலும் கூறினார்.

இந்த எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு அருகில் மயானம் ஒன்று உள்ளது என்றும், கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் அநுராதபுரம் வைத்தியபீடத்திற்கு விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் பிரசாந்த ஜயக்கொடி சொன்னார்.

# தனியார் பஸ் உரிமையாளர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு

கொழும்பு, செப்.21

பஸ் கட்டணங்களை அதிகரிப்பதில்லை என்ற போக்குவரத்து அமைச்சின் தீர்மானத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்தன கூறியவை வருமாறு:-

சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பஸ்களுக்குப் போதுமான நேர அட்டவணைகளைப் போக்குவரத்து அமைச்சு இன்னும் வழங்கவில்லை. இதை நாம் தொடர்ச்சியாக அமைச்சிடம் கேட்டுக் கொண்டு வருகிறோம். போதுமான நேர அட்டவணைகள் வழங்கப்படாததால் வீதிகளில் வாகன நெரிசல்கள் ஏற்படுகின்றன. இதனால் எரிபொருள் விரயம் அதிகரிக்கின்றது.

இதன் காரணமாகவே நாம் பஸ் கட்டண அதிகரிப்புக்கான அனுமதியை போக்குவரத்து அமைச்சிடம் கோருகின்றோம்.

ஆனால், அமைச்சு கட்டண அதிகரிப்பை வழங்குவதில்லை என்று தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்துக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம். - என்றார். (ஒ-சி)

# ஆசிரியர்கள் சுகவீனப் போராட்டம் சம்மாந்துறையில் பாடசாலைகள் பாதிப்பு

## நுழைவாயில் கதவு உடைக்கப்பட்டு மாணவிகள் அனுமதி

வீரமுனை, செப்.21

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் முறையற்ற விதத்தில் செயற்படுகிறார் என்று தெரிவித்து சம்மாந்துறை முஸ்லிம் தேசியப் பாடசாலை மற்றும் சம்மாந்துறை அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் நேற்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



114 ஆசிரியர்களைக் கொண்ட சம்மாந்துறை தேசிய பாடசாலையில் 25 ஆசிரியர்கள் மாத்திரமே நேற்றைய தினம் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

இதேவேளை, அல் - மர்ஜான் பாடசாலை நுழைவாயில் வீதி மூடப்பட்டிருந்ததால் பாடசாலை மாணவிகள் காலை 7மணிமுதல் 7.45 மணிவரை வீதியில் வெய்யிலில் காத்துக்கிடந்தனர்.

இதனால் இந்த விடயத்தில் மாணவிகளின் பெற்றோர்களும், பொதுமக்களும் தலையிட்டனர். இவர்களின் தலையீட்டால் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஊடாகப் பொலிஸார் முன்னிலையில் நுழைவாயில் கதவுகள் உடைக்கப்பட்டு மாணவிகள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் காலை 8.30 மணிக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் இந்தப் பாடசாலைக்கு விஜயம் செய்து பெற்றோர்களையும் பொதுமக்களையும் சந்தித்து உரையாடினார்.

இருப்பினும், இந்தப் பாடசாலையில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

இப்பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வு கூடம், வகுப்பறைகள், கணினிஅறை, பிரார்த்தனை மண்டபம், பல் ஊடகக் கட்டடம், செயற்பாட்டறை, காரியாலயக் கட்டடத் தொகுதி மற்றும் ஆசிரியர் ஓய்வறை போன்றவை மூடியே கிடந்தன.

மேற்படி இரண்டு பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் மேற்கொண்ட சுகவீனப் போராட்டம் காரணமாக இரண்டு பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிப்படைந்தன. (ஒ-சி)

# யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி ஐ.நாவில் ஜனாதிபதி விளக்குவார்

கொழும்பு, செப்.21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சென்றுள்ள தூதுக்குழுவினர் யுத்தத்தின் பின்னர் இலங்கையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஐ.நா.வருடாந்த மாநாட்டில் சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்துவர் என ஜனாதிபதி செயலக ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''உலகின் மிகக் கொடூரமான பயங்கரவாதத்தை ஒழித்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா. மாநாட்டில் முதன்முறையாகக் கலந்துகொள்கின்றார். ஜனாதிபதி எதிர்வரும் 23ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை வருடாந்த மாநாட்டில் உரையாற்றுகின்றார்.

இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் ஜனாதிபதி தலைமையிலான தூதுக்குழுவினர் நேற்று அதிகாலை 3.00மணியளவில் நியூயோர்க் சென்றடைந்தனர்'' எனவும் அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# விக்ரோறியா மாணவர் கல்விச் சுற்றுலா

சுழிபுரம், செப். 21

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு சனிக்கிழமை புறப்பட்டுச் சென்றுள்ளனர். களுத்துறையில் நடை பெறவுள்ள ஒரு கிரிக்கெட் போட்டியிலும் இவர்கள்பங்குபற்றவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-28)

# ஹிட்லர், முசோலினி, இடி அமீன் வரிசையில் ராஜபக்ஷ அரசு

## ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் கடும் கண்டனம்

கொழும்பு, செப்.21

ஜேர்மனியில் ஹிட்லரும், இத்தாலியில் முசோலினியும், உகண்டாவில் இடி அமீனும் இராணுவ நீதிமன்றங்களை அமைத்து தேவையற்ற வகையில் பலருக்குத் தண்டனை வழங்கினார்கள். மஹிந்த ராஜபக்ஷ அரசும் அதே வழியைப் பின்பற்றித் தண்டனை வழங்க முயற்சிக்கிறது.

மேற்கண்டவாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. ரில்வின் சில்வா தொடர்ந்து கூறியவை வருமாறு-

சரத் பொன்சேகா எம்.பி அரசியலில் நுழைந்ததால் பழிவாங்கும் நோக்கிலேயே அரசு முறையற்ற இராணுவ நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்க நடவடிக்கை மேற்கொண்டது. இராணுவ நீதிமன்றத் தீர்ப்பை ஜே.வி.பி. நிராகரிக்கின்றது. பொது மக்களும் இதை நிராகரிக்க வேண்டும்.

சரத் பொன்சேகா அரசியலில் நுழைய முடிவு செய்ததுமே அரசு அவருக்கு பல பதவிகளை வழங்க முன்வந்தது. அமைச்சு செயலாளர் பதவி, அதை விரும்பா விட்டால் வெளிநாட்டுத் தூதுவர் பதவியை வழங்க முன்வந்தது. இருந்தும் அவர் அதை ஏற்கவில்லை. இதை அடுத்தே அரசு பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்தது.

மாவிலாறு மோசடியில் ஈடுபட்டவர் இன்று அமைச்சர் பதவியை அலங்கரிக்கின்றார். 'ஹைகோப்' ஊழலை விட பல மடங்கு, அதாவது 1,500 கோடி ரூபா கோப் அறிக்கையிலுள்ள ஊழல்களில் சம்பந்தப்பட்டவர்களும் இன்று அமைச்சுப் பதவிகளை அலங்கரிக்கின்றனர். அது மட்டுமின்றி, இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு காரணமாகவிருந்த கே.பி., கருணா போன்றோருக்கும் அரசு சுகபோகங்களை அனுபவிக்க வசதி செய்து கொடுத்துள்ளது. ஆனால் பயங்கரவாதத்தைப் பூண்டோடு ஒழித்த சரத் பொன்சேகா இன்று சிறைவாசம் அனுபவிக்கின்றார்.

அதிகாரப் போதையுடன் அரசு மக்களின் அதிருப்தியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றது. அரசு பொன்சேகாவிற்கு வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மக்கள் அணி திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும். ஜே.வி.பி. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. -இவ்வாறு அவர் தெரிவித்தார்.(அ-சி)

# மானிய உரம்பெற விண்ணப்பிக்கலாம்

கொழும்புத்துறை, செப். 21

அரியாலை பிரதேச விவசாயிகள் நெற்பயிர்ச்செய்கைக்கான உரத்தை மானிய அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி விண்ணப்பங்களை அரியாலை கமநல அபிவிருத்திச் சங்கத்தில் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு விவசாயிகளிடம் கோரப்பட்டுள்ளது. (த-153)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாநகர சபையின் உறுப்பினரான நடராஜா ராஜதேவன் சமாதான நீதிவா னாக யாழ். மாவட்ட நீதிபதி அ. பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

- யாழ்பாடி விருந்தினர் விடுதியில் முகாமையாளராகப் பணியாற்றும் இவர் 'ஏ-பவர்' நிறுவனத்தில் முன்னர் முகாமையாளராகப் பணியாற்றியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய திருப்பணிச்சபைத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்கு முன்னர் அகதி மக்கள் மீள்குடியேற்றம்: அரசு அறிவிப்பு

கொழும்பு, செப். 21

பருவமழை ஆரம்பப்பிதற்கு முன்னர் இடம்பெயர்ந்த அனைத்து மக்களையும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது.

இதன்மூலம் வடபகுதியின் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தமுடியுமென மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்ணாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களின் எண்ணிக்கை 25 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றியவுடன் தற்போது தற்காலிக முகாம்களில் இருக்கும் மக்களைஅவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட மோதல் நடைபெற்ற வெள்ளமுள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு மற்றும் புது மாத்தளன் ஆகிய பிரதேச மக்களையே மீள்குடியேற்றவேண்டியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஆயிரத்திற்கும் அதிகமான படையினரும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வடபகுதியில் நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## முன்னாள் புலி உறுப்பினர்களைப் பார்வையிட கூட்டமைப்பை ஒருபோதும் அனுமதிக்ககூடாது

### கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 21

புனர்வாழ்வளிக்கப்பட்டுவரும் முன்னாள் போராளிகளை பார்வையிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஒருபோதும் அனுமதி அளிக்கக்கூடாது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வெலிகந்தை புனர்வாழ்வு முகாமிலுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று நேரில் சென்று சந்தித்துள்ளார். அத்துடன் அவர்களுக்குத் தேவையான தொழிற்பயிற்சி உபகரணங்களை வழங்கினார்.

அவரின் இந்தச் சந்திப்புத் தொடர்பாக 'பி.பி.ஸி.'க்கு அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புனர்வாழ்வு நிலையங்களில் தமிழ் இளைஞர்கள் சிறையில் இருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம். இதனாலேயே இவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்குள் அனுமதிக்கக்கூடாது - என்றார். (சி)

## ஆஸியில் அகதி அந்தஸ்து மறுப்பு: ஒன்பது ஈழத்தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப். 21

ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் 9 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தடுப்பு முகாமின் கூரையில் ஏறி நின்று நேற்று தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களுடன் ஆப்கான் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். நாடு கடத்தும் தீர்மானத்தை ஆஸ்திரேலிய அரசு மாற்றிக்கொள்ளாவிட்டால் உயிரை மாய்த்துக்கொள்வோம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

பிஜி நாட்டவர் ஒருவர் நேற்றுமுன்தினம் அதிகாலை கூரையில் இருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

போராட்டம் தொடரும் என்று இவர்கள் அறிவித்துள்ளார்கள். இவர்களை கீழே இறக்கும் முயற்சியில் பொலிஸாரும், சிறைச்சாலை அதிகாரிகளும் பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுடன் பேச்சு நடத்த இலங்கையர் ஒருவர் ஆஸி. அதிகாரிகளால் கூரைக்கு தூது அனுப்பப்பட்டுள்ளார். (சி)

## மாந்தை எள்ளுப்பிட்டி கிராம மக்கள் 20 வருடங்களின் பின் மீள்குடியேற்றம்

கொழும்பு, செப். 21

20 வருடங்களின் பின்னர் மாந்தை எள்ளுப்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

மன்னார் பகுதியில் உள்ள உறவினர்களின் வீடுகளில் வாழ்ந்து வந்த 52 குடும்பங்களைச் சேர்ந்த 157 பேர் இவ்வாறு முதற்கட்டமாக மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்றுக் காலை 9 மணியளவில் இம் மக்கள் வரவழைக்கப்பட்டு 2 தனியார் பஸ்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள பல அரசசார்பற்ற அமைப்புக்கள் முன்வந்துள்ளன.

இந்நிலையில் மன்னாரிற்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோவை மன்னார் பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டதிற்கு இணங்க எள்ளுப்பிட்டி கிராமத்திற்கு சென்ற அமைச்சர் அம்மக்களுடன் கலந்துரையாடியதோடு, ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 8 சிமெந்து மூடைகளும் மற்றும் 20 கூரைத்தகடுகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் எதிர்வரும் காலங்களில் குறித்த கிராமத்தை புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தார்.

## பொன்சேகாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகல் மாவட்ட முன்னாள் எம்.பியான அமரா பியசீலி ரத்னாயக்கவின் 33 ஆண்டுகால அரசியல் வாழ்வைப் பாராட்டும் முகமாக வாரியபொலவில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராணுவ நீதிமன்றத் தீர்ப்பை அமுல் படுத்தினால் அது ஜனநாயக தேசிய முன்னணித் தலைவரான சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாக அமையும்என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியாக நடைபெறும் இந்நிகழ் வுக்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தலைமை வகிப்பார் எனவும் ஆணையாளர் கூறினார்.

அமைச்சர் டியூ குணசேகர தலைமையில் அண்மையில் வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது, அமைச்சரால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கமையவே இவர்கள் 30ஆம் திகதி தமது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். பெண்கள், அங்கவீனமானோர், சுகயீனமுற்றோர் மற்றும் முழுமையாகப் புனர்வாழ்வு பெற்று வேலைசெய்யத் தகுதி பெற்றோர் ஆகியோரே இம்முறை விடுவிக்கப்படவுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

கடந்த மாதம் புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து 500க்கும் மேற்பட்டோர் தமது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**போட்டிப் பரீட்சை வகுப்பு**

எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெற உள்ள அழகியல் பட்டதாரிக்கான போட்டிப் பரீட்சை வகுப்பு

ஆரம்பம் : 21.09.2010 (இன்று)

செவ்வாய் 3 p.m. - 5.30 p.m.

P.கமல்தாசன்

**நாவலர்** ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## அரசு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வை ஒருபுறமாகவும் அபிவிருத்தி, மீள்குடியமர்வு, புனர்வாழ்வு ஆகியனவற்றை இன்னொருபுறமாக பேசி ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ள அரசாங்கமும் தமிழ்தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட முடிவு எட்டப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மாவை. சேனாதிராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு காண்பதற்கான குழுவில் இடம்பெறும் அமைச்சர்களை ஜனாதிபதி நியமித்துவிட்டார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடுதிரும்பியதும் இக் குழுவில் இடம்பெறும் எமது தரப்பு உறுப்பினர்களின் விவரங்களை சமர்ப்பிக்கவிருக்கிறோம் -

அபிவிருத்தி, மீள்குடியமர்வு, புனர்வாழ்வு ஆகியன தொடர்பான குழுவில் இடம்பெற உறுப்பினர்களின் விவரங்களை நாம் சமர்ப்பித்துவிட்டோம் அரசதரப்பு தனது பக்கத்து உறுப்பினர்களின் விவரத்தை இன்னமும் வெளியிட வில்லை. அபிவிருத்தி மற்றும் துறைகள் சார்ந்த குழுவுக்கு எம்மால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் விவரம் ஜனாதிபதியின் வழிகாட்டலில் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் எமக்கு அறிவித்துள்ளார் - என்றார் மாவை சேனாதிராசா. எனினும் கூட்டமைப்புசார்பில் நியமிக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார். (அ-ஐ)

## மயானபூமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமோ அல்லது வேறு விதமான தகவல் கள் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை என்று அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

கடந்த வருடம் மே மாதத்தில் - இறுதி மோதல் நடைபெற்ற பகுதி ஒரு குறுகிய நிலப்பரப்பில் மக்கள் சிக்குண்டு கொடுமைகளுக்கும் பேரனர்த்தத்துக்கும் - மத்தியில் பெரும் சித்திரவதைகளுக்கு ஆளாகி இருப்பர் என்பதை தம்மால் உணரமுடிகிறது என்று ஆணைக்குழுவைச் சேர்ந்த ஒருவர் ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு இருள் சூழும் வேளை அங்கிருந்து புறப்பட்டு வவுனியாவை இரவு சுமார் 9 மணியளவில் சென்றடைந்தனர் ஆணைக் குழு உறுப்பினர்கள். (ஒ-எ)

## வடமாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு-செலவுத் திட்டத்துக்குப் பின்னர் வெளியிடப்படுமெனவும் அவ்வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் தினத்தை அறிவிப்பார்.

அத்துடன் அரசு வட மாகாண சபைத் தேர்தலுடன் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. வடக்கில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் வட மாகாண அபிவிருத்திக்கு வட மாகாண சபையின் பங்களிப்பு பேருதவியாக இருக்குமெனவும் அரசு நம்புகின்றது.

வட மாகாண சபைத் தேர்தலில் ஐ.ம.சு. கூட்டமைப்பும் போட்டியிடவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி-22)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் எண்ணிக்கையான மக்கள் காலையிலேயே செயலகத்துக்கு வந்துவிட்டனர்.

தாமதமாக அமர்வு ஆரம்பமானதால் நால்வரின் வாய்மூலச் சாட்சியங்களே பதிவு செய்யப்பட்டன. ஏனையோரிடம் மகஜர்கள் பெறப்பட்டன.

மூவரின் சாட்சியங்கள் பகிரங்கமாகப் பதியப்பட்டன. முஸ்லிம் பெண் ஒருவர் இரகசிய சாட்சியம் அளித்தார்.

தமது உடன்பிறப்புக்களை மீட்டுத்தருமாறு கோரியே பெரும்பாலானோர் சாட்சியம் அளித்தனர். (ஒ-ஐ-எ)

## வெள்ளைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தின்சிங்கம் ஈஸ்வரி தெரிவித்தார்.

அவர் அங்கு சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

தரைவழியாகத் தப்பிச் செல்லமுடியாது. ஏனென்றால், தப்பிச் செல்பவர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்துவார்கள். அதேசமயம் படையினரும் விடமாட்டார்கள். அவர்களும் தாக்குதல் நடத்துவார்கள். எவ்வேளையிலும் ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள், வான்தாக்குதல்கள் நடைபெற்று வந்ததால் நாங்கள் கடல்வழியாகத் தப்பிச்செல்ல முடிவுசெய்தோம்.

அதைத் தொடர்ந்தே நாங்கள் வெள்ளைக் கொடியுடன் படகில் புறப்பட்டோம். நாம் படகில் புறப்படுவதற்கு அதிகாலை 3 மணியைத் தெரிவுசெய்திருந்தோம். விடுதலைப்புலிகளுக்குத் தெரியாமல் தப்பிச்செல்ல வாய்ப்பான நேரம் அதுதான். கடலில் தப்பிச்செல்ல முயல்பவர்கள் அநேகமாக இந்த நேரத்திலேயே புறப்படுவார்கள்.நாங்களும் அந்த நேரத்தையே ஒதுக்கிப் புறப்பட்டோம்.

அப்படிப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தபோதே எம்மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். அந்தக் காலகட்டத்தில் கடற்புலிகள் அநேகமாக வலுவிழந்துவிட்டனர். கடலில் அவர்களின் ரோந்து ஏதுமில்லை என்பது தெரியும். அதனாலேயே கடற்படையினர்தான் சுட்டவர்கள் என்று கூறுகிறேன்.

தாக்குதலில் எட்டுப் பேர் மடிந்த நிலையில் 12 பேர் தப்பிப் பிழைத்தோம். உயிரிழந்த சகோதரியின் கணவரும் இச்சம்பவத்தின்போது உயிர் தப்பினார். எனினும் அவரைக் கடற்படையினர் கைது செய்து புல்மோட்டைக்கு அழைத்துச் சென்றனர். அவரைப் பற்றி இதுவரை தகவல் எதுவும் இல்லை. அவர் உயிருடன் இருக்கிறாரா என்பதும் தெரியாது.- என்றார். (ஒ)

## அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் மணல் விநியோகத்தில் ஈடுபட்டு தொழில்ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள வாகன உரிமையாளர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்ப முடிவுசெய்துள்ளனர். அந்த மகஜர் தயாரிப்பதற்கான தகவல்களைச் சேகரிப்பதற்காகப் பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு :- கே.என். சச்சிதானந்தன்,

இராகுலசூரியன்ஸ், சந்திர சபா,

தம்பசெட்டி வீதி, பருத்தித்துறை. தொ.இல. 0213214922

**Diploma Courses... Ms Office**
Fast Track 01 Month
Unlimited Practicals
Multimedia
Accounting
90% Schol.
Closing Date 22.09.2010
AutoCAD-2&3D
Web Development
Rs.800 Upwards
கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் Free
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction
Dip. in English
ICDL DTP

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட[illegible]வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org